உ

கணபதி துணை

மாணிக்கவாசகரென்றுவழங்குகின்ற

திருவாதவூரர்புராணம்.

இஃது

கடவுண்மாமுனிவர்

அருளிச்செய்த-மூலமும்

காஞ்சீபுரம்

குமாரசுவாமிதேசி

செய்த-உரையும்

திருவாரூர்

தியாகராயசுவாமிகளா

பார்வையிடப்பட்டு.

72937

காஞ்சீபுரம்,

வீராசாமிமுதலியார் குமாரர்

வேங்கடமுதலியாரது

அச்சுக்கூடத்திற்

உ

சிவமயம்.

திருவாதவூரர்புராணம்.

மூலமும் - உரையும்.

காப்பு.

விநாயகர்துதி.

பவளமால்வரையினிலவெறிப்பதுபோற்
பரந்தநீற்றுருப்பசுங்கொடியிற்
றிவளமர்ந்துடனின்றாடியபரமன்
சிறுவனைப்பாரதப்பெரும்போர
தவளமாமருப்பொன்றொடித்தொருகரத்
றரித்துயர்கிரிப்புறத்தெழுதுங்
கவளமாகளிற்றின்றிருமுகம்படைத்த
கடவுளைநினைந்துகைதொழுவாம்.

... LIBRARY MADRAS-90

இதன்பொருள்,

பெரிய பவள மலையினிடத்திலே சந்திரிகை வீசுவதுபோல்சிவந்தனது திருமேனியிற் பரவப்பூசிய திருநீற்றினழகானது உமாதேவியினது பசியதிருமேனியிலே பிரதிபலிக்கும்படி அந்தேவியுடனின்று திருநடஞ்செய்தருளிய பரமசிவனுடைய புத்திரனை பெரியபாரதயுத்தத்தைக் கனத வெண்மைபொருந்திய பெரிய கொம்பொன்றை யொடித்து ஒருகையி லெழுத்தாணியாக வைத்துக்கொண்டு உயர்ந்த

மகாமேருகிரியை ஏடாகக்கொண்டு அதனிடத்தெழுதியருளுங் கவளத்தைக்கொள்ளுகின்ற பெரியயானையினது திருமுகம்படைத்தவிநாயகக்கடவுளை மனதிலேதியானித்து இரண்டுகைகளையுங் குவித்து வணங்குவாம் என்றவாறு,

சபாபதிஸ்துதி,

இந்தருமடந்தையொ டிசைந்துயிருடம்புபோல்
விந்தபலகங்களின்விரிந்தொளிவிளங்குவார்
மத்தகமொடுந்துமிவளங்கெழுமுழங்கவே
சிதம்பரநடம்பயில செழுங்கழலிறைஞ்சுவாம்,

இ-ள். இதத்தைத்தருகின்ற சிவகாமியம்மையுடனே பொருந்தி உயிருமுடம்பும்போலப் பலவகைப்பட்ட எல்லாவுலகங்களிலேயும் நிறைந்து சோதிசொரூபராய் விளங்குஞ் சபாநாயகர் துமிதங்கவாத்தியத்துடனே பேரிகையும் வளம்பொருந்தமுழங்கச் சிதம்பரத்திலே நடனஞ்செய்யாநின்ற செழுமைபொருந்திய திருவடிகளை வணங்குவாமென்றவாறு,

சிவகாமிஸ்துதி

ஆடகசிதம்பரவணங்குமையணங்கிலா
நாடகனனந்தசுகநன்குபுனைபங்கினு
ளேடகமணம்பொருவவெங்களுமிசைந்துளாள்
பாடகமிலங்குசிறுபங்கயமிறைஞ்சுவாம்

இ-ள். பொன்னம்பலத்தினிடத்தே தங்கிய அழகியஉமாதேவிவருத்தமில்லா[illegible]ஞ்செய்தருளுகின்ற சபாபதியினது அளவற்றசுகத்தை[illegible]ப்பெற்றுக்கொண்டு அவருடையபாகத்தில்வாழ்பவளும் [illegible]யுடைய பூ[illegible]த்திருக்கு மணம்போலச்சராசரங்களைத் தி[illegible]ந்திருக்கின்[illegible] இப்படிப்பட்டசிவகாமியம்மையினது பாடகங்கள் விளங்குகின்[illegible]ய தாமரைமலர்போன்ற பாதங்களை வணங்குவாமென்றவாறு,

[illegible]ப்பிரமணியஸ்துதி,

திங்கம[illegible] தும்பிமுகனெம்பிசீர்
கங்கு[illegible]ஞ்சிறுசதங்கைகள்புலம்பவே
மங்கையுமைகண்குளிரவந் துலவுகின்றதா
ளங்கைமலர்கொண்டுமிகுமன்புடனிறைஞ்சுவாம்,

இ-ள், பரிசுத்தமாகிய மதசலத்தைப்பொழிகின்ற மத்தகத்தையுடைய உயர்வாகியயானைமுக விநாயகருக்கிளைய முருகக்கடவுளினது சிறப்புத்தங்கிய பொற்சிலம்புகளும் சிறியசதங்கைகளும் [illegible]த்திகம்மங்கையாகிய உமாதேவியினது கண்கள்குளிரும்படிவந்து உலாவாநின்ற பாதங்களை அழகிய கையினிடத்திலே மலர்களைக்கொண்டு அருச்சித்து மிகுந்த அன்புடனே வணங்குவாமென்றவாறு

மந்திரிச்சருக்கம்.

(இ-ள்.) நகரங்களை மிகவுஞ்சிறப்பாக அலங்காரஞ்செய்து அரியபொன்னும்நவரத்நமும் குவித்துவைத்து, நன்மையுடனொருசுபதினத்திலே, தவமணமுந் திருநீறுமணமுந் தவறில்லாதசிவமணமும் பெறும்படிக்கு ஒருபார்த்திபாயா முன்னிலையிலே, கல்வியென்னு மங்கையைமாணிக்கவாசகருக்கு மணஞ்செய்வித்தார்களென்றவாறு. ()

உபநயனம்.

இதுநான்மற்றல்லது நூலில்லையெனுமறுசமய
விதநூலுந்தலநூலுமவிரிந்தபுராதனநூலும்
பொதுநூலென்றுலகனைத்துமபுகழ்மறைநூலுஞ்சைவ
முதுநூலுந்தரிப்பார்க்குமுந்நூலுந்தரித்தார்கள்.

(இ-ள்.) மெய்ம்மையுள்ள நூலிதுவேயல்லாமல், இப்படிப்பட்டநூல்வேறேயில்லையென்று வாதிக்குமசட்சமயிகளநூலகளும் ஸ்தலபுராணநூலகளும விரிந்துவிளங்குகின்ற பதினெண்புராணநூல்களும் உலகமெல்லாம பொதுநூலென்று புகழ்கின்ற நாலுவேதநூல்களும் பழமையாகிய சிவாகமநூல்களுந தரிப்பவராகிய மாணிக்கவாசகருககுமுப்புரிநூலுந் தரித்தார்களென்றவாறு. (௰௧)

ஸ்ரீகலையுஞ்செழுநீருமதிக்கலையு நிலைகுமவ
ரகக்லையுந்தோளர்புலியதட்கலையாநல்லருளா
லொக்கலையுமபிறக்கலையுமொழிந்திடுமாகமகலையு
மெக்கலையுங்கற்றுணர்ந்தாரீரெட்டாண்டெல்லையினில்

(இ-ள்,) இருக்கின்ற அலைகின்ற செழுமைபொருந்தியகங்காநதியும் மூன்றாமபிறையுந்தரித்தவராயும எலும்பணியலைகின்ற தோளையுடையராயும புலித்தோலாகிய வுடையையணிந்தவராயு மிருக்கின்றபரமசிவனுடையநல்லகிருபையினாலே தேகபந்துக்களையும் பிறவித்துன்பத்தையும்நீக்குகின்ற சிவாகமங்களும மற்றெந்தநூல்களும் பதினாறுவயதளவிலே கற்றறிந்தார் மாணிக்கவாசகரென்றவாறு, (௰௨)

உழைக்கரசனுக்கன்பாகியுண்மையறிந்துலகமெலாம்
பிழைக்கவருட்கவிபாடுமபெரியவாதவூரர்செயலெல்லாந்
தழைத்தகலைத்தமிழ்மாறன்றகவோர்களுரைப்பவறிந்
தழைத்துரிமைத்திறநல்கியகலாநண்பாயினனே

(இ-ள்.) மானேந்திய கையினையுடைய பரமசிவனுக்கு அன்பராகி மெய்ப்பொருளறிந்து உலகமெல்லாமபிழைக்குமபடித் திருவாசகம் பாடியமாணிக்கவாசகருடைய செய்கையெல்லாம் தழைத்திருக்கின்ற தமிழைவளர்க்கும பாண்டியராசனானவன் பெரியோர்கள் சொல்லக் கேள்விப்பட்டு அவரை அழைப்பித்துத் தனக்குரியவராக்கி அவருக்குநீங்காதசினேகனானனென்றவாறு. (௰௩)

செங்கோலமிழ்ந்தபழனத்தடம்புடைசூழ்வாதவூ
ரெங்கோனின்செய்கையறிந்தியல்புடையோனொருநாடி.

பொங்கோதவேலை வலம்புரந்து பெரும்பகை துரந்து
செங்கோன்மைமுறைநடத்துஞ் செழுங்கலைமதிக்குலங்கி.

(இ-ள்.) சங்குகள் சந்திக்கின்ற விசாலமாகிய வயல்களையுடைசூழ்ந் திருவாதவூரிலவதரித்த மாணிக்கவாசகருடைய கல்விமுதலியவைகளின் வல்லமையைதெரிந்து தகுதியுடையரென் றறிந்து மிகுந்த சத்தத்தையுடைய கடல்சூழ்ந்தபூவுலகத்தை ரட்சித்துச் சத்துருக்களைக்களைந்து மனுநீதிமுறைமைநடத்தும் முதன்மையாகிய மந்திரித்தனங்கொடுத்தான் பாண்டியராசனென்றவாறு. (௰௪)

வேறு.

தென்னவன்பிரமராயனென்றருள்சிறப்புநாமம்
மன்னவா மதிக்கநல்கிவையகமுய்வதாக
மின்னவயணிப்பூணுடைவெண்மதிக்கவிகைதண்டு
பொன்னவிர்கவரிமேல்வழமளிக்கனன்பொருநைநாடன்.

(இ-ள்) பின்னுமரசர்களெல்லா மதிக்கும்படி தென்னவன்பிரமராயனென்று சிறக்கப்பெற்ற ஒருதிருப்பெயர்கொடுத்து உலகம்பிழைக்கும்படியிருக்கின்ற நவரத்னாபரணமும் பீதாம்பரமும் வெள்ளிச்சத்திரவட்டத்தையும் சிவிகையும் பொற்பிரகாசமுடைய வெண்சாமரங்களையும் அவருக்குக்கொடுத்தான்பாண்டியராசனென்றவாறு. (௰௫)

இந்திரசெல்வம்போலவினைசிறந்தளவின்பமெய்தி
மந்திரத்தலைமைபூண்டவன்புகழ்வாதவூரர்
தந்திரக்கேளிர்சூழக்காவலர்க்கண்களேபோல்
மந்திரத்திருந்தமண்மேல்வந்தவெண்மதியமொத்தார்

(இ-ள்,) இந்திரசம்பத்துப்போல நிறைந்திருக்கின்ற பாக்கியத்திலே இன்பத்தைப்பொருந்தி முதன்மந்திரியாகப்பெற்ற பெருமையையுடைய வாதவூரராகிய மற்றமந்திரிகளாம்பிரதானிகள் கூட்டங்களாய்சூழ்ந்திருக்கலால் நட்சத்திரகூட்டங்கள் சூழ்ந்திருக்க ஆகாசத்தினின்றிழிந்துபூலோகத்திலமர்ந்த வெள்ளியசந்திரனை யொத்தாரென்றவாறு, (௰௬)

பெருங்கடனாகிப்பெருகியேதருக்குலவி
இருங்கடக்கதோண்மேலனைத்திண்டருள்பூண்டகோவும்
கருங்கடனாகமெட்டுங்காலமாநாகமெட்டும்
பரங்கெடவுலகபாரம்பரித்தனர்திருந்தமிக்கார்,

(இ-ள்) பெரியகடமையாக நீதியைவிசாரிப்பண்ணியவாக்குக்களினாலுண்டாகிப் பெரியகங்கணமணிந்தவருடைய தோளின்மீது வைக்கப்படாகுக் கொடுமையையுடைய பாண்டியராசனும் கரியமதம் பொழிகின்ற அஷ்டகஜங்களும் விஷத்தையுடைய அஷ்டமாநாகங்களும் சுமக்கின்ற பூமிபாரம்நீங்கத்தாமே சுமந்தார்மாணிக்கவாசகர்-எ-று

காதலித்தறஞ்செய்வோர்க்குச்சுவர்க்கமுங்கண்ணுமாகி
ஏதிலர்க்கிடும்பையாகியிறைஞ்சினர்க்கின்பமாகி

யாதுலர்க்கன்னையாகியரனடிக்கன்புமிக்கோர்
பூதலத்திறைவனாணைபொதுவறநடத்துநாளில்

(இ-ள்,) விருப்பங்கொண்டு கருமஞ்செய்பவர்க்குத் துன்பம்வாராமற்காக்கின்றஒருகவசமாகியும் சிறந்தகுணங்களாகியும் மற்றவர்களுக்குத்துன்பத்தைத் தருகின்றவராகியும், வணங்கினவர்களுக்கு இன்பத்தைத்தருகின்றவராகியும் ஏழைகளுக்குத்தாயாகியும் சிவனது திருவடியிலே அன்புமிகுந்தவருமாகிய மாணிக்கவாசகர் பூவுலகத்திற்கு அரசனாகியபாண்டியராசனாக்கினையைப் பொதுமைநீங்க நடத்துகின்ற நாளிலென்றவாறு, (௰௮)

பற்பலபொருளாயுள்ளபாசமுமதனையேவி
யுற்றபேதமானவுடம்புயிரொடுங்குமாறு
மற்புகப்புத்திமுத்தியளித்தருளாலேமேலாந்
தற்பரனடத்துமாறுமுணர்ந்தனன்சைவநூலின்

(இ-ள்,) பலபலசத்திகளாயிருக்கின்ற மலங்களும் அம்மலங்களைப் பொருந்தி எழுவகைப் பிறவிதோறும் பேதப்படுகின்றஉடம்பும் உயிரும் ஒடுங்குகிறவிதமும் ஆச்சரியமாகப்பந்தமோக்ஷங்களைக்கொடுத்து தாகிருபையினாலேமேலாகியபரமசிவன் நடத்துமவிதமும் சிவாகமங்களிலறிந்தார் மாணிக்கவாசகரென்றவாறு, (௰௯)

அவ்வியமனத்தினாலேயனைத்துருவங்கள்கூடி
யிவ்வுயிர்பிறந்துமீளவிறந்திடுமென்றிரங்கி
வெவ்வெயிலவருந்தமுற்றோர்மென்னிழல்விரும்புமாபோ
னவ்வியுமழுவுமேந்துமப்பனுக்கன்புமிக்கார்

(இ-ள்,) அழுக்காறையுடையமனத்தினாலே எல்லாவுருவங்களோடுங்கூடிஇந்தஉயிர்பிறந்து மறுபடிஇறந்திடுமென்று இரக்கமுற்றுக் கொடியவெய்யிலிலே வருத்தப்பட்டவர்கள் மெல்லியநிழலையிச்சிக்குமாறுபோல மானுமழுவுமேந்திய பரமசிவனிடத்திலே அன்புமிகுந்தார்மாணிக்கவாசகரென்றவாறு, (௨௰)

தீத்திறவினையினாலேசிறைப்படுமுயிரையெல்லாம்
பார்த்தனருலகவாழ்விற்பயனில்லையென்றுதேர்ந்து
கூத்தினர்தன்மைவேறுகோலம்வேறாகுமாபோ
னீத்தனர்மனத்தின்முன்போனிகழ்த்தினவழுக்கிதே,

(இ-ள்,) பொல்லாததீவினையினாலேகட்டுப்பட்டுப்பிறப்பிறப்பில்வருந்துகின்ற சீவகோடிகளைப்பார்த்து உலகவாழ்வில் ஒருபிரயோசனமுமில்லையென்றுதெளிந்து கூத்தாடிகளுடைய கருத்துவேறும்வேஷம்வேறுமாவதுபோல உலகவாழ்க்கையைப் பொய்யென்று மனதிலேநினைத்தவராய் முன்போலப் பாண்டியராசனுடைய நீதிமுறையைநடத்திக்கொண்டிருந்தார் வாதவூரரென்றவாறு, (௨௧)

வாருடன்புவியிற்றோன்றுமறையவர்க்கிறைவருண்மை
தருமுணர்வென்னுநாலாஞ்சத்தினிபாதமெய்தி
பரமவஞ்செழுத்துமொன்றாமபராயாமுணர்ந்தஞான
குருபரன்றிருத்தாள்சென்றுகூடுதலவேண்டுமென்று,

(இ-ள்,) அனுக்கிரகத்தினாலே பூலோகத்திலே திருவவதாரஞ்செய்த மாணிக்கவாசகர் உண்மையறிவைத்தருவதென்னப்பட்ட அதிதீவிர பக்குவத்தைப்பெற்று உயர்ந்த அஞ்செழுத்தின் பொருளாயுள்ளசிவத்தையறிவிக்குஞ்ஞானாசாரியன் திருவடியைக் கூடல்வேண்டுமென்றுநினைத்தாரென்றவாறு, (உஉ)

மற்கடவிலங்குகன்னல்வளங்கெழுவிளவின்மேவு
நற்கனிகொள்ளவேண்டிநயந்துகல்லெறிவார்போலச்
சற்குருவுளரோவென்றுநாடுவார்தர்க்கமெல்லாஞ்
சொற்கலைஞானசைவாதமருடன்சொல்லலுற்றார்,

(இ-ள்,) குரங்காகிய மிருகத்தினாலே வளம்பொருந்திய விளவினுடைய நல்லபழம்பெறவிரும்பி நயப்புடனேகல்லைவிட்டெறிவார்கள் போல நல்லசற்குருவுண்டோவென்று தேடுவாராகிய மாணிக்கவாசகர் வாதங்களெல்லாஞ் சொல்லுகின்ற கல்வியிலேவல்ல சைவாசாரியர்களுடனேபேசிய பிரசங்கம்பண்ணினாரென்றவாறு. உ௩

வளங்கெழுபுவியினுள்ளவாவியங்காவுமோடி
விளங்கிசைவண்டுதண்டேன்றிருமலர்தேடுமாபோ
லுளங்கொளாமலனன்றாளிலுற்றவுண்மையெல்லா
மளந்தறிவுணர்ந்தசீராயாவரொன்றுநாளில்,

(இ-ள்) வளம்பொருந்திய பூலோகத்திலேயுள்ள தடாகங்களிலுஞ் சோலைகளிலுஞ்சென்று விளங்குகின்ற இசையையுடைய வண்டுகள் குளிர்ந்ததேனிறைந்த மலர்களைத்தேடுவதுபோல மனங்கொள்ளச்சிவாகமங்களைக்கற்றறிந்த மாணிக்கவாசகர் மெய்ப்பொருளெல்லாமளவைசெய்து அறிவிலேயறிந்த தன்மையையுடைய ஞானாசாரியரா வரொன்றாயுதாளிலென்றவாறு, உ௪

வேறு,

மேதகுவனிதையரெங்கணும்வீசியகவரிபசைந்தெழ
மாதவமுனிவர்களந்தணர்மாசறுகவிஞர்செறிந்திட
வேதபின்மதிகுலபுங்கவனோங்கெழுமணிமுடியின்றிர
ளாதவன்மிசையெழவந்தரியாசனமதனிலிருந்தனன்,

இ-ள், மேன்மையையுடையமங்கையர்கள் வீசுகின்றசாமரைகளெங்குமசையவும் மகத்தாகிய தவஞ்செய்கின்றமுனிவர்களும் பிராமணர்களுங் குற்றமற்ற வித்துவசனங்களும் நெருங்கவும் பழுதில்லாதசந்திரகுலத்திலேவந்த அரிமர்த்தன பாண்டியராசனாகியவன் அழகு பொருந்திய இரத்தினங்களிழைத்த மணிகள்பதித்த கிரீடமாகியசூரியன்

சிரசிலே உதயமாகும்படிவந்து சிங்காதனத்திலே எழுந்தருளியிருந் தானென்றவாறு, ௨௫

தாதகிமாலைபுனைமெய்புவிசார்தருமாழ்கடலின்கரை
தீதிலமாதுரகங்கொடுசீர்கெழுமாரியர்வந்தனர்
ஏதமிலாயதுகண்டனமியாமெனவேதொழுதன்போடு
மேதினிகாவலன்முன்சிலமேதகுதூதர்விளம்பினர்,

இ-ள், அப்பொழுது ஆத்திமாலையணிந்த மார்பையுடைய சோழ ராசாவினுடைய தேசத்திலே சேர்ந்தகடற்கரையிடத்தே குற்ற மற்றமேன்மைபொருந்திய குதிரைகளைக்கொண்டு சிறப்புப்பொருந்தி யஆரியதேசத்தார் வந்திருக்கிறார்கள் பழுதற்றபாண்டியராஜனேயா ங்களதுபார்த்தோமென்று வணங்கி அன்பினுடனே புவிகாவலனாகிய அரசன்முன்னே மேன்மைபொருந்திய சிலதூதர்கள் சொன்னார்க ளென்றவாறு, ௨௬

ஏவல்செய்பவர்களிலிங்கிவரேபரிவானவரென்றிகன்
மேவியதூதரைவளர்திறன்மீனவர்கோனுமகிழ்ந்துபின்
வாவுநன்மாதுரகங்கொடுவாருமெனாவுடனுந்தன்
தாவியுமாயானைபுடையாருமுகனாடிமொழிந்தனன்.

இ-ள், நம்முடைய ஏவல்செய்பவருக்குள்ளே இவர்களே அன்பு டையவர்களென்று அந்தவலிமைபொருந்திய தூதர்களைச் செளரியத் தையுடைய பாண்டியராஜன்மகிழ்ந்து பின்பு தாவுகின்ற நலலகுதிரை யைக்கொண்டுவாருமென்று தன்னுடனுமிருக்கும் போன்றவராயுஞ்சி வனிடத்திலேஅன்புள்ளவராயு மிருக்கின்ற வாதவூரர்முகத்தைப்பா ர்த்துச்சொன்னானென்றவாறு, ௨௭

மீனவர்கோன்மொழியின்படிவேணியனேசரிசைந்தபின்
ஞானசோதியுடன்புவியாளபவன் வாசிகொளும்படி
வானவிமானமெனுந்திருவாழ்வுளகோயில்புகுந்துதன்
னீனமிலாநெறிவாதபொன்னேழுகோடிவழங்கினன்,

இ-ள், அப்படிசொன்ன பாண்டியராசனுக்காவலப்படி சிவனுக்கு நேசராகிய வாதவூரர் உடன்பட்டபின்பு மலர்ந்தமுகத்தை யுடையவ னாயப்பூவுலகையாளுகின்ற பாண்டியராசன் குதிரைகொள்ளும்படி க்குத்தேவவிமானமென்று சொல்லத்தக்க செல்வம்பொருந்திய அ ரமனைக்குள்ளேபோய் நலவழியிற்சம்பாதித்த தன்னுடையதிரவியத் திலே நாற்பத்தொன்பதுகோடிப்பொன் கொடுத்தானென்றவாறு,

விறபடைவெற்றிமடந்தையுமிக்கமலர்த்திருவும்பயின்
மற்புயவெற்பினனையல்லைகத்தவலத்தன்வழங்கிய
பொற்புமிகுத்தனங்கொடுபொற்கவனப்பரிகொண்டிட
நற்பயன்றன்னுழையன்றனாங்கனைநெகிழ்ந்தானின்றவர்,

இ-ள், விற்படையுடனே விஜயமங்கையும் மேலாகியதாமரை மல ரிலிருக்கின்ற சீதேவியுந் தங்குகின்ற புஜத்தையுடையவனாகியும் மீன

க்கொடியை வலதுபக்கத்திலுயர்த்தவனாகிய மிருக்கின்றபாண்டியரா ன்கொடுத்த அழகுமிகுந்த திரவியத்தைக்கொண்டு வேகத்தையுடை யசிறந்த குதிரையைக்கொள்ளுதற்கு நல்லவேளையிலபிரயாணமகொ ள்ள முயறசிசெய்தார பரமசிவனையே உருகிநினைக்கின்ற மாணிக்க வாசகரென்றவாறு, ௨௯

மெய்த்தவருற்றபெருந்துறைவித்தகனாகக்குறுகும்படி
யித்தகுநற்பொருள்கொணடு நீரிப்படியிறசெலுமென்றவி
னைத்தகுபுத்தியொழிந்துயிரறபுமுத்திபெறும்படி
யுய்த்துளசத்தியுடன்பொருவொத்தனனுத்தமபஞ்சவன்

இ-ள், உண்மையாகிய தவத்தினையுடையோர்களிருக்கின்ற திருப் பெருந்துறையிலே ஞானதேசிகனையடையும்படி இந்தத் தகுதியுள்ள நல்லபொருளை யெடுத்துக்கொண்டு இந்தபூமியிலே போமென்று சொன்னபடியால் பழையவினையெல்லாம ஒழிந்து உயிரானதுமேலா கிய மோக்ஷத்தைபபெறும்படிச் செலுத்துகின்ற அருட்சத்திக்குச்ச மானமானான் உத்தமனாகிய பாண்டியராசனென்றவாறு, *(௩௰)

பற்றிலாபெற்றசிவன்றாழ்பற்றினார்க்கிலைவண்டமி
ழுற்றமலைக்கிறைவன்றனையொக்கமதித்தருள்கொண்டலை
விற்றுவசத்தனெடும்படை மிக்கபுலிக்கொடியன்படை
மற்றுளகொற்றவர்தம்படைவாகச்சமுமுறகொட்டமுழந்தன,

இ-ள், ஒருபொருளிலும் பற்றில்லாதவராயும பரமசிவனுடையதி ருவடியிறபற்றுள்ளவராயும இருக்கின்றவரை வணமை பொருந்தியத மிழ்விளங்கியிருந்த அந்தப்பொதியமலைக்கு அரசனாகிய பாண்டியனு க்குச்சமானமாக மதிக்கத்தக்க கிருபாமேகமாகிய மாணிக்கவாசகரை விறகொடிபடைத்த சேரமானுடைய நெடியசேனைகளும்மிகுந்த புலி க்கொடிபடைக்க சோழனுடையசேனைகளும மற்றுமுள்ள அரசர்க ளுடைய சேனைகளும சூழ்ந்து புறப்பட்டனவென்றவாறு, (௩௧)

உக்கிரநச்சுரங்களினுச்சிபணிப்பமைசைந்தடி
வைக்குமுரத்தனவெங்கயமைக்கிரியொக்கமலிந்தன
பக்கமுமுறபிறகுந்துடிபற்பலகொட்ட வியக்குவ
தக்கமனத்தில்விரைந்துளத்துபரித்திரளவந்தன

இ-ள் உக்கிரமானவிஷமுள்ள ஆதிசேஷனுடைய தலைகளும் அஷ் டமாநாகங்களினுடைய தலைகளும்நடுங்க அசைந்து அடிபெயர்க்கின் றவலிமையுடையனவாகிய வெவ்வியயானைகள் நீலகிரிகளுக்குச் சமா னமாயநெருங்கின இரண்டுபக்கமும் முன்னும் பின்னும அனேகந்து டிகளடிக்கமனோவேகத்தினுஞ் சீக்கிரமாகச் சொல்லுகின்றனவாகிய தகுதியுள்ள குதிரைக்கூட்டங்கள்வந்துசூழ்ந்தன-எ-று, (௩௨)

வேறு,

கொங்கணாகலிங்கசோழ கொங்கர்துளுவர்
சிங்களர்கனாட்டியர் தெலுங்கசோனகர்

தங்குதிறன்மாளவர் மலாடர்தமிலொன்று
யெங்கணுமிடைந்தவர்க ளெண்ணமுடிவில்லார்

இ-ள். கொங்கணதேசத்தார் கலிங்கதேசத்தார் கொங்குதேசத்தார் துளுவதேசத்தார் சிங்களதேசத்தார் ஒட்டியதேசத்தார் தெலுங்கதேசத்தார் சீனதேசத்தார் மாளவதேசத்தார் மலையாளதேசத்தார் இவர்களெல்லாம் தங்களுக்குள்ளே ஒன்றாக்கூடி எண்ணுதற்கு அளவுபடாதவர்களாயெவ்விடத்தும் நிறைந்தார்கள்-எ-று, (௩௩)

இத்திறமெழுந்தபடை யெங்கணுநெருங்கத்
தலத்துபரிமீதுள தமிழ்க்கவிஞர்சூழச்
சித்திரமடந்தையர் திரண்டிருமருங்கு
மொய்த்துவரவீணைகுழல் முன்னரிசைகொள்ள

(இ-ள், இந்தப்பிரகாரமெழுந்தசேனைகள் எவ்விடத்தும்நெருங்கத் திடக்கின்ற குதிரையின்மேலே தமிழ்க்கலையினைமிக்க புலவர்களு சூழ்ந்துவர அழகிய மங்கையர்கள் கூட்டங்கொண்டு இரண்டுபக்கத்திலும் நெருங்கிவர வீணையும் புல்லாங்குழலும் முன்பாக இசைகள் செய்துகொண்டுவரவென்றவாறு, (௩௪)

கட்டுமுளகத்தினர் கனத்துளதனத்தார்
பட்டிடைமருங்கினர் பனிக்கவரிவீச
வட்டமதிவெண்குடை வயங்கமுரசெங்கு
கொட்டவுயர்காளமொடு கோடுகளகறங்க

(இ-ள்)கட்டுகின்ற கூந்தலையுடையவரும் கனத்த ஸ்தனபாரமுள்ளவரும் பட்டுவஸ்திரமணிந்த இடையையுடையவருமாகிய மங்கையர்கள் குளிர்ந்தகாற்றைத் தருகின்ற வெண்சாமரைகள் வீசவும் வெள்ளியசந்திரவட்டக்குடைகள்பிடிக்கவும் பேரிகைகள் எங்குமடிக்கவும் உயர்ந்தசின்னங்களோடு சங்கங்களதொனிக்கவும்-எ-று, ௩௫

மிண்டியுளபாடகர் வியந்துகரவார்ந்
தொண்டுபுடைசூழவெழில சோர்குழலர்பாடத்
தண்டரளமலகிய தணிச்சிவிகைமேற்கொண்
டெண்டிசைமிகப்புகழ் கயற்கொடியிலங்க

இ-ள். நெருங்கியுள்ள பாடகர்கள்துதிசெய்து வாழ்த்திக்கொண்டு பக்கத்திலே சூழ்ந்துவரவும் அழகுசேர்ந்த கூந்தலையுடைய மங்கையர்கள்பாடவும் குளிர்ச்சிபொருந்திய முத்துகளாற்செய்த நெருங்கிய ஒப்பற்றசிவிகையின்மேலேறிக்கொண்டு எட்டுத்திக்கும் மிகவும்புகழ்கின்ற மீனக்கொடி பிரகாசிக்கவுமென்றவாறு, ௩௬

மங்கலநினைத்திடுமாளிகையதன்றே
துங்கமணியகழ்சையணி சொக்கநாயகனி
யங்குவிடைபெற்றுமறை யந்தணரின்மிக்கார்
திங்களமரச்சூரிசில் கோயிலுழைசென்றார்,

இ-ள், இந்தப்பிரகாரம் இவைகளெல்லாம் அமைச்சூழும்படி சுபமாகநினைத்தே தேடியதிருமாளிகைவிட்டு நீங்கி உயர்ச்சிபொருந்தி

யசல்குமணிபணிந்த சொக்கநாதனைத்தொழுது அனுப்புவித்துக்கொண்டுவேதப்பிராமணரின் மிகுந்த மாணிக்கவாசகர் சந்திரவம்சத்திற்றோன்றிய பாண்டியராசனிருக்கும் அரமனைக்குப்போனாரென்றவாறு

சென்றுதமிழ்மாறனருள் பெற்றெழிலசிறக்கும்
வென்றிவளவன்புவியின் மேன்மையொடுசெல்வார்
குன்றனையமாடகொடு கோபுரநெருங்கு
நன்றிமதுரைப்பதியை நன்னொடுகடந்தார்,

இ-ள், பாண்டியராசாவினுடைய அரமனைக்குப்போய் அவனுடையகிருபையும்பெற்றுக்கொண்டு அழகுசிறந்தவெற்றியையுடையசோழராசாவிருக்குஞ் சோழதேசத்திற்கு மேன்மையுடனே செல்லுகின்ற மாணிக்கவாசகர் மலைக்குச்சமானமாகிய உப்பரிகைகளும்கோபுரங்களும்நெருங்குகின்ற நன்றியையுடைய மதுராபுரியைநன்மையோடுநீங்கினாரென்றவாறு, ௩௮

தெம்முகுடதிசைக்கட னிறைந்தொலிசிறந்தே
யுடைந்ததயநற்றிசையி லூற்றுவருமாபோன
மிடைந்தபதியுங்கடறும் வெறபுமிலையெல்லாங்
கடந்துவழிசென்றுபல காவதமகன்றார்

இ-ள், தெற்கின் மேற்றிசைக்கடலானது நிறைவுடனே சத்தமிகுந்து உடைந்துபோய்க்கீழ்த்திசையிற் புரண்டுவருகிறதுபோல நெருங்கிய நகரங்களும் காடுகளும் மலைகளுங்கடந்து வழிக்கொண்டு அனேககாதவழிநீங்கினார் மாணிக்கவாசகரென்றவாறு, ௩௯

என்றுமுளபொன்றுமுட லென்னுநராதோற்றுஞ்
சென்றவழிமாறியொரு தெய்வவழிசெல்வார்
நன்றியுளமுந்திபெற நம்பரசமத்தனயா
லன்றுயர்பெருந்துறை யடைந்தபடிசொல்வாம்

இ-ள், என்றும் தோன்றித்தோன்றிக் காணப்பட்டுக்கொண்டு வருகிற தேகமென்னும் ஊர்களைத்தோற்றுச்சென்று வழிதப்பி ஒருதெய்வத்தன்மையாகிய வழியிலே செல்வாராகிய வாதவூரர் நன்மைபொருந்தியமோக்ஷத்தையடைய பரமசிவனுடைய அன்பினாலே அன்றுஉயர்ந்ததிருப்பெருந்துறையிற்சேர்ந்ததன்மையைச்சொல்லுவாம்-என்று மந்திரிச்சருக்கம்-முற்றுப்பெற்றது,ஆ-சஎ,

திருப்பெருந்துறைச்சருக்கம்.

வேறு.

பழமறைதொழுதணரந்தணர் பலர்தொழநடமுயல்கின்றவர்
மழவுழைகரமிசைகொண்டிட மருவியகவுரிமகிழ்ந்திட
விழைதகுமிரதபொற்கொளி விடுமுயர்சபிலைவிலக்கலி
லழகுறுகமணியமண்டப மகனிடையருள்கொடிருந்தனர்

இ-ள், பழமையாயுள்ள நான்குவேதங்களையுந் துதியுணர்ந்ததில்லைமூவாயிரவாவணைக்குப் பொன்னம்பலத்திலே திருநடஞ்செய்கின்றகட

வுளானவ மழுவுமானுந்திருக்கரங்களிற்கொண்டு வாமபாகத்திலிருக்கும் உமாதேவி மகிழ்ச்சியுடைய யாவரும் விரும்பும்படி உயர்ந்த வெள்ளிமயமாகிய கைலாசகிரியில் அழகிய ஒருபொன்மண்டபத்திற்கிருபையுடனே எழுந்தருளியிருந்தாரென்றவாறு, ௬

மதுமலர்கரமிசைகொண்டினி வழிவழியடியவரொன்றுதம
முதுமறைதெரியமொழிந்தெதிர் முறைமுறைமுனிவரவணங்கி
ரிதுபரனருள்வழங்குவ தெனவரிபிரமரொழுந்துதம
பதநிலைபெறவருளென்றிரு பரிபுரகழல்கள்பணிந்தனர்,

இ-ள். தேனையுடையமலர்களைக் கைகளிலேகொண்டு உமக்குவழிவழியாகிய அடிமையுடையோமென்று பழையவேதங்களையோதித் திருமுன்னேநின்ற வரிசைவரிசையாக முனிவர்கள் வணங்கினார்கள் இது கடவுளனுக்கிரகம் பண்ணுகிறகாலமென்று பிரமவிஷ்ணுக்கள் எழுந்திருந்து தங்களபதங்களை நிலைபெற அநுக்கிரகம்பண்ணுமென்று சிலம்பணிந்த இரண்டுதிருவடித் தாமரைகளையும் பணிந்தார்கள்-எ-று

பரவருமணிகள்விளங்கிய பணவரவணியரனங்கமு
மருவியதாளவடங்கெழு மதிநுதலுமைமகளங்கமு
மிரவியுமதியுமிருந்தென வெதிரெதிரிலகுதல்கண்டன
ரரகரசிவசிவவென்றுள மயர்வுறவழுதனரன்பினர்,

இ-ள், சொல்லுதற்கரியரத்தினங்கள் விளங்கிய படத்தையுடைய சர்ப்பங்களைத்தரித்த பரமசிவனுடைய வடிவமும் குளிர்ச்சிபொருந்திய முத்துமாலைகள் பிரகாசிக்கின்ற மூன்றாம்பிறைபோலும் நெற்றியையுடையஉமாதேவியினுடைய வடிவமும் சூரியனுஞ் சந்திரனும் இசைந்திருத்தல்போல ஒன்றுக்கொன்று இசைந்து பிரகாசிப்பதைப்பார்த்தவர்களாய் அரகரசிவசிவவென்று மனங்கரைந்து அன்பினால் ஆனந்தக்கண்ணீர்விட்டிருக்கிறார்கள் அன்பர்கள்-எ-று, ௭

அடியொழிமாமனநெகிழ்ந்துபின் னவனியிலவிழ்வதொழிந்துநின்
னுடனுறைபெருமைவழங்குவ துளதுகொலெனநினைநெஞ்சொடு
மடலவிழ்கடிகமழ்ந்தருமலர்பல முறைமுறையிசைந்திமுன்
னிடமிஃதெனமகிழிந்திர னிமையவமரவருமிறைஞ்சினர்

இ-ள், சமபாதிகதபுண்ணியங்களெல்லாஞ் செய்வலோகத்திலனுபவித்து அதுமுடிந்தபின்பு அடியற்றமரம்போலவொருந்து பூலோகத்திலேவந்து பிறக்கிறதொழிந்து உன்னுடைய சமீபத்திலிருக்கும்பெருமையைவழங்குவதுமுண்டோவென்றுநினைக்கின்ற நெஞ்சுடனேயிதழ்விரிந்தவாசனையுடைய பஞ்சதருவினுடையமலரை அனேகந்தரந்தூவி நினைக்கத்தக்கவிடம் இதுவென்று மகிழ்கின்றதேவேந்திரனுந்தேவர்களும்வணங்கினார்களென்றவாறு.

வேறு,

இன்மிடறன்மிகுஞ்சுகிர்சையுந்திசம்பிரமயுங
கொண்டருளுந்திருக்கருந்தியருள்கூறப்

புண்டரீகமாதுபுவி மங்கையெழிலரியகா
வண்டாமடவார்களுல கன்னைபுறமன்ன

இ-ள், மிகுந்தவலிமையுடைய உடைவாளும் பிரகாசிக்கும் பிரம்புங்கொண்டு அருகேநின்று தருவாகிய நந்திகேசுவரர் கிருபைமிகுந்திருக்கச் சீதேவியும் பூதேவியுங் குறைவில்லாத அழகையுடையதெய்வமங்கையருமுலகத்திற்குத் தாயாகிய உமாதேவியின் பக்கத்திலிருக்கவென்றவாறு, ௫

தானுபலபூதகண நாதர்புடைசூழக்
கின்னரர்கள்கந்தருவர் கீதவிசைபாட
மின்னுமுடிமன்னுநதி வீசுதிரையென்னச்
சென்னவொளிசாமரை யெடுத்தழகுசெய்ய

இ-ள், அனேகபூதகணநாதர்கள் நெருங்கிய பக்கங்களிலே சூழ்ந்து நிற்கக் கின்னரர்களுங் கந்தருவர்களுங் கீதவிசைகளைப்பாடப் பரமசிவனுடைய மின்னுகின்ற முடியிலிருக்குங் கங்கையினுடைய வீசுகின்ற அலையைப்போல ஓங்கி வெண்சாமரைகள் அழகுசெய்யவென்றவாறு,

இந்தவளமல்குசபையின்னல்கெடமன்னுந்
தந்தைமணிமன்றிலுமைதாண்டவபதத்தோன்
செந்தமிழின்வந்தசிவஞானவமுதுண்டா
மந்தமிலருட்கடலையாண்டருளவேண்டி

இ-ள், இப்படிப்பட்ட வளங்கள்மிகுந்த சபையினிடத்திலே துன்பங்களெல்லாம் நீங்க நிலைபெற்றிருக்கின்றவெல்லாவுலகங்களுக்குந் தந்தையாயிருப்பவரும் அழகிய கனகசபையிலே எழுந்தருளியிருந்து நிருத்தஞ்செய்கின்றவருமாகிய கடவுளானவர் செவ்வியதமிழிலே வந்த சிவஞானவமிர்தம் பொருந்துகின்ற அளவில்லாத கிருபைக்கடலாகிய மாணிக்கவாசகரை அடிமையாக்கிக்கொள்ள விரும்பியென்றவாறு, ௭

மைத்தகடன்மண்ணவர்கடம்முருவிலம்மென
றத்தகையபத்தர்கணநாதரையழைத்தே
சித்திதருதேசிகசிறந்தவடிவங்கொண்
டுத்தமநெடுங்கயிலையோங்கலதுநீங்கி

இ-ள், கருங்கடல்சூழ்ந்த பூமியிலேயிருக்கின்ற மனிதரைப்போல் வடிவங்கொண்டு நம்முடனே வாருங்களென்று அப்படிப்பட்ட அடியார்களையுங் கணநாதர்களையும் அழைத்துக்கொண்டு மோக்ஷத்தைத்தருகின்ற சிறப்புப்பெற்ற ஆசாரியரூபத்தைக்கொண்டு உத்தமமாகிய நெடிய கைலாசமலையை நீங்கியென்றவாறு, ௮

கொன்னெறியிதன்னுறவுகொண்டொருவர்தேடும்
பொன்னடியெனுஞ்சலசமண்மிசைபொருந்தப்
பன்னுமறைவல்லவர்பரித்தெழில்வளாயபார்
மன்னுமொருதெய்வீகவளம்பதியில்வந்தார்

இ-ள். பெருமைபொருந்திய ஒருபன்றிவடிவங்கொண்டு மகாவிஷ்ணுதே டியபொன்மயமாகிய திருவடித்தாமரைகளைப் பூமியிலேபொருந்தவைத்துப் பண்ணுகின்ற வேதத்திலே வல்லவராயும் அன்புகொண்டு யாகஞ்செய்பவரா யுமிருக்கின்றபிராமணர்கள் நிலைபெற்றிருக்கும் ஒப்பற்றதெய்வத்தன்மையை யுள்ள வளப்பத்தையுடைய திருப்பெருந்துறையில் வந்துசேர்ந்தார்-எ-று.

வெம்பிறவிவேலைதனில் வீழ்பவர்களெல்லாம
நம்புசிவநாமமெனு நற்புணைபிடித்தா
லெம்பரனருட்கரையி லேறுதுறையாமா
லம்புவிமொழிந்தள பெருந்துறைதனபேர்

இ-ள். வெப்பத்தையுடைய பிறவிசாகரத்திலவிழுந்து இடைபவர்க ளெல்லாம்பெரியோர்கள்நம்புகின்ற சிவநாமமெனும நல்லதெப்பத்தைப் பிடித்தாலெமது கடவுளுடைய கிருபையாகிய மோட்சககரையில ஏறுவதற்குத்துறையாதலாலே உலகமெல்லாம திருப்பெருந்துறையென்று அந்தப்பதிக்குத் திருப்பெயர்சொல்லு மென்றவாறு (௰)

ஈனமிலபெருந்துறையெனும் பதியிருஞாங்கா
கானமிகுபுன்னைவளாகந்தமுளசந்தம்
வானமுயாசண்பகமரநதிகழ்நாநதம்
தேனினமுரனறெழு செருந்திகளபொருந்தி

இ-ள். குற்றமற்றதிருப்பெருந்துறையெனுந் தலத்திற்கு அருகெல்லாம் வாசமிகுந்தபுன்னைமரங்களும் வளர்கின்றமணமுள்ள சந்தனமரங்களும் ஆகாயத்தை அளாவியுயர்ந்தசண்பகமரங்களும்பிரகாசிக்கின்றநாரத்தைகளும் வண்டினங்கள் சத்தித்தெழும்புகின்ற செருந்திமரங்களும் பொருந்தி-எ-று.

கோடுகவினும்பெரிய கோங்குமிகவோங்கும
பாடலநெடும்பலவு பைங்கமுகுதெங்கு
நீடளியிரைததெழு நிரைகுரவுகுந்த
மேடவிழ்செழுங்கவரிலஞ்சிகணமலிந்து.

இ-ள் அழகியகொம்புகளையுடைய பெரியகோங்குமரங்களும், மிகவுமுயர்ந்தபாதிரிமரங்களும், நெடியபலாமரங்களும், பசியகமுகுமரங்களும், தென்னமரங்களும். நீடுகின்றவண்டுகளிரைத்தெழப் பெற்றவரிசையா யிருக்கின்றகுராமரங்களும், மருமரங்களும் இதழ்விரிந்த முருக்கமரங்களும், மகிழ்மரங்களும் நெருங்கி-எ-று. (௰உ)

மாக்கலின்மிகுங்கடைமஞ்ஞைசிறையன்ன
கூக்குரல்செயுங்கரிய கோகிலநெருங்க
பூக்குலவுகிளியினமுந்துதூறுமேன்மே
லார்கஞ்சியிழென்கணுடர்ந்திசைதொடங்க

இ-ள். மகத்தாகிய அழகும்பொருந்திய தோகையுடையமயிலும், இறகையுடைய அன்னங்களும், கூவுதல்செய்கின்ற கரியகுயில்களும், பெருகைமரக்கிளைகளின்மேலேயிருக்கின்ற குரங்குகூட்டங்கள் எழும்பிக்குதிக்குந்தோறும் மேலு மேலுஞ்சத்திக்கின்ற வண்டுகளெவ்விடத்துஞ்செருகி இசைகள்பாட-எ-று

வீழ்ந்தகரவத்துளி விழிப்புனலதாகச்
சூழ்ந்தமுறல்வண்டினிசை தோத்திரமதாகத்
தாழ்ந்துமலரேந்தியினை தன்றிருமுன்னின்றே
வாழ்ந்துருகுமன்பரென மன்னுமொருபூங்கா

இ-ள். தம்மிடத்திலிருந்துவீழப்பெற்ற தேன்றுளிகள் கண்ணீராகவண்டு கள்சூழப்பாடுகின்ற ஓசைதோத்திரமாகவணக்கத்துடனே மலரை யேந்திக் கொண்டு பரமசிவனுக்கெதிரேயிருந்து மனமுருகுகின்ற அன்பர்கள் போல நிலைபெற்றிருக்கும் ஒப்பற்றபூஞ்சோலைகள்-எ-று (௧௪)

வாய்ந்தவளமிவ்வகைவயங்குமதனுய்ப்ப
ணேந்தருந்தவசிங்க ளெங்கணுநெருங்க
மீதிகழறக்குழைதழைந்து மினிரமெய்யமமை
பூத்துஞானமேனறெழில் பொருந்துமோர்குருந்தம்

இ-ள். இப்படிப்பட்ட வளம்பொருந்தியஅந்தச்சோலையினடுவே யாவராலு க்கறிதற்கரியதவங்களென்னுங்கிளைகளானவை ..ல விட்டுநெருங்கமே லாகப்பிரகாசிக்கின்ற தருமமென்னுந்தளிர்கள் தழைத்துவிளங்கியஉண்மை யென்னுமலர்களைப்பூத்து அறிவுடையவர்களைப்போல் அழகுபொருந்திநிற்கு மொரு குருந்தவிருட்சமென்றவாறு (௧௫)

ஆவமுடனவந்தினமகப்படவளைக்கும்
பாவையெனமாநதாபருவங்கொடுநடந்தா
ரோர்வருகுருந்தமொடிலங்குமுயர்காவிற்
சேர்குவமெனத்திருவுளத்தருள்சிறந்து

இ-ள். ஆசையுடனே வந்துதன்னினங்களையகப்படும்படியாய் வலைக்கின்ற ஒருபாவை மிருகம்போல மானிடவடிவங்கொண்டுவந்த கடவுளானவர் அழ கியகுருந்தவிருட்சத்தோடும் பிரகாசிக்கின்றஉயர்ந்தசோலையினிடத்துச்சே ர்வோமென்று திருவுளத்திற்கொண்டருளினார்-எ-று (௧௬)

வந்துதிகழ்தொண்டர்படைசூழமகிழ்வெய்திக்
கொந்துலர்மலைப்பொலிகுருந்தடிபொருந்தி
யந்தமுதலில்லவரருட்டமிழுரைப்பார்
யந்தமறுமெல்லையது பார்த்தினிதிருந்தார்

இ-ள். அப்படியாகவந்து பிரகாசிக்கின்ற அடியார்கள் புடைசூழமகிழ்ச்சி யடைந்தவிடத்துக் கொத்தாய்மலர்கள் நிறைந்த குருந்தவிருட்சத்தின்கீழ

எழுந்தருளியிருந்த அந்தமுமாதியுமில்லாத பரமசிவனானவர் தமிழ்வேதமுரைப்பாராகிய திருவாதவூரருடைய பாசம்நீக்குகின்ற காலம்பார்த்து இனிதாகவிருந்தார்-எ-று. (௧௭)

பொங்குபுனலயாறுபலபோய்வீழ்கடற்போ
லெங்குமுளகலவுயிர்களெய்துமொளியாகுந்
திங்களணிவேணியரிருப்பவடிசேருந்
தங்கமுறையாளர்பலர் துன்றுநெறிசென்றார்.

இ-ள். மிகுந்தசலத்தையுடைய அனேகநதிகள்போய்வீழ்கின்ற ஒருகடல்போல உலகமெங்குமுள்ள சுத்தாத்மாக்க ளடைகின்றசோதியாகியமூன்றாம்பிறையைத்தரித்த சடாபாரத்தையுடைய பரமசிவன் அங்கேயிருக்க அவருடையபாதத்தையடைகின்ற உயர்ந்தவேதியராகிய திருவாதவூரர்பலபேரும் நெருங்கிச்சொல்லுகின்ற அந்தமார்க்கமாகவே வந்தார்-எ-று, (௧௮)

வேறு.

செம்மனத்துவாதவூரர் செலவாதமமைப்பல்லாத
பொய்ம்மயக்கத்தருமடாசம் போலமலர்ந்தனபூவை
யெம்மயக்குமொழிப்பாருக் கினிப்பிறவியில்லையெனக்
கைமறிக்குமவர்போ லமலர்ந்தனவெங்குளகாந்தள்

இ-ள். அந்தமார்க்கத்திலே நல்லமனத்தையுடைய திருவாதவூரிற்பிறந்தமாணிக்கவாசகரை அடையாதபொய்யாகியமயக்கத்தைவிளைக்கின்றபாசம்போலகாயாமரங்களில கரியமலர்களமலர்ந்தன எந்தமயக்கமுமநீக்குமிவருக்கு இனிமேற்பிறப்பில்லையென்று கையைமறித்துக்காட்டுமவர்போலஅங்கிருக்குங்காந்தளெல்லா மலர்ந்தன-எ-று, (௧௯)

விறகாட்டுகொரத்துமதனமபாகிவெம்பிறவி
யிறகாட் டியாவரையு மாகுலஞ்செய்யெமபாவ
நிறகாட்டிலொழிப்பவரார் நீயருக்வெமக்கென்று
பறகாட்டிநிறபவர்போன மலர்ந்தனமென்பனிமுல்லை

இ-ள் கருப்புவில்லைக்காட்டிய கையையுடையமன்மதனுக்கு நாம்பாகிய வரையுமவெய்யபிறப்பிலேவிட்டு வருத்தஞ்செய்கின்றவெங்கள்பாவத்தை உணர்க்காட்டிலுமநீக்குபவர்கள்யாவர் நீங்களுக்கனுக்கிரகஞ்செய்யென்றுபல்லைத்திறந்துகொண்டு நிற்பவர்போலத் திருவாதவூரரே எதிராகமலர்ந்தநின்றனமிருதுவாகிய குளிர்ந்தமுல்லைகள்-எ-று. (௨௰)

பொற்புடையதமிழ்பாடும் புண்ணியசெப்பொருளினுமாஞ்
சிற்பரனுண்மையில்விழிக்கு திருநயனஞ்சேர்தனிலர
னிற்பதாமபிறவியிது வென்றிரங்கினமரங்கள்
கற்பனையையுணர்ந்துமலர் கண்ணீர்கள்பொழிந்தனவால்

இ-ள். அழகிய தமிழ்வேதம்பாடுகின்ற புண்ணியராகிய திருவாதவூராரெச்செப்பொருள்களிலும் கலந்திருக்கும் அறிவுருவனாகியபரமசிவனையுண்மையாகநோக்கிச்செய்யும் சட்சதீட்சையைப்பெறுகிறபடியால்இத்தப்பிறப்புலக

ங்கொண்டாடத்தக்கதாய் விற்பதென்று இரக்கமுற்று செடியமரங்கள் அந்த மகிமையையறிந்துமலர்ந்த தேனுகியகண்ணீர்கள்பொழிந்தன-எ-று. (உக)

முனைவினைபெருங்காடு மூடுறவம்புலவேடர
துன்னியலைததிடர்செயயுந்துன்பவழிசெல்லாம
லுன்னருநற்சிவஞானவுபதேசந்தமிழ்செய்வா
ரின்னவகைத்துளகானமெய்தியவன்னெறிநீங்கி

இ-ள். பழவினையாகிய பெரியகாடுமூடத்தக்கதாக ஐம்புலன்களாகிய வேடர்கள்நெருங்கி அலைத்துவருத்தஞ்செய்கின்றதுன்பவழியிலேபோகாமலயா வராலுநினைத்தற்கரிய சிவஞானவுபதேசத்தைத் தமிழ்ப்பாடல்செய்யுந்திரு வாதவூரர் இப்படிப்பட்டதாயுள்ள காட்டுவழியைக்கடந்து-எ-று. (உஉ)

வேறு.

விரிந்தகடலுக்கிடை விழுந்திடருழந்தே
திரிந்தவாகயந்துகள் சென்றணுகுமாபோல
வருந்தவுழல்வித்தவினை யொந்தருள்வசந்தா
லருந்தவர்பெருந்துறை மருங்கினிலணைந்தார

இ-ள். விசாலமாயுள்ள சமுத்திரத்திற்கு நடுவேவிழுந்து துன்பப்பட டலைகின்றவர்கள சககோதரத்துடனே கரையையடைவதுபோலதம்மைவருந் துமபடி இதுவரைக்கும்வருத்திய இருவினைகளும்ஒத்துத் திருவருளினாலே மாணிக்கவாசகதிருப்பெருந்துறைக்குச சமீபத்திற சேர்ந்தார்-எ-று. (உ௩)

இந்தவுலகஞ்சிவனிருக்குமுலகாகச
சிந்தையருளகொண்டு திருவாசகமுரைபபார்
பந்தமறவந்தயிலபரவுக்குருவென்றே
வந்துறைபெருந்துறையின் வண்மையுரைசெய்வாம

இ-ள இந்தவுலகஞ்சிவலோகமாகமனதிலேகிருபைகொண்டுதமிழ்வேதமா கியதிருவாசகமுறைகளும் திருவாதவூரானவா பாசநீக்கமுடிவில்லாத பரத் தையடையும்படி வந்துசேர்ந்த திருப்பெருந்துறையின்தளத்தைச் சொல்லு வாமென்றவாறு. (உச)

மாத்தியாகுலத்தலைவர்வன்பிறவியெவ்வந
தீர்த்தலகையெம்பரருள்செய்யுமிடமென்றே
தோத்திரமுரைத்துமிசை வந்துசுராசிந்தும்
பூத்திரளுதிர்ந்தவகை போன்றதலர்பொங்கர்

இ-ள். ஆமாத்தியாகுலத் தலைவராகிய மாணிக்கவாசகருடைய வலி மைபொருந்திய பிறவித்துன்பத்தைத் தீர்த்து லோகநாயகராகிய பரமசிவ ன் அனுக்கிரகஞ்செய்யவந்தவிடமென்று தோத்திரஞ்செய்துமேலேயிருந்து

தேவதைகள் பஷபத்திரன்களுதிர்த்ததுபோலிருந்தது மலர்கின்ற பூ
ஞ்சோலையெனறவாறு, (௨௫)

வேறு,

பெறறிந்ததவமுயல்வோமென்றுபெருந்துறைநாடி
யுறறியுங்கியினைகருமவர்களிக்கவெதிர்சிறபவர்போற்
சூறுமின்பநிழல்செய்துகுறையாதபத்தியுட
னீறணிந்துசோரேநதிநின்றன துன்றியகைதை

இ-ள், பெறவேணடியதின்னதென்றுதெரிந்து அதைப்பெறத்தவஞ்செய்வோமென்று திருப்பெருந்துறையைக்குறித்து வழிநடக்கின்றும் மாணிக்கவாசகர்க்குக கொணடாடப்படுகின்ற இன்பமாகியநிழலைச்செய்து குறைவிலலாதஅனபுடனே திருநீறணிந்துதிருவமுதேந்திக்கொண்டு நிறகினறசிவனடியார்களபோல மகரந்தபபொடிகளைப்பூசிககொண்டு வெள்ளியமலரக்குலைகளையேநதிநினறன நெருங்கியதாழைகள்-எ-று, (௨௬)

நிலந்தனிலவக்தொருகுருந்தநீழலிலேயெவவுலகும்
கலந்தபொருளிருந்தபடிகண்டுமனங்களிபபெய்தித்
துலங்கியதஙகண்ணீருஞ்சொரிந்துகரங்குவிதத்துமுக
மலாந்தபெருந்தவாபோலமலர்ந்தனபுண்டரிகங்கள

இ-ள. பூலோகத்திலேவந்து ஒருகுருந்தநிழலிலேஎந்தஉலகத்திலுங்கலந்தவஸ்துவாகியபரமசிவனெழுந்தருளியிருந்தபடிகண்டு மனமகிழ்ச்சியடைந்து விளங்கப்பெற்றதங்களுடையகண்ணீரைச்சொரிந்து கைகுவித்துமுகமலர்ச்சியடைந்தபெரியதபோதனர்களைப்போல உள்ளேநெகிழ்ந்துதேனாகிய நீரைசசொரிந்து அரும்பாகியகைகளைகுவித்துமலர்ந்தன தாமரைகள்-எ-று

ஆனறபயனபிறருகரவகததினிமையுளதாகத
தோன்றியகலலறிவினர்போறறுவன்றியெழுந்தனகன்ன
லேன்றகுலமாதாதமதிறைவாமுகநாடிலவா
வான்றகையநிலைபோலவுளைநதுவிளைநதனசெங்கெல்.

இ-ள். தமக்குள்ளே நிறைந்தபிரயோசனத்தை அன்னியர்புசிக்க உள்ளேஇனிப்புள்ளதாகததோன்றிய கல்வியறிவாளர்கள்போல்இனிப்புள்ளரசம்நிறைந்துநெருங்கியெழுந்தனகருப்புகள் நல்லகுலத்திலே பிறந்தகற்புடையஸ்திரீகள்தங்கள் புருஷனைக்கண்டால மேன்மையாகிய அவர்கள் தன்மைபோல் செந்நெல்களெல்லாந்தலைவணங்கிவிளைந்திருந்தன-எ-று. (௨௭)

முலைக்கிரியுங்கருங்கூந்தன்மொய்வனமுமாரணுக
கொலைப்புருவவெஞ்சாபங்குனித்துவிழிக்கணையேவி
நிலைப்படுதற்பொருட்டேநகின்சக்துலவீனெறியிற
றலைப்படுவோர்தமைவருத்துந்தன்மையினர்வயன்மாதர்.

இ-ள். பன்னஸ்திரீகள்தங்களுடையஸ்தனமாகியமலைகளையுங் கரியகூந்தலாகியநெருக்கியகாடுகளையும் கோட்டைகளாகக்கொண்டு கொல்லுகின்றபுருவங்களாகிய வெவ்வியவில்லுகளைவளைத்துக கண்களாகியபாணங்களைத்தொடுத்து அழிவற்ற கல்லவபொருளைத்தேடிநினைக்கு நெடியதபோமார்க்கத்திலே செல்வாராகிய மாணிக்கவாசகரை வருந்துகின்ற குணத்தையுடையாரானார்-எ-று. (௨௯)

வேறு.

இன்னவகைமன்னிவளர் காவமெழினமேவுங்
கன்னல்வழனுந்திகழ்தல் கண்டுவகைகொண்டே
மன்னனுடலம்பெறவினிப்புவியில்வாரா
யின்னவாபெருந்துறைவளம்பதியில்வந்தார்

இ-ள். இந்தப்பிரகாரம் நிலைபெற்றுவளர்கின்றசோலையும் அழகுபொருந்தியகருப்பங்கழனியும் பிரகாசித்திருந்தலைப்பார்த்து மகிழ்ச்சியடைந்து தனபதனுக்கிடமாகிய தேகத்தைப்பொருதற்கு இனிப்பூமியிலே வாராதமாணிக்கவாசகர் வளங்களையுடைய திருப்பெருந்துறையில்வந்து சேர்ந்தார்-எ-று ()

மாதவர்மிகும்பதி புகுந்துழிமருங்கே
காதலுறைதண்டலையி னன்குபுனைதொண்ட
ரோதுறுசிவாகமவொலிப்பொலிவுகேளா
யாதிதென்திருந்துறையினேவலாகவென்றார்

இ-ள். மகத்தாகியதபோதனர்நிறைந்துள்ள திருப்பெருந்துறையிலே புகுந்தவிடத்திலே அருகேகுருமூர்த்தமாய்ப் பரமசிவனெழுந்தருளி யிருக்குஞ் சோலையினிடத்திலே நன்மைமிகுந்த அடியார்களடிக்கின்ற சிவாகமங்களினுடையசத்தத்தைக்கேட்டு இதுவென்னசத்தம் தெரிந்துவந்து சொல்லுங்களதாகவேயென்றார் மாணிக்கவாசகர்-எ-று. (௩௧)

சென்றவர்கள்வந்துசிவபத்தர்பலர்சூழக்
கொன்றைமுடிவைத்தருணவெற்பைநிகரொப்பார்
நின்றதொர்குருந்தமர நீழலிலிருந்தா
ரென்றலுமகிழ்ந்தனரினிப்பிறவியில்லார்

இ-ள். அப்படிச்சொல்லக்கேட்டுப் போய்ப்பார்த்த தூதர்கள்வந்து அநேகம் அடியார்கள் தம்மைச்சூழ்ந்திருக்கச் சடாமுடியிலே கொன்றைமாலிகைதரித்தருணமலையாகிய பரமசிவனுக்கு ஒப்பானஒருபெரியவர் அங்கேயிருக்கின்றஒருகுருந்தமரநிழலிலேதானே இருக்கின்றாரென்றலும் மகிழ்ச்சியடைந்தார் இனிப்பிறவியில்லாராகிய மாணிக்கவாசகர்-எ-று (௩௨)

ஏவலருரைத்தமொழிகேட்டரியெயனு
மாவலொடுசெவிவின்பமார்ந்துமலர்ந்து

பெரியமணிச்சிவிகைவிட்டினிதிழிந்தே
தேவர்பரவும்பரம தெய்வசபைகண்டார்

இ-ள். தூதர்கள்சொன்னசொல்லைக்கேட்டுக்குருமூர்த்தமாயெழுந்தருளியிருக்கின்ற பரமசிவனைச்சேரவேண்டுமென்கிற ஆவலுடனேஅந்தச்சோலையிற்சேர்ந்து மனமலர்ச்சியுடனே தாமேறிவந்த ரத்னசிவிகையினின்றும்இனிமையுடனேஇழிந்து தேவர்களால் வணங்கப்பட்ட மேலாகிய தெய்வசபையைக்கண்டார் திருவாதவூரர்-எ-று (௩௩)

வேறு.

அண்டமெலாங்கடந்தபொருள்பகருநூலி னளவுரைப்பார்தெளிந்தயவராயவராகித், தொண்டுபடுமடியாரத நூற்றெண்பான்மேற் றொண்ணூற்றொன்பானெனவுந்தொகுதிசூழ, வொண்டொடியங்கொன்றிருப்ப விருப்பாலெய்தியுடனுமைத்துச்சிவஞானமுணர்வாரன்பு, மண்டியநெஞ்சினில வணங்கிவணங்காபோல மந்திரியாமேன்மையுடன்வந்துநின்றார்.

இ-ள அண்டங்களெல்லாங்கடந்த பொருளாகிய கடவுளாற் சொல்லப்பட்டவேதாகமங்களுடைய அளவைகளைச்சொல்லுவாரும் அவைகளைத் தெளிந்துஆராமைபடுவோரும ஆராய்வாருமாகி அடிமைப்பட்டமடியார்கள்தொளாயிரத்துத் தொளாயிறறொனபதுபோகள சூழும்படி உமாதேவியை யொருபாகத்திலேயுடைய பரமசிவனெழுந்தருளி யிருக்க விருப்பத்துடனேஅவ்விடத்திலடைந்து அன்புபெருகிய மனத்தாலவணங்கிக் காயத்தால்வணங்காதவர்போலமேன்மையுடனே வந்துநின்றார் உடனே சிவஞானத்தைப்பெறுவராகிய மாணிக்கவாசகர்-எ-று, (௩௪)

உருத்திராக்கத்திருமணியையிலங்குகாதி, லொண்சிரத்திறகந்தரத்திலொளிகொண்மார்பிற், கரத்திலணிந்திலகுதிருமுண்டமங்கி கணகரந்த கன்னுதலமேறகவின்சாதகித், திருநிகழும்வேதியனாம்பொன்மேனிதிகழ்வதுகண்டகமகிழ்வாரசெங்கைமீது, பொறுத்தமுறும புத்தகமேதையாவெனனப் பொய்ம்மையிலாசசிவஞான போதமெனறார.

இ-ள். அழகியருத்திராட்சத்தை விளங்குகின்றசெவியிலும்ஒளியையுடையசிரசிலும் கண்டத்திலும் விளங்குகின்றமார்பிலும் கையிலுமணிந்து ஒளியையுடையவிபூதியை திரிபுண்டரமாக அக்கினிக்கண்ணையொளித்தநல்லநெற்றியிலே அழகுபெறத்தரித்துச் சிறப்புப்பொருந்தியவேதியருடையஅழகிய பொன்னையொத்த திருமேனிப்பிரகாசிப்பதைக்கண்டு மனமகிழ்ச்சியுறுவராகியமாணிக்கவாசகரானவர்அவரைநோக்கி ஐயா, சிவந்ததிருக்கரத்திலேபொருந்தியிருக்கின்ற புத்தகம் என்னவென்றுகேட்க, அப்பெரியவர் மெய்ம்மையானசிவஞானபோதமென றருளிச்செய்தாரென்றவாறு. (௩௫)

என்றதுமேசிவமேஞானமேஇலக்கியமேபோதமேதியம்புவீரோ,
வன்றுவடநிழலில்வந்திருந்தார்நீரே யடியேனுமுமக்கடிமையாவேனென்ன,
நின்றசிவமொன்றதனைத்தேர்தன்ஞான நிகழ்போதந்தேர்ந்ததனைத் தெளித
லாமென, வென்றியனற்பொருள் வினவிநிற்பார்சிந்தை யுருகும்வகையுரை
செய்தாருவமையிலார்.

இ-ள். சிவஞானபோதமென்று அவர்அருளிச்செய்தவுடனே சிவமாவதென்ன-ஞானமாவதென்ன-விளங்குகின்ற போதமாவதென்ன - இவைசொலவீரோ-அன்று அக்காலில்கல்லாலவிருட்சத்தின்கீழே யெழுந்தருளியிருந்தவர் நீரோ அடியேனும் உமக்கடிமையாவேனென்று சொல்லச் சிவமென்றது ஒப்பற்றமெய்ப்பொருள், ஞானமென்றது அதனைத்தெரிதல், போதமென்றது தெரிந்ததைத்தெளிதலாமென்று பொருந்தியஇந்த மேலானபொருளை வினவிநின்றதிருவாதவூரருடைய மனமுருகும்படி அருளிச்செய்தார் தமக்கு நிகரில்லாதகுருமூர்த்தமாயவந்த பரமசிவனென்றவாறு (௯௬)

வேறு

உத்தமரின்னவாறின் றுரைத்தலுமவருநாலாஞ்
சத்திநிபாதமெய்துதன்மையராதலாலே
யத்திருமன்றுளாடுமையரிங்கென்னையாள
வித்திருமேனிகொண்டா ரென்பதுமனத்திலெண்ணி

இ-ள். உத்தமனாகியபரம்சிவனானவர் இந்தப்பிரகாரஞ் சொன்னமாத்திரத்திலேமகிழ்ச்சியடைந்து இருவினையொப்புமலபரிபாகமடைந்து அதிதீவிரபக்குவமடையுந்தன்மை பொருந்தியவராகையினாலே அந்தப்பொன்னம்பலத்திலே திருக்கூத்தாடுகின்ற ஐயரோ-இங்கேயென்னை யாளும்பொருட்டுக் குருவடிவமாகிய இந்தத்திருமேனித் தாங்கிக்கொண்டு வந்தாரென்று மனத்திலே நினைத்தார் மாணிக்கவாசகர்-எ-று (௯௭)

மின்னுநிலையில்லா விழுப்பொருளியாவும்வேண்டே
னுன்னடியிணைந்தகாயே னுறுபவமொழித்தல்வேண்டு
மென்னையினடிமைகொள்வாயெமதுயிர்க்கிறைவாவென்று
முன்னுறவணங்கிநின்றார்முகமெலாங்கண்ணீர்வார

இ-ள். மின்னலைப்போல நிலையில்லாத துக்கத்தைத்தருகின்றபொருள்களையாவையும்விரும்பமாட்டேன் உன்னுடையதிருவடியைச்சேர்ந்த அடியேனைப் பொருந்தியஜனனத்தை நீக்கல்வேண்டுமென்னை இன்றைக்கு அடிமையாகக் கொள்வாய் எங்களுடையவுயிருக்குஇறைவனேயென்று முன்னேபொருந்த வணங்கினார் முகமெல்லாங்கண்ணீரொழுகவென்றவாறு. (௯௮)

இவ்வகைபுகன்றமுன்ஞோன் முன்னூறவிரங்கிநிற்பத்
திவ்வியதாரமேயாங் செய்திடுமென்றுநாடி

யவ்வடியவரின்மிக்காரொருவரிவ்வுடைமைதன்னை
வெவ்வினையகற்றியாளவேண்டுமென்றிறைஞ்சிநின்றார்,

இ-ள், மாணிக்கவாசகரானவர் இந்தப்பிரகாரஞ் சொல்லிக் குருவடிவங்கொண்டுவந்த முன்னோனாகிப்பரமசிவனுடைய திருமுன்னே இரங்கிநிற்ப இவர் மோக்ஷவிருப்பங்கொண்ட அதிதீவிரபக்குவத்தையுடையவரென்று அறிந்து அந்த அடியார்களின் மிக்க ஒருவரெழுந்து இவ்வடியாருடைய பொல்லாதவினைகளை நீக்கி ரக்ஷிக்கவேண்டுமென்று வணங்கிநின்றாரென்றவாறு. ௧௬

கருப்புகுநிலையாதம்மேற்றன்னைநீசெய்துநெஞ்சிற்
பரப்பறுமிந்தத்தலவேண்டியபெத்தப்பரபாகங்கொண்டு
திருப்புனைமறையோர்போற்றத் தில்லையம்பலத்தேநின்ற
வருட்பரானந்தவாரியாந்தம்மைத்தந்நிலைசேர்ந்தார்,

இ-ள், இனியொரு கருப்பத்திலே சென்றுபிறத்தலில்லையாதவராகிய திருவாதவூரரிடத்திலேகிருபைவைத்து அவருள்ளத்தின் விரிவுநீக்கமிருத்தலவேண்டி தூக்கியபொன்னம்பலமான திருவடியைக்கொண்டு செல்வமிகுந்த தில்லைமூவாயிரவர் போற்றச் சிதம்பரத்திலே கனகசபையிலே நடனஞ்செய்கின்ற ஆனந்தமாகிய கிருபைக்கடலாகையினாலே அவர் வேண்டுகோளுக்கிசைந்தாரென்றவாறு, ௧௭

அத்தகுப்பங்கலோர்முன்னரலர்செய்யுமம்புசந்
மொத்தவாதம்மைநாடியுன்னையின்றடிமைகொள்ள
வித்தலத்தணைந்தோநீமுன்னியற்றியதவத்தினாலே
சித்தமிரங்கலவேண்டாமெனத்திருவாய்மலர்ந்தார்,

இ-ள், ஆயிரங்கிரணங்களைப் பரப்பிக்கொண்டுவருகின்ற சூரியன் முன்னேவிகசிக்கின்ற தாமரைமலர்போன்ற திருவாதவூரரை நாடிப் பார்த்து உன்னை அடிமைகொள்ளும்பொருட்டு நீ முன்சென்மத்திலே செய்ததபோபலத்தினாலே இந்தத் திருப்பெருந்துறைக்கு வந்தோம் மனஞ்சஞ்சலப்பட்டு இரங்குதலவேண்டாமென்று திருவாய்மலர்ந்தருளினார் குருசுவாமியென்றவாறு, ௧௮

வந்துநான்வறுமையுற்றேன்மாற்றெனதில்லையாரென்று
சிந்தையாகுலமுற்றன்னைக்கச்செழும்பொருளீதல்செய்வாராக
இந்தநாளிக்கவேண்டுமெனவிதியின்மையாலே
யந்தநாளிந்நாளாகவடிமைகொண்டருளவெண்ணி,

இ-ள், நான் மிகவும் வறுமையடைந்தேன் அதனைத்தீர்க்கவேண்டுமென்று மனோதுக்கமடைந்துவந்த வொருவன்கையிலே நல்லதிரவியங்

கொடுப்பவர்க்கு இந்நாள் கொடுத்தற்குரியசொன்றுபார்க்கும்விதியில்லாமையாலே அந்தநன்றாலே இந்நாளாக அடிமைகொண்டருள வெண்ணியென்றவாறு. ௪௨

அத்தகுதொண்டர்க்கெல்லாமதிபராமவரைநோக்கி
யித்தவமுடையோனெய்தும்பிடரொழித்தாளவிந்நாள
வித்தகவிதற்குவேண்டுவகருமநீவிரைவிற்செய்கென்
றுத்தமவடிவங்காட்டுமுண்மையாருரைத்தல்செய்தார்,

இ-ள், அப்படிப்பட்ட அடியவர்களுக்கெல்லாம் பெரியவராகிய குருவைப்பார்த்து இந்தத்தவமுடையவனடைந்த துன்பத்தைநீக்கி இவனை அடிமைகொள்ளுமநாள் இந்நாளாகும் ஆகையினாலே சதுரப்பாட்டையுடையவனே இதற்குவேண்டிய காரியங்களை நீ சீக்கிரத்திற்செய்வாயாகவென்று உத்தமவடிவங்கொண்ட உண்மையான குருவானவருளிச்செய்தாரென்றவாறு, ௪௩

முன்னவன்புகன்றவாறுமுயலுவமென்றேயந்த
மன்னுறுதவத்தினார்மிக்காரவகைமலர்த்தெரியலாலும்
பொன்னினிடையழுத்திமுத்தம்புனைந்தபலபட்டினாலு
மந்நெடுங்காவினூடங்கானபூங்கோயில்செய்தே

இ-ள், பரமசிவன் அருளிச்செய்தபிரகாரமுயன்றுமுடிப்போமென்று நிலைபெற்ற தவத்திலேமிகுந்த ஆந்தக்கணநாதர் விதம்விதமாகியபூமாலைகளாலும் பொன்னினிடையிலே யழுத்தியமுத்துமணிகளால் விளிம்புசெய்த பலவகைப்பட்டினாலும் அந்தநெடியசோலையினிடத்து அழகியகோயில்செய்தென்றவாறு, ௪௪

செய்தற்சேரியிலூடுசிறந்தவாசனமுஞ்சேர்த்து
மெய்த்தருதொண்டர்க்கெல்லாமிக்கவரிறைவற்சார்ந்து
கைதவமுடையார்நெஞ்சிற்கனவிலுங்காணநில்லா
மைத்திருக்களத்தாய்கோட்டஞ்சமைந்ததுவாய்ப்பவென்றார்

இ-ள், அப்படிச்செய்த நல்லகோயிலினிடத்திலே சிறந்தவொருஆசனமிட்டு உண்மையாகிய அடியார்களுக்கெல்லாம் மிகுந்த ஆந்தக்கணநாதர் குருசுவாமியினிடத்திற்சென்று வஞ்சனையுடையவர்கள்நெஞ்சிலேகனவிலுங்காணப்பெறாநீலகண்டனே கோயில்வாய்ப்பாகச்சமைந்ததென்றுசொன்னவாறு, ௪௫

ஆயிடைக்குடபாலவெற்பிலாதவன்காந்துஞ்ஞாலம
பாயிருள்பரந்தபின்புகடிகையோர்பதினைந்தாகி
மேயநல்லுயிர்களெல்லாம்விழிதுயில்பயிலுங்காலைத்
தூயதொண்டர்க்குமாயைதொலையுநல்லமையந்தோன்ற

இ-ள், அப்போது மேற்குத்திசையிலுள்ள அஸ்தகிரியிலேசூரிய
ன்மறைந்து உலகத்திலே யிருள்பரவிப்பின்பு பதினைந்து நாழிகைவே
ளையிலே உயிர்களெல்லாம் நித்திரைசெய்யும்போது பரிசுத்தராகிய
திருவாதவூரர்க்குமாயாமலநீங்குஞ்சமயம்வந்துதோன்றவென்றவாறு

இங்கிவர்தமடிமையாளுங்காலமீதென்றுதெய்வ
சங்கமத்தன்றுமுன்னோன் மஞ்சனச்சாலைசார்ந்து
குங்குமம்புழுகுசாந்தங்குழைத்துமெய்ம்முழுதும்பூசிக்
கங்கையினன்னீர்வாசங்கலந்தமென்பனிநீராடி.

இ-ள், இவ்விடத்திலே இவரை அடிமைகொள்கின்றகால மிதுதா
னென்றுதெய்வசபையைநீங்கிக் குருசுவாமியானவர் திருமஞ்சனசா
லைக் கெழுந்தருளிக்குங்குமமும் புனுகுஞ்சந்தனமுங்குழைத்துத்தி
ருமேனிமுழுவதும்பூசிக்கங்காதீர்த்தத்தாலும் வாசனைகலந்த குளிர்
ந்தநல்ல பனிநீராலும் ஸ்நானஞ்செய்தென்றவாறு,

மெய்ப்புனறுகிலாண்மாற்றிவிலைமதிப்பில்லாநல்ல
வெய்யபருஞ்சம்பட்டாடையுடுத்துயர்கோட்டமெய்திச்
செப்பிளமுலையாள்பாகனென்றிசையத்தனை நோக்கி
யப்பெருந்தவிசின்மேலங்கழகுறவிருந்தபின்னர்

இ-ள், திருமேனியிலே பொருந்தியநீராத்திருவொற்றுடையாய
லொற்றி ஒருவராலும் விலைமதிக்கப்படாத நல்லழகுபெற்ற சிவந்தபட்
டுபரிவட்டத்தையுடுத்து உயர்ந்தகோயிலிற்சென்று செப்பையொத்த
இளமைபொருந்திய முலையையுடைய உமாதேவிபாகனாகிய கடவுள்
தெக்ஷிணாபிமுகமாகஅந்தப்பெரிய ஆசனத்தின்மேல் அழகுபொ
ருந்தவிருந்தபின்னென்றவாறு, சஅ

அண்டருமலர்தூயேத்துமன்பருந்தூயநீராடி
வெண்டுகில்புனைந்துநீறுவிளங்கியமெய்யராகி
முண்டகமலர்த்தாள்வைத்துமுத்திதந்தருள்மேனி
கொண்டவர்திருமுன்சென்றுகுருகியங்குவகைகூர்ந்து

இ-ள், தேவர்களும் மலர்களைத்தூவியேத்துகின்ற திருவாதவூரரு
ம்பரிசுத்தமாகிய நீரிலே ஸ்நானம்பண்ணி வெள்ளைவஸ்திரமுடுத்து
க்கொண்டு விபூதிதரித்த தேகத்தையுடையவராய்த்தமதுசிரசிலேதா
மரைமலர்போன்ற திருவடிகளைவைத்து மோக்ஷங்கொடுக்கத்திருமே
னிகொண்டுவந்த ஆசாரியருடைய திருமுன்னேயிருந்து மகிழ்ச்சிய
டைந்துசேர்ந்தென்றவாறு, சகூ

விண்ணவர்திபன்பொற்றாள்விளக்கியர்ச்சனைமுன்செய்து
தண்ணமர்பனிநீர்த்தோய்ந்தசாந்தமெய்ம்முழுதுஞ்சாத்தி

வண்ணமென்கழுநீர்மாலைவளம்பெறவணிந்தபின்னர்க்
கண்ணுறுபரிவுதீரக்கண்டுளமகிழ்ச்சிகொண்டு

இ-ள், தேவர்களுக்கிறைவனாகிய பரமசிவனுடைய அழகியதிருவடிகளுக்குமுன்னே அபிஷேகஞ்செய்து அருச்சித்துக்குளிர்ச்சிபொருந்தியபனிநீராவிய சந்தனத்தை அழகியதிருமேனிமுழுவதுமப்பிச்செங்கழுநீர்மாலையை வளம்பொருந்தத் தரித்தபின்பு கண்களைப் பெற்ற ஆசைதீரக்கண்டு மனமகிழ்ச்சியடைந்தென்றவாறு,

பருப்புடனொளிகோப்பமுச்செழுந்தருவலசோத்துச்
சருக்கரைகலந்தபாலிற்சமைத்தநல்லமுதந்தன்னை
யிருத்தியகனகக்காண்மேலிலங்குபொற்கலத்தினின்மீது
விருப்பொடுபடைத்துநெய்யும்பக்கமுங்கனியும்பெய்து,

இ-ள், பருப்புடனே செழுமைபொருந்திய தேங்காயத் துருவலும்சோத்துச் சருக்கரைகலந்த பாலிலேசமைத்த திவ்வியமாகியதிருவமுதினைப்பொன்னினாற்செய்தகாலியினமேல பிரகாசிக்கின்றபொற்கலத்திலே அன்பினுடனேபடைத்து நெய்யுமவாழைப்பழமும் மாம்பழமும் பலாப்பழமும்பெய்தென்றவாறு, ௫௧

மாலயனைவலாரிமற்றவானவர்பிழைக்கமுன்னா
ளாலமுண்டவனேநல்லமுதமுண்டருள்வாயென்று
சீலமாமகிழ்ச்சிபொங்கச்சிந்தையினுமைபங்கால
காலனுமுணவேநேர்ந்தருமலர்க்கழிநீன்பின்னர்

இ-ள், மகாவிஷ்ணுவும் பிரமதேவனும் இந்திரனும் மற்றதேவர்களும் பிழைக்கும்படி முன்[illegible]ளிலே விஷத்தையுண்ட கடவுளேநல்ல அமுதையுண்டருள்வாயென்று நல்லருளும் மகிழ்ச்சியும் பொருந்தியமனத்தோடு வேண்டிக்கொள்ள அவவேண்டுகோளின்படியேபரமசிவன் அமுதுசெய்து சலத்தினாலே கைபூசிய பின்னென்றவாறு,

வெள்ளிலைபழுக்காயநலகிளைதருதூபதீபங்
கொளளுநறுநேசுகாட்டிக்கோலநனீறுசாத்தித்
தெளளொளிவிளக்குமாடிநிருந்தமுன்றிசழவிதடெங்கு
முள்ளவர்முடிமேலோங்கவொண்குடைகவித்தல்செய்து.

இ-ள், வெள்ளைவெற்றிலையும் பாக்குங்கொடுத்து வாசனையைத்தருகின்ற தூபதீபஞ்செய்து அழகியதிருநீறுதரித்துத் தெளிந்த ஒளிவிளங்குகின்ற கண்ணாடிகாட்டி எங்குமுறைந்தவராகியபரமாசாரியருடையமுடியின்மேல் ஒளியையுடைய பட்டுக்குடை பிடித்தென்றவாறு, ௫௩

கற்றைவெண்கவரிசெம்பொற்காம்புநீடாலவட்டம்
பற்றியன்புடனேவீசிப்பரிவுடனடியார்சூழப்
பொற்றவிசிடையேமேவும்புண்ணியன்றிருமுன்பைம்போ
துற்றகையுடனேவாதவூரரங்கிருந்தபின்பு,

இ-ள், கற்றையாகிய வெள்ளியசாமரையும் சிவந்தபொன்னினாற் செய்த நெடியகாம்பையுடைய ஆலவட்டமும் எடுத்து அன்புடனே வீசி அடியார்கள்சூழப் பொன்னினாற்செய்த ஆசனத்திலே எழுந்தருளியிருக்கின்ற புண்ணியசொரூபராகிய தேசிகோத்தமருடைய சந்நிதிமுன்னேமலரை இரண்டுகைகளிலும் ஏந்திக்கொண்டு திருவாதவூரரங்கிருந்தபின்னென்றவாறு, ௫௪

மந்திரம்பதங்களவன்னம்புவனங்கடத்துவங்க
ளைந்துநற்கலைகளென்னுமாறுவகையகற்றியந்தச்
சிந்தனைக்கரியமேலைச்சிவத்துடனறிவுசேரப்
பந்தனையொழிவார்தம்மேற்பரிந்தருட்பார்வைசெய்து,

இ-ள், பதினொருமந்திரங்களும் எண்பத்தொரு பதங்களும் ஐம்பத்தோரக்ஷரங்களும் இருநூற்றிருபத்துநாலு புவனங்களும் முப்பத்தாறுதத்துவங்களும் ஐந்துகலைகளுமாகிய ஆறு அத்துவாக்களையுநீக்கி முடிவாகிய மனத்துக்கெட்டாத மேலான்மைபொருந்திய சிவத்துடனே அறிவுபொருந்தப் பாசக்கட்டுக்குள் நீங்குவாராகியமாணிக்கவாசகர்மேல் அன்புவைத்துக் கிருபாநோக்கஞ் செய்தென்றவாறு, ௫௫

எவர்க்குமெய்ஞ்ஞானமாமஞ்செழுத்தையுணர்த்தவேண்டி
யவத்தொழிலகற்றியாளுஞ்சிவத்தைமுன்னுகமாறித்
தவப்பெருவடிவங்கொண்டார்தண்டமிழ்ப்பாடுமன்பர்
செவிப்புலன்வழியேசிந்தையுறத்திருவாய்மலர்ந்தார்,

இ-ள், பெரியதவவடிவங்கொண்டெழுந்தருளிவந்த ஞானதேசிகர் அதிதீவிரபக்குவரெவர்களுக்கும் உண்மையறிவாக விளங்கும்படி பஞ்சாக்ஷரத்தை அறிவிக்கவேண்டி அவத்தொழிலை நீக்கியாளுகின்ற சிவத்தை முன்னுகமாறிக்குளிர்ந்த தமிழ்வேதம்பாடுகின்ற அன்பராகிய திருவாதவூருடைய காதினிடத்தே மனத்திலே பொருந்தத் திருவாய்மலர்ந்தருளினாரென்றவாறு, ௫௬

வேறு,

விரவுமஞ்ஞொருவடிவுகொண்டணைவார் விழித்தபார்வையின்வி
ளக்கின்முன்னிருள்போற், சுருதிசெந்தமிழாக்கியமொழியாதொலை
விலாதவெந்துயர்ப்பவமொழிந்து, பாவிமென்பதம்பணிபவாயடிமே

ற்படியவிழ்ந்தனர்வாழ்ந்தனர்பரிவான், மருவுமிங்கிவர்சென்னியின்மிருந்தான் மகிழ்வைத்தனன்மதிநதிமுடிப்பார்,

இ-ள். கலந்தஅன்பே ஒருவடிவமாகக்கொண்டுவந்தருளிய பரமசிவனுடைய பார்வையினாலே விளக்கின்முன்னே யிருள்கெடுவதுபோலவேதத்தைத்தமிழிற்பாடிய மாணிக்கவாசகர் நீங்காதவெவ்வியதுன்பத்தைத்தரும் பிறவியொழிந்து துதிசெய்ய மெல்லியதிருவடியை வணங்குபவராய்ப் பூமியிலேபடியவிழுந்து வாழ்ந்தார் பத்தியையுடைய இவர்துசிரசிலே மகிழும்படி இரண்டுதிருவடியுஞ் சூட்டினார் சந்திரனையுங் கங்கையையுமுடித்த பரமசிவனென்றவாறு, ௫௭

மன்னுமுன்னுளவுயிர்க்கரணங்கண் மாய்ந்துபொய்ம்முதலறிவிழுந்தருளார்-முனனுமின்னருட்சிவகரணங்க டோன்றலாற்சுகவறிவெழுந்தன்-சென்னியின்மிசைமேவியபாதந் திருந்துகண்ணிணை சேர்த்திருகரத்தா- லுன்னலசெய்திடுமிதயமேலணைத்துவகைகூர்ந்துமெய்யுணர்ச்சியிலெழுந்தார்,

இ-ள் நிலைபெற்ற முன்னிருந்த பசுகரணங்களெல்லாங் கெட்டுதிருவருளினாலே பொய்ம்முதலாகிய முன்னறிவுபோய்க்கிருபையிருந்தசிவகரணங்களாகத் தோன்றலால் சுகவறிவு அதிலேயுண்டாய்சிரசின்மேலே வைத்தபாதத்தை இரண்டுகண்களிலுஞ்சேர்த்துக்கொண்டுஇரண்டுகையினாலும் நினைக்கின்ற இதயமாகியமார்பிலே அணைத்துக்கொண்டு மனமகிழ்ச்சியடைந்து மெய்யுணர்வுடனேயெழுந்தார் திருவாதவூரரென்றவாறு ௫௮

மேலைப்பத்தலத்திந்திரனிமையோர் மிசைத்தலாம்பொழிவிரைமலர்மழையே-போலவித்தலம்புதையவந்துதிரப் பூக்கருங்கணீர்தருமகிழ்ச்சாலநற்குணம்புனையுநல்லடியார்தங்கள்செங்கையிலொலியலுந்தயங்கு-மாலவட்டமுங்கவரியுமிருபா லசையமாமுனிகணமடிவணங்க

இ-ள் மேலுலகத்திலிருந்து தேவேந்திரனும் தேவர்களும்மேலாதாவுகின்ற வாசனைபொருந்திய புட்பமாரிபோல இந்தப்பூமிமறையும்படி அச்சோலையிலிருந்து மலர்களுதிரப் பூக்கண்களும் கண்ணீர்தரும மனமகிழ்ச்சியடைய மிகுந்தநற்குணத்தையுடைய நல்லடியார்கள்தங்களுடைய சிவந்தகைகளிலே தொண்டமாலைகளும் பிரகாசிக்கின்ற ஆலவட்டங்களும் வெண்சாமரைகளும் இரண்டுபக்கங்களிலும் அசைய மகத்தாகிய முனிவர்கூட்டங்களெல்லாம் வணங்கவென்றவாறு- ௫௯

இருந்தவப்பெருங்கருணையனெதிரே யெய்தியன்புடையியல் பி
னரிறைஞ்சிச-சிரந்தனிற்றம திருக்காங்குவியாச் சிறந்தபேரருணிறைந்
த செயனைகயராய-வருந்திவித்தலமகழ்ந்து மேற்பறந்து மாலயன்றெரு
வரியநீயடியே-னருந்துயரபவமகற்றவிங்குருவமாவதேயெனவழுது
நெஞ்சழிந்தார்.

இ-ள். இப்படியிருந்த அந்தப்பெரிய கிருபையுடைய கடவுளெதி ரேசேர்ந்து அன்புடைய திருவாதவூரர் நமஸ்கரித்துச்சிரசினிடத்திலே தம்முடைய இரண்டுகரங்களையுங் குவித்துக்கொண்டு சிரப்புப்பெற்ற அதிக ஆசைநிறைந்தவராய் வருத்தப்பட்டு இந்தப்பூமியைத்தோண்டியும் மேலேபறந்தும் மகாவிஷ்ணுவும் பிரமனுங்காணவேண்டுந்தற்கரியநீர் அடியேனுடைய அரிய துயரஞ்செய்கின்றபிறவியைநீக்குதற்கு இங்கே குருவடிவங்கொண்டுவந்தது என்ன அருமையென்று அழுது மனமுருகினரென்றவாறு ௬0

ஐயனேயெனையாண்டருளபுரியுமாதியேயுழையணி மழுவிருக்
கு-கையனேகொடிய காலனைமுனியுங் காலனேயிருகணணினுண்மணியே - செய்யனேயடிபோற்றியென்பெரிய செல்வமேயடிபோற்றி
பொய்யினரக்ம-பொய்யனேயடிபோற்றி யெவ்வுயிர்க்கும்போதமேய
டிபோற்றியென்றழுதார்

இ-ள் ஐயனேயென்னை ஆண்டு கிருபைசெய்யும் ஆதியே அழகிய மானுமழுவுமிருக்குங் கையையுடையவனே கொடியயமனைக்கோபித்துதைத்த திருவடியையுடையவனே என்னுடைய இரண்டுகண்களிலேயிருக்குமணியே சிவந்தரூபத்தையுடையவனே உன்னுடைய பாதங்களைப்போற்றி என்னுடையபெரியசெல்வமே உன்னுடையபாதங்களைப்போற்றியென்றழுதாருகினரென்றவாறு ௬௧

அறநெறிஞான்றிருள வைகறையெனும்போ தணைதலும்பானரு
ட்குருவடிவர்-துற்றசாந்துடன்முயங்குசெங்கழுநீர தொடையினை
சுமைபொறுதெனத்துளங்கிக்-கறுமான்கரத்தேந்தியவிறைவன்கவின்
கொண்மாரபணி மலர்த்தொடைகழித்தக-குற்றவான்றுயரகன்று நல்
லடியாருடன்விளங்கினாகளங்கமொன்றில்லார்,

இ-ள் அன்றைத்தினம் இருள்நீங்கி விடியற்காலம் வருதலும் அருளையுடைய குருவினது திருமேனியானது நிறைந்தசந்தனமும்சேர்ந்தசெங்கழுநீர்மாலையும் சுமையாதலிற் பொறுக்கமாட்டாதென்று கலங்கிமான்கன்றையேந்திய கையையுடைய அக்கடவுள் அழகுபொருந்தியமார்பிலே அணிந்தசந்தனமாலைமுதலியவைகளைக் களைந்து தம்முடையதுன்பங்களெல்லாம் நீங்கி நல்லடியார்களுடனே விளங்கியிருந்தார்களங்கமொன்றிலலாத மாணிக்கவாசகரென்றவாறு ௬௨

வாதவூருறையிறைவர்தம்பெரிய மாயைபோலிருண்மாய மந்துபி ன்வைவாபாற-போதமாகிவந்துறசுடா விளக்கமபோலவேயினம்புணர் பிறசேரன்ற-வேதநாதர்தமிருபத மிறைஞசுமெய்ம்மையாளரைவேறு கொணடிருததன-கோதுமாகமத்திறிவருமபொருளை யுரைககவேதிகை நதாரமுரைததார

இ-ள திருவாதவூரிலேதஙகிய தலைவரான மாணிககவாசகருடைய பெரிதாகிய அஞஞானநீஙகினதுபோல இருளநீஙகியபினபு அவரிட ததிலே விளஙகிய சிவஞானமெனனுந தீபமபோல சூரியனகடலிலே உதயமாக அபபோதுதமது இரணடுபாதஙகளையும வணஙகிய திரு வாதவூரரை வேறேஅழைததுககொணடுபோயிருநது அஙகேசிவாகம ததிற சொலலப்பட்ட அறிதறகரியபொருளைசசொலல நினைநதனா வேதகாயகராகியும முன்னாலே ஜனகாமுதலிய நாலவருககுங கல்லா லின்கீழிருநது தருமமுரைததவராகியும விளஙகியபரமாசாரியரொன் றவாறு சுங

களிமபுதோயநதசெம் பெனவுனைமருவுங கருமைகூர்மலஙகண டதுகலககும-பளிஙகுபோனறதுன்றனமையமமலத்தின் பறறினாலுட ல்பலவெடுததுழனருய-வளஙகுலாமபுவனநதொறுஞசெயமுன வல வினைபபயனவருமுறைநெறியே-யளநதுநாநதாநுகாநதுமேமறுகாயமா கவியேதிரிநதனைமனவழுககால

இ-ள இருளவடிவாகிய மலமானது களிமபுதோயநத செமபைப் போல அனுதியே உனனைபபொருநதியிருககுமஉன்னுடையதன்மை யானது எதிரிட்ட வனனஙகளைபபற்றுகினற பளிஙகுபோலாம அநத மலததினது சமபந்தத்தால அநேகதேகஙகளைஎடுதது உழன்றுயவள மபொருநதிய புவனஙகள்தோறுஞசெயயுமஉன்னுடைய வல்யவினை பபயன்கள வருகிறகிரமததினவழியே அளவைசெயது நாம நியதிசெ யயநீ அதனைப்புசிதது அப்படிபுசிககுமிடதது ஆகாயமியவினையையும விளைததுககொண்டுதிரிநதாய் அஞஞானததினால்-எ-று சுச

செயதுளோாபெறுமவினைப் பயனொருவா சோக்கவேண்டுவதி ல்லெனினிலமே-லெய்துமேவிதுநுகாவதென்றறிவதிலலைநீவினையெ னிறசடமறியா-வுயதலாகியவன்னெறியுணாா வுனையுமுன் வினைப்பய னையுமுணாநது -மைதவாமலமொழித்தருள புரியாவாழ்வுநல்குவம யாமெனமதிப்பாய்

இ-ள வினைகளைசசெய்த ஆக்மாக்களுக்குவினைப்பயனை ஒருவர் இடை நின்றுசேர்க்க வேண்டுவதில்லை யெனின் சிற்றறிவுடையவனுனபடி

யால் மேல்வருவதின்னதென்றும் புசிப்பதின்னதென்றும் அறிந்து சேமமாட்டாய் வினைதானறிந்து சேருமோவென்றால் சடமாதலின் அறியாது பிழைகளாகிய வல்வழியையறியாத உன்னையும் உன்வினைப்பயனையும் அறிந்து இருளவடிவாகிய மலமொழித்துத் திருவைச்சேர்க்காதேமாக்கூத்தைத்தருவோம் யாமென்று மதியாயாகவென்று அநுக்கிரகஞ்செய்தார் பரமாசாரியரென்றவாறு, ௯௫

எவர்க்கும்பிம்பமுஞ்சேரவிக்கொழியா திருப்பதென்னெனின்
னல்கொளபிறவிக், கலக்கெனுந்தமதிந வினைப்பயனுந்தலைப்புகும
பொருளெனவிறைகொத்தா, லவர்கடுநம்பதந் கொடுத்திடரொழிய
போ,மதுவிலாதவரான்றியவுளவும பவப்பொருகடல்வீழவர்தா
மபருவம், பாக்குமெம்மையுக்கமைமையும்பாரார,

இ-ள யாவர்க்கும் இந்தமலத்தைச்சேர நீக்காமல் திருப்பதுஎன்னெனில் துன்பத்தைக்கொண்ட பிறவியினுடைய சமுத்திரமாயிருக்கின்ற தங்களுடைய இருவினைகளும ஒருதுலையிலிருக்க அதிலுமிடப்பட்டபொருளைப்போலே ஒத்தகாலமாகுந்தகுமாத்திரம நம்முடைய பதத்தைக்கொடுத்து அப்பிறவித்துன்பத்தை நீக்குவோம அப்படியிருவினையொப்புவாராதவர்கள வருத்தப்பட்டு அவ்வளவுகாறும் பெரியபிறவிக்கடலில் விழ்ந்தலைவார்கள தங்களபக்குவத்தைப்பார்க்கின்ற பதிபாகியகமமையும பசுவாகிய தம்மையும விசாரியாரகளென்றவா

என்றுகூடியபருவமென்றியம்பியாமிருந்துந் திடமொடாறு
மிறைஞ்சி-னெறிசேர்சிவபுண்ணியமபுரியு-ங்கமைமயானாதுணுக்குமெ
னறறி கீ-மனறிலாமனவெமமியல புனக்குரைகக்ன்-ம லொருவுருஞன்
றவறறருவ-மொன்றுபேரொளியொன்றருவுருவ-மொவ்றுகாணருஞ
ருவமென்றுணராவாய

இ-ள, என்றைக்கிக்கூடும இக்கப்பருவமென்று சொல்லுமிடத்தில யாமிருக்கின்ற ஸ்தலங்களைச்சேர்ந்துபோய எம்மைத்தொழுது சிவஸ்தலத்தில் வசித்தல்முதலிய சிவபுண்ணியம பண்ணியுஞ்செய்யும நல்மனத்தில அவ்விருவினையொப்புவருமென்று நீபறிவாயாக கனகசபையிலே விளங்கிய எம்முடைய இயல்பு உனக்குச்சொல்லுமிடத்தில் குறறமில்லாதஎமது சொருபமொன்று அவற்றில அருவமொன்று அருவுருவாகிய அருவுருவமொன்றுமொன்று அருளையுடைய உருவமொன்றுஎன்றறிவாய க வென்றருளினர் பரமாசாரியரென்றவாறு

இக்கூறொன்றினிலுருவுணக்கிய-மிசைக்கபேரருளியம்புமிவ்வுரு
வும-வந்தியாவரும்பணிவதறவெளிதாய்- வரமெலாந்தாவருமருவுருவ
ம்-பந்தமாகியமலவிருளகற்றும் பசுபதியுளபலவுயிர்க்குமிரா- யாத
மைந்தினனமயமதுமொளியா-மமலமாகுமலவனகூறுமாகவம்.

இ-ள் இக்கூறின்றுபேதத்திலே உருவமாவது உனக்குஅறியும்படியாக உபதேசித்தருளிய இந்தகுருவடிவமாம் அருவுருவமாவது எல்லாரும்வந்து வணங்குதற்கு எளிதாயிருந்து வரங்களெல்லாங்கொடுக்கும் இலிங்கவடிவாம் அருவமாவது பாசமாகிய மலவிருளை நீக்குகின்ற கோடிசூரியப்பிரகாசமாய எல்லாவுயிருக்குமிராய முடிவுமுதலுமின்றி அளத்தற்கரிய ஒளியாய நின்மலமாயிருப்பது மென்றவாறு

ஆலவாலெமக்காமலாமரங்க- ளாக்கலம்மலர்பறித்தமைமலர்த்
தொடையலாவகைத்தாரபலசமைத்த- றணபயிலெம்புகழ்ச்சாற்றலன்புடனு-
மேவுமாலயமலகிடன்மெழுகல-விளக்கலவிளக்கிடுதலெம்மடியார்க-
கேவலானவைசெய்யுமிச்சரிதை-யியற்றவல்லவர்க்கெமதுலகளிப்பேர்

இ-ள் ஆசையினாலே நமக்காகிய புட்பமரங்களை வைத்தலும் அந்தப்புட்பமரங்களைக்கொய்தலும் அம்மலர்களினாலே தொடுத்தியல்லாமல் அனேகமாலைகள் செய்தலும் நீங்குதலில்லாத நம்முடைய கீர்த்தியைச்சொல்லுதலும் நாமிருக்கின்ற கோயிலுக்குத்திருவலகிடுதலும் திருமெழுகிடுதலும் பிரகாசிக்கும்படித்திருவிளக்கிடுதலும் எம்முடைய அடியார்களுடைய ஏவற்பணிகள் செய்தலுமாகிய இந்தச்சரிதைத்தொழிலைச்செய்ய வல்லவர்களுக்கு எமது சிவலோகத்தில்வாழ்கலாகிய சாலோகபதவியைத் தருவேமென்றவாறு ௬௩

கந்தவர்க்கமுதலிளாமணப்புகையும் கவின்கொடீபமும்புனிதமஞ்சனமுத-கொர்கனிமுந்தன்மலருமற்றுள்வும கொண்டுமாயையின்குணத்திலொன்றிலா-யைநாதுசுகத்தசெய தகம்புறமிறைஞ்சியங்கியின்க-ண்கழித்தருளவழிதின்-றிந்தநற்பெருங்கிரியையன்புடனேயியற்றவல்லவரெமதருகிருப்பார்,

இ-ள் வாசனைத்திரவியங்களும் வாசனையுள்ள தூபவர்க்கங்களும் அழகினையுடையதீபங்களும் பரிசுத்தமாகியதிருமஞ்சனமும்கொத்துவிரிந்த நல்லமலர்களும் மற்றைய பஞ்சகவ்வியம்பஞ்சாமிர்தமுதலியபூஜாதிரவியங்களுங்கொண்டுமாயாகுணங்களொன்றுமில்லாதவராயப் பூதசுத்தி திரவியசுத்தி மந்திரசுத்தி ஆத்துமசுத்தி இலிங்கசுத்தியென்கின்ற ஐந்துசுத்தியுஞ்செய்து உள்ளிலும்புறத்திலும் எம்மைப்பூசைசெய்து அக்கினிகாரியமும் செய்துமுடித்துச்சிவாகமப்பிரகாரநன்மைபொருந்திய பெரியதிக்கிரியைத்தொழிலை அன்பினுடனேசெய்யவல்லவர்கள் எம்முடைய பக்கத்திலிருத்தலாகியசாமீபியபதவியைப் பெறுவார்களென்றவாறு ௬௪

முக்குணம்புலனோந்துடனடக்கி மூலவாயுவை யெழுப்பிருவழியைச் சிகெனும்படியடைத்தொருவழியைத்திறந்துதாண்டவச்சிலம்பொலியுடன்போய்த் தசகவனுசெலுத்தோரொழுக்கநலாக்கன்மைகண்டருந்-ரும்பெ[illegible]வார் ..பு
வியில்வேட்[illegible]புரு

இ-ள், சத்துவம் ராஜசம் தாமசம் என்கின்ற மூன்று குணங்களையும் பஞ்சேந்திரியங்களையும் அடக்கிப் பிராணவாயுவை யெழுப்புகின்ற இரண்டு வழியாகிய இடைபிங்கலை நாடிகளை நன்றாக அடைத்துச் சுழுமுனைவழியைத் திறந்து உடனே சிலம்போசையுடனே சென்று தகுதியையுடைய ஞானத்தெழுத்தாம் ஓரெழுத்தாகிய தன்மைகண்டு அருளைத் தருகின்ற பரவெளியிலே புகுந்து அழுந்தினவர்கள் எம்முடைய உருவத்தைப் பெறுதலாகிய சாரூபியத்தையடைவார்கள் பூமியிலே குளிர்ந்தின்னுருவாக்கிய மெல்லிய பழம்போலென்றவாறு ௭௧

பரந்தவானகலை முழுதுமாகமநூற் பகுதியும் பலசமயசாத்திர முந் தெரிந்து தேர்ந்ததிலவாய்ந்த முப்பொருளின் செய்தியே பொருளெனமனந்தெளிந்து, புரிந்து போந்துள சிற்றறிவினைத் தவம் யோகமியவ்வழியெனச் சிவயோகம், விரிந்து தோன்று நெஞ்சுடைய வித்தகரே மெய்மையான நம்மெய்ப்பதம் பெறுவார்

இ-ள், விரிவுபெற்ற மேலாகிய கலைஞானமுழுவதும் ஆகமநூல்களுடைய பாகுபாடுகளையும் பலசமயசாஸ்திரங்களும் தெரிந்து ஆராய்ந்து அவ்வாராய்ச்சியிலே முப்பொருளாகிய பதி பசு பாசத்தினுடைய செய்திகளை உண்மைப்பொருளென்று மனந்தெளிந்து முன்செய்த கன்மத்துக்கீடாகவந்த சிற்றறிவினைத் துறந்து கெட்டதுப பேரறிவென்னப்பட்ட சிவஞானம் விரிந்து தோன்றுகின்ற மனத்தையுடைய சதுரப்பாட்டினரே உயர்வாகிய நம்முடைய சாயுச்சியபதத்தைப் பெறுவார்களென்றவாறு ௭௨

உருப்பொலாதவரிழிகுலத்தவர் நல்லொழுக்கமில்லவரொன்று நம்மளவில் விருப்பிலாதவரெனினு மெய்ந்நீறு மிக்கசாதனவேடமுங் கண்டார-மரிப்பிலர்த்துச் செம்மைதிருநலணங்கித் தக்கபோனகமளிந்தவரக்கெளிதா விருப்பாதரவரடியவர்க்கடியரென்பாயாரெனைத்தெனுஞ்செருக்கறுப்பார்

இ-ள், பொல்லாதவுருவுடையவராயினும் இழிந்த குலமுடையவராயினும் நல்லொழுக்கமில்லாதவராயினும் என்னைக்கூடம் நம்மிடத்திலே அன்பில்லாதவராயினும் அவர்களுடைய மெய்யினிலே விபூதியும் உயர்ந்த உருத்திராக்ஷமுடைய கண்டவளவிலே அரியாமலே நேரே சென்று வணங்கித் திருந்த அறுசுவையுடைய ஆகாரத்தங்களுடனே அவர்களுக்குத் திருவமுது செய்வித்து அவர்களுக்கு எளியராயிருந்து அவரடியார்க்கடியராயிருப்பவர்கள் யானென்னென்கின்ற செருக்கையறுப்பார்களென்றவாறு ௭௩

விரிந்தசந்திர[illegible]களன்புடனும் விழிக்கவெண்ணத் திரும்புமிப் பிறப்பிற், பெரு[illegible]யுடனுடைகளும் புந்திசேர்குளவரு [illegible]போக்க[illegible]நையிருட்டிம்புதையே யல்ல நம்முடைவா

குயிலகுணப்போ லிருந்தமபெருவடிவை யின்கருத்தி லிருத்துவாய்
பொருளிதுவெனவுரைத்தார

இ-ள்' ஸ்ரீநிருக்கின்ற சஞ்சிதவினைகளை அன்புடனே சட்சுதீக்ஷை யெனகிற நாமவிழித்துப்பார்க்கும் பார்வையினாலே வெந்துபோயிற் றுவிரும்பப்பட்ட இச்சென்மத்தில அநுபவிக்கும்படி பெடுத்துக்கட்ட ப்பட்டபிராரத்துவம இந்தத்தேகத்துடனேபோய நமமுடைய புத்தியி லதங்கியதிருவருள் வாது இனிமேற்றொட்டாமல ஆகாமியவினைகளை யொழிக்கும அரியஞானத்தருகின்ற உன்னுடையபொருளும உயி ருமஉடம்பும உன்னுடையதலல நமமுடையதாகும இங்கேஉன்னை பமே ாலேமாணிடவடிவங்கொண்டெழுந்த ந்ததுவடிவை உனமனத்தி லிருத்திவைப்பாய இது வபொருளென்று அருளிசசெய்தா ரென்ற

அக்கணந்திருவாய்மலாநதருளுமமலவாசகங்கேட்டகமகிழ்ந்து பக்கணுநமக்கெழுபிறப்பறுக்கும பாதமீதுறப்பணிந்தெதிரெழுந்து பித்தனெனவெம்பிழைதனைப்பொறுத்தருள் பிறருங்காமிகப் பேதைமையுடை யேனை, முத்தனாமெய்காட்டினையெனவே மொழிந்துநிந்துகைமுடி மி சைக்குவித்தார.

இ-ள், அக்கணத்திலேயக்கடவுள் திருவாய்மலர்ந்தருளிய வாக்கமாற உபதேசமொழிகளைக்கேட்டு மனமகிழ்ந்து திருவாதவூரர் தமமுடை யஎழுபிறப்பையும நீக்குகின்ற குருவினதுபாத மலரின்மேற்பணிந் தெழுந்து பித்தனாகிய என்னுடைய குற்றத்துக்குஇரங்கிய ருளியபரமசிவனே மிகவும அறியாமையுடைய அடியேனை முத் தனாக உண்மைகாட்டினாயென்று சொல்லிமனமகிழ்ந்துகைகளைச சி ரசின்மேற்குவித்து வணங்கினாரென்றவாறு, ௭௫

என்னதாச முன்னினைந்துளபொருளு மிலலதாகியவுடலமுமயா னும், இன்னனாகநின்னருள்கொடுநினைந் தேனிமலனென நின்றுநின் றுருக, மன்னுதானைதன் மேலணிகலன்களை மதுரைமீனவன்வான் பொருளிறையோன், முன்னதாகவைத்திறைஞ்சினாறடுசேர முதல வனாமுகமலர்வுகொண் டிருந்தார,

இ-ள், என்னதென்று நான்முன்னே நினைத்திருந்த பொருளும்என க்கிடமாகிய தேகமும்யானும உமது அருளைக்கொண்டு உமமுடை யவைகளாகவே நினைந்தேனிமலனேயென்று நின்று நின்றுருகித்த மமுடையவட்டுவஸ்திரங்களும மேலே அணிந்திருந்த ஆபரணங்க ளும மதுரையிலிருக்கின்ற பாண்டியன் குதிரைகொள்ளக்கொடுத்த பொருள்களும் தமது குருவினதுதிருவடிக்கு நமஸ்கரித்தார் தரும ஸொரூபராகிய பரமசிவனும் முகமலர்ச்சிகொண்டிருந்தார்-எ-று,

திருந்தியபொருளெல்லாந் திருப்பணிக்கேயுமேலா
மருந்தவர்க்கவுமில்லார் தமக்கருளுமென்றார்

இ-ள். திருப்பெருந்துறையிலே எழுந்தருளியிருக்கின்ற பரமாசாரியனவர் தம்மிடத்தில் அன்புடைய பராயத்துக்க அடியார்களில் சிறந்தவராமவரைப் பார்த்து நீ கொண்டுவந்தபொருளையெல்லாஞ் சிவாலயப்பணிக்குங்கொடும் அரியதவத்தையுடையவர்களுக்குங் கொடும் வறியவர்களுக்குங் கொடுமென்று அருளிச்செய்தாரென்றவாறு.

தம்பெருமுதல்வர்சொல்லுந் தனிமொழிப்படியேயுள்ள
செம்பொருளியாவுமன்பின் றிறத்துளார்தொலைத்தபின்னை
நம்பரனளித்தஞானமருந்தினையருந்திப்பாச
வெம்பிணியகற்றிமிக்க விக்கதர் முத்தரானார்

இ-ள். தம்முடைய முதல்வராகிய பரமாசாரியர்சொல்லியதற்குத் தகுந்தபடியே தம்மிடத்துள்ள திரவியங்களையெல்லாம் கொடுத்துவிட்டு அழகிய கடவுள் அருளிச்செய்த ஞானமிருதத்தைப் புசித்துப் பாசமென்னும் வெய்யபிணியை நீக்கப்பெற்ற அன்பராகிய திருவாதவூரர் சீவன்முத்தரானாரென்றவாறு. ௭௮

திருமிகழ்க்கவிகைச்சிழு[illegible] சிவிகைமேலும்
வாதகிருமேவுதானைமன்னன்[illegible]
குருக்களரிபாகநீழ்முயங்கோவணவுடை[illegible]
விரிதளசிரமுகக்கண்ணியியம்பொழிவிழுயுமானார்

DR. U.V.S. [illegible] BESANT NAGAR

இ-ள். நிறைந்தமாகிய குடைநிழலிலே சிவிகையேறப்பெற்ற பொற்சிவிகையின்மேலும் அழகுபொருந்திய சேனைகள் சூழ்ந்துவர ஒருஅரசனைப்போல வந்த திருவாதவூரர் உருத்திராக்கமாலையும் பூசப்பட்ட நீற்றையும் கோவணத்தையும் [illegible]டையும் பூண்டிருக்கின்ற சிரசையும் ஆனந்தபாஷ்ப[illegible]யு முடையவராயினாரென்றவாறு. ௭௯

அன்புடனெனக்கிரங்குபரமுழுவான்[illegible]
ரின்புறவெழுவாயின்பாலகுவிரசங்[illegible]
நன்பகற்கணுபகாரஞானநலமறிவேகொண்[illegible]
தென்புனைபித்தர்பாலர் பிசாசர்தங்கொள்கையானார்

இ-ள். தமக்கு அனுக்கிரகஞ்செய்த பரமாசாரியரை அன்புடனே பூசித்துப்பார் ஆனந்தபுஷ்பம்பொழிய அழுவார் கைகூப்பித்தொழுவார் கீழேவிழுந்து நமஸ்கரிப்பார் ஆசைபொருந்த வெழுந்திருப்பார் புறங்காட்டாமல் முன்பாகநடந்துசெல்வார் இரக்கங்கொண்டிருப்பவர் பகலுமிரவும் அறியமாட்டார் சிவஞானத்தையே பொருளாகக்கொண்டு கண்டோர்கள் அச்சஞ்செய்கின்ற பித்தர்பாலர்பிசாசர்களுடைய கோட்பாட்டையுடையவரானாரென்றவாறு.

மன்னுமிந்நிலைமையுறறூரவன்படைசுறறமாகித
துன்னினரெல்லாமவந்துதோன்றலைத்தொழுதுநின்று
தென்னவன்முனியாவண்ணஞ் செழுமபரித்திரளகொணடேக
வென்னுமதொன்றுநேராதிதுபழுதென்றிரங்கி

இ-ள. நிலைபெற்ற இந்நிலையைப்பொருந்திய திருவாதவூரருடைய வலிமைபொருந்திய படைத்தலைவர்களுமபந்துக்களுமாகியவெல்லாரு மநெருங்கியெதிரேவந்துநின்று அவரைத்தொழுதுவணங்கி அரசனாகியபாண்டியன் கோபியாதபடி செழுமைபொருந்திய குதிரைக்கூட்டங்களைவாங்கிக்கொண்டு போகவேண்டுமென்பதைத் தெரியாதிருக்கிறது பழுதென்றிரங்கியென்றவாறு ௮௧

ஐயநீவருதலவேண்டுமென்றவரழைத்தபோதிற
செய்யநீறணிவாதவூரத்திறலினாதமமைநோக்கி
மையலாமுணர்வின்மிக்கீரியாவாநீர்மாயாபேதப
பொய்யெலாமுரைத்தலவேண்டாமபோமினியகலவென்றா

இ-ள, ஐயரே நீர வரவேண்டுமென்று அவரழைத்த போதிலசெம்மையையுடைய திருவெண்ணீ றணிகின்றதிருவாதவூரா அந்தச்சேனாபதிகளைப்பார்த்து அஞ்ஞானத்திலேமிகுந்தநீங்களயாவா மாயாபேதமாகிய பொய்யுரைகளெல்லாம நம்முடனே சொல்லவேண்டாமதூரப்போயவிடுங்களென்றுசொன்றவாறு. ௮௨

எனவிவாபுகல்வதென்றேயாவருமின்றிரங்கித்
துனனுநற்றூளவீரரதமமுளேதுயரமெய்திப்
பனனுநமமொழியுங்கொளளாரபரிவிலரொன்னுநீங்கித்
தென்னவற்கின்னவாறுசெப்புவோமென்றுசென்றா

இ-ள, இவரிப்படிசொல[illegible]வென்று சேனாபதிகளெல லோரும இரங்கி[illegible]ளே [illegible]ம்பமடைந்துநாமசொல் லுகின்ற செ[illegible]க[illegible]யும நமமே லன்பில்லாதவ ராயுமிருக்கி[illegible]நீங்கிப் பாண்டியராசனுக்கு இதைச்செ[illegible]போனாகளென்றவாறு ௮௩

செ[illegible]யநாடன்றிகழவைமுன்னரெய்தி
வன்றிறன்மன்னபோற்றிமாமதுரேசபோற்றி
யென்றுபின்வாதவூரரெய்தியசெய்தியெல்லா
மொன்றியகவற்சிகூருமுளத்துடனின்றுசொல்வா

இ-ள, அப்படிபோனவர்கள் பாண்டியராசனுடைய சிறப்புப்பொருந்திய சபைக்கெதிரேபோய்நின்று பராக்கிரமத்தையுடைய அரசனேசரணமபெரியமதுரைக்கு நாயகனேசரணமென்று வணங்கினபின்புதிருவாதவூரர் நடந்தசெய்கைகளையெல்லாம் மிகுந்தகவலைபொருந்தியமனத்துடனேநின்றுசொல்வாரகளென்றவாறு ௮௪

நின்பெயர்புனைந்தோராகி நினைபெருங்கருமஞ்செய்வோ
ரென்பவர்செய்கைதன்னையெங்ஙனமியாங்கள்சொல்வோம்
பொன்பொலிமௌலியோய்நின்புடைவிடைகொண்டுபோந்து
மன்பெருந்துறையாமந்தவளநகர்புகுந்தபின்னர்

இ-ள், தென்னவன் பிரமராயனென்று உன்பெயரைத் தரித்தவராகியும் உனக்குமந்திரித்தொழில்செய்பவராகியும் இருக்கின்ற திருவாதவூரருடையசெய்தியை எப்படியாங்கள் சொல்வோம் பொன்னினாற்செய்யப்பெற்று விளங்கியகிரீடத்தைத்தரித்த அரசனே உன்னிடத்திற்செலவுபெற்றுக்கொண்டுபோய் நிலைபெற்றதிருப் பெருந்துறையெனும்பெயரையுடைய அழகியநகரத்திலேபுகுந்தபின்னென்ற

அந்நகர்மருங்கோர்காவிலணிந்துளகுருந்திலீசன்
தன்னடியார்கள்குந்தாபதர்பலருஞ்சூழ
மன்னியங்கொருவர்மேலாமாதவவேடம்பூண்டு
முன்னுறவிருந்தபலகண்டு முடிவிலாமகிழ்ச்சிகொண்டு

இ-ள், அந்நகரத்துக்குப்பக்கத்தில் ஒருசோலையிலிருக்கின்றகுருந்தவிருக்ஷநிழலின்கண்ணே சிவனடியார்களாகிய தபசிகள் அனேகர் சூழநிலைபெற்று அங்கேயொருவர் மேலாகிய மகிமைபொருந்திய தவவேடம்பூண்டு எழுந்தருளியிருப்பதைக்கண்டு அளவற்றசந்தோஷமுபெற்றென்றவாறு. ௮௬

அங்கவர்தாமுந்தாமுமன்பொடுசிலசொற்கூறிச்
சங்கரசிவனேயோவென்றவர்தாளில்வீழ்ந்து
செங்கரங்குவித்துச்சென்னிசேர்த்துவந்தனைகள்செய்து
பொங்கொளிமணிப்பூணாடை பொருளெலா முவந்தளித்து

இ-ள், அந்தப்பெரியவரும் தாமும் அன்புடனேசிலவார்த்தைகள் பேசிச் சங்கராசிவனேசரணமென்றும் அவருடையபாதங்களிலே நமஸ்கரித்துச் சிவந்த கைகளைக்கூப்பிச் சிரசின்மேலேவைத்துக்கொண்டு பூசித்து மிகுந்தஒளியையுடைய ரத்தினாபரணங்களையும் பட்டுவஸ்திரங்களையும் திரவியங்களையும் சந்தோஷமாக அவருக்கே கொடுத்தென்றவாறு. ௮௭

குறைவிலாவாடைநீத்துக்கோவணமுடுத்துச்சென்னி
நறைமயிர்விரித்துநீற்றைமெய்யெலாநயந்துபூசி
முறைமையன்றிதுதானென்றுமொழிந்தவர்முகமும்பாரார்
நிறைபுரிசித்தகாரூர்நிருபவென்றிறைஞ்சிநின்றார்

இ-ள், குறைவில்லாததமதுடைய வஸ்திரத்தை நீக்கிக் கோவணமாத்திரங்கட்டிக்கொண்டு தலையிலேயுள்ள மயிரைவிரித்துக் கொண்டு தேகமுழுவதும் விபூதியைவிரும்பித்தடனேயணிந்து இப்படிச்செய்ய

இறந்து இசைமல்லவென்று சொன்ன எதங்களுங்கதையும்பாராக்வரா யகஙிசமகங்கப் பெ பித்தனைப்போல ஞர் பாண்டியனேயென்றுவணவ ஙிநிஎருபாகவௗோறவாறு, அஅ

கேட்டலுமதனைமாறன்கிளர்ந்தமெய்ம்முழுதும்வேர்வு
காட்டிடவெகுளிபொங்கிக்கண்கனல்வடிவமாகி
வாட்டிறன்மன்னனாக்கின்வணமைபருளரேலவைய
மீட்டுவசவாநானேபன்வைபிலவெனறுக்கான்

இ-ள், அவர்களெசான்னவார்த்தையைமதுராபுரிபாசனுகியபாண்டியன்கேட்டு மெய்முழுவதும் வேர்வையுண்டாகக் கோபித்துக் கண்களுங்கனல்வடிவாகச்சிவந்து வாளுகத்திலே இறங்கைபுடை யஅரசர்களுக்கு இப்படிப்பட்டவளத்தைச்செய்கிற மந்திரியானவ டானுல சமர்ப்பிக்கப்பட்டதாகுசெய்யும சேனைமுதலியவைகள்ல் கு றைவுண்ணென்று சிரித்தானென்றவாறு, அகூ

அடுப்பரிகொள்வான்சென்றவருமபொருள்கவர்வதாகக்
கெடுமதியுடையபாதகனசொற்கேட்டுமாலையதிஞனைக்
கொடுமைகொள்ளுகவேலைசெரிந்தொருகிளைத்துணைபாற
கடுங்கைகதூதரோடிகளைக்கொண்டுவம்மினென்றான்

இ-ள், யுத்தத்திலே பகைவரைக்கொல்லத்தக்க குதிரைகளைக்கொ ளளுமபொருட்டுக்காகக்கொடுத்த அரியதிரவியங்களைக்கொள்ளையிடுவ தற்காகக்கெடுமதிசொல்லுவாரா சொல்லைக்கேட்டு மயங்கிய திருவாத வூரனைப்பேசமாகிய நடையையுடைய தூதர்கள்போய்க்கொடுமையாக வெழுகிய இந்தவேலையைக்கொடுத்துழைக்கிறதிலே நம்பீடத்திற குக்கைப்பிடியாகக்கொண்டுவாருங்களென்றான் பாண்டியராசனென்ற

ஏவலிற்சென்றதூதரெழிற்பெருந்துறையிலெய்தி
யாவலிறசிவன்றுமோதருமணணலைக்கண்டிறைஞ்சி
மேவலாக்குருமேறென்னவெண்தொழில்வேந்தனையாய்ந்த
காவலாரக்கதிபன்மாறன்றிருமுகங்காண்கவென்றார்

இ-ள், அந்தப்பாண்டியராசனேவலினலேபோன தூதர்கள் அழகி யதிருப்பெருந்துறைக்குப்போய் அனபினலேசிவனுடைய திருவடிக ளை வணங்கியிருக்கின்ற திருவாதவூரரைக்கண்டுவணங்கிச் சத்துருக்க ளுக்குக்கொடியதண்டத்தைச்செய்கின்ற இடியேறுத்த வேந்தனுகி யும்மேன்மைபொருந்திய அரசர்க்கரசனுகியும் இருக்கின்றபாண்டிய னுடைய திருமுகமிதுகாண்பீராகவென்று சொன்னரென்றவா

அறமயில்கொள்கையிக்காசான்றிருமுகமதன்றி
மறமெருஞ்சுமுக்குறிங்கானின்மனவிலசிதன்மேற்பன்பு
பாறிலரிதிருமேரீசிரேப்படியிருக்கத்துணைதிலென்ன
வறநகஙியப்புலவலனெழுதிப்துவகத்திசைக்கிசவாள்

இ-ள், சேர்வில்லாத கோட்பாட்டின் மிகுந்த திருவாதவூரர்பரமசிவன் திருமுகமல்லாமல் வேறொருமுகத்தையும் பார்ப்பதற்கு மனமில்லாதவராய் இந்தத்தூதர் கொண்டுவந்த திருமுகத்திலும் பற்றிலாதவராய் வேறொருவோலைப்படியே பிறகினையும் எழுத்துச் சொல்லுங்களென்று சொல்ல அவர்சொற்படி நல்லதென்று அதுதெரிந்தவொருவன் அதிலெழுதியிருப்பதை மகிழ்ந்து சொல்லுவானே-எ-று, கஉ

தென்னவனரசனோலை தெவ்வவன்பிரமராய
னென்னுநல்லமைச்சர்காணகவெவ்வோலையிறையைக்கொண்டேகிக்
கொன்னுறுபரிகொள்ளாமறவோர்வண்ணங்கொண்டீரீது
மன்னர்தங்கருமஞ்செய்பவர்வண்ணமையென்றுவகையுற்றேம்

இ-ள், பாண்டியராசனெழுதப்பட்ட ஓலை தென்னவன் பிரமராயனென்று சொல்லும் நல்லமந்திரிகாணக அளவற்ற திரவியங்கொண்டுசென்று பெருமைபொருந்திய குதிரையைக்கொள்ளாமல் கோவணங்கொண்டீர் அரசர்து காரியஞ்செய்பவர்களுடைய வண்மையிப்படிபட்டதென்று மகிழ்ச்சியடைந்தோமென்பவாறு, கங

வையகமன்னராகிவாழ்வதின் மனைகடோறு
மெய்தியவுதரத்தீயாலிரப்பது பெருமையென்று
மெய்த்தகத்தமைமையாண்டவேந்தனைப்பிழைத்துவேறு
செய்வதுபலிக்குமென்றுதேர்ந்தனமறிவுகண்டோம்

இ-ள், பூலோகத்து அரசராகிச் சம்பத்துடனே வாழ்வதைக் காட்டிலும் வீடுகடோறும் தன்னையடைந்த உதராக்கினியினாலே இரப்பது பெருமையாகுமென்று உண்மையாகத் தம்மைச்சேவகஞ்செய்த அரசருக்குப்பிழைசெய்து வேறொருகருமஞ்செய்வது பயன்படுமென்று நீர் நூலிலே ஆராய்ந்து தேர்ந்த துணிவையுங்கண்டோமென்றவா

மன்னனையடைந்துவாழ்தல் வஞ்சகஞ்சுமிழ்நாகத்
தன்னுடன்மருவிவாழுந்தன்மையென்றுணர்வீராயிற்
றுன்னும்இவ்வோலைகாணும்பொழுதுநந்தூதர்தம்மோ
டிங்ககாவருகமாறனெழுதவெல்வுரைத்ததின்றுனே

இ-ள், அரசனைச்சேர்ந்துவாழ்வது வஞ்சகத்தைச்செய்யும் விஷத்தையுமிழ்கின்ற சர்ப்பத்துடனே கூடிவாழ்கின்ற தன்மையைப்போலாமென்றறிவீராகில் இந்தவோலையைக் கண்டமாத்திரத்திலே நம்முடையதூதர்களுடனே இந்தமதுரைமாநகரத்துக்கு வரக்கடவீராக இது பாண்டியன் கையெழுத்தென்றுபடித்து நின்றானென்றவாறு, கரு

மீனவனெழுதுமோலைகேட்டபின்மின்பாலன்ப
ராணவரடியாரெம்மையடிமையாவுடையரல்லாற

றுனெனக்கண்ணலென்றுதன்னையான்பிழைத்தேனென்று
மாநிலமன்னன்சொன்னதென்னெனமனத்திலெண்ணி

இ-ள், பாண்டியன் எழுதிவிட்டவோலையைக்கேட்ட மாணிக்கவாசகர் உமாதேவிபாகராகிய பரமசிவனுடைய அடியார்களே யெம்மை அடிமையாக வுடையரேயல்லாமல் தானெனக்குத் தலைவனென்றும் தனக்குநான்பிழைசெய்தேனென்றும் பெரியவுலகத்தை யாளுகின்ற அரசன்சொன்னது என்னவென்று மனத்திலேநினைத் தென்றவாறு

அந்தகனெழுதுமோலை கொண்டவன்றூதர்தாமும்
வந்தெமையணுகமாட்டாருடையவாமதனையாலே
வெந்தொருகணத்தில்வீழமேவலார்புரங்கள்செற்றோ
னந்தமரொருவர்க்கஞ்சத்தக்கவரோவென்றுசாற்றி

இ-ள், எம்மை யடிமையாகவுடைய பரமசிவனுடையவலிமையினாலே யமனெழுதுகின்ற வோலையைக்கொண்டு அவனால்விடப்பட்ட தூதரும் எம்மிடத்திலவந்து அணுகமாட்டார்கள் ஒரு க்ஷணமபொழுதிலேவெந்துவிழும்படித் திரிபுரங்களையழித்த அக்கடவுளுடைய அடியார்கள் ஒருவருக்கு அஞ்சவார்களோவென்றுசொல்லியென்றவாறு

போயரனிருத்தாளேத்திப்புண்ணியவடிவேபோற்றி
யாயிரஞ்சுடிகைப்பாம்பையலனெமுடித்தாய்போற்றி
மாயிருஞாலங்காக்குமன்னவனெழுதுமோலைப
பாயிரங்கேளென்றுமொழிந்தனர்பழுதிலாதார்

இ-ள், இப்படிநினைத்துப்போய்ப் பரமசிவனுடைய திருவடியைத் துதித்துப் புண்ணியவடிவமுடையவனே சரணம் ஆயிரமடமுடியையுடைய பாம்பைமலாமாலையாகத் தரித்தவனேசரணம்மகத்தாகியபெரியபூமியை யரக்ஷணைசெய்கின்ற அரசனெழுதிவிட்ட வோலையின்முகவுரையைக்கேட்டருளுமென்றுபணிந்து எதிரேநின்று சொன்னார் பழுதிலலாதமாணிக்கவாசகரென்றவாறு, ௯௮

கேடிலாவியல்பினானுங்கேட்டிளமுறுவல்பூத்துப்
பாடலாலேத்துந்தெய்வப்பான்மைபாகக்குவந்துசொல்வார்
பீடிலாதவர்போலுள்ளம்போதறவொழிவாயிந்த
நாடெலாமதிக்கநாமேநற்பரித்திரள்கொண்டேகி

இ-ள், கெடுதலில்லாத வியல்பினையுடையபரமசிவன் அதனைக்கேட்டுப்புன்சிரிப்புக்கொண்டு தமிழ்ப்பாடலால தம்மைத் துதிக்குந்தன்மையையுடைய திருவாதவூராருக்குச்சந்தோஷத்துடனேசொல்வார் அறிவில்லாதவர்களைப்போலக் கருத்திலேகொண்ட பேதைமையை நீக்குவாயாக இந்தநாடெல்லாம் மதிக்கும்படியாய்நாமே குதிரைகொண்டு சென்றென்றவாறு, ௯௯

தென்னவற்களித்துமீள்வோஞ்செழுந்திறற்றூதரோடு
மன்னனைக்குறுகியெம்பால்வரவிடுமோலைதன்னுள்

முன்னுறக்கடிது வந்தே னாவணித்திங்கண் மூல
மென்னுமத்தினத்தில் வையை யெய்துநற்பரிக ளென்பாய

இ-ள. பாண்டியனுக்குக் கொடுத்துத் திரும்புவோமென்றிருந்த சௌரியத்தையுடைய தூதர்களுடனே அவ்வரசனிடத்திற்குப்போய நீ லவிட்ட ஓலையினாலே முன்னதாகச் சீக்கிரத்தில் வந்துவிட்டேன ஆவணிமாத மூலநாளில் இங்கேநல்லகுதிரைகள் வருமென்று சொல்லுவாயாகவென்றவாறு. ௱

தொன்மதிக்குலத்து மன்னன் றூயசெயமென்றேசற்று
நிலமனக்கவற்சிகொள்ளாதொழிகென நீற்றுச்சாத்திப்
பொன்மணிக்கலன்களல்கிப் பூந்துகில்பிறவுந்தந்து
மன்னனைத்துவலைக்கூர மந்திரியாண்மைசெய்து

இ-ள, பழமையாயவருகின்ற சந்திரகுலத்து அரசனாகியபாண்டியன் துன்பப்படுத்துவாரென்று சற்றும்மனதிலே கவலைகொள்ளாதேயென்று விபூதிதரித்துப் பொன்னும் இரத்தினங்களாலுஞ்செய்த ஆபரணங்களும் அழகியவஸ்திரமும் மற்றுமுதலியவைகளுங்கொடுத்து அவ்வரசனைமனதில்மகிழ்ச்சியடையும்படி மந்திரிக்கேற்றகோலஞ் செய்தென்றவாறு ௱௧

தென்றிசைக்கிறைவனாற் சென்றுநீகொடுத்துச்சாண்டி
யென்றுநன்மணியுநல்கி யேகெனவிடுக்கப்பின்னர்
கன்றுநல்புனிற்றாவென்னக் கசிந்துருக்கண்ணீர்வார
நின்றுநின்றிறைஞ்சியப்பா னீக்கியோவென்றுநொந்து

இ-ள, தென்னாட்டிற்கு அதிபனாகிய பாண்டியனிடத்திலேபோய் இதைக்கொடுத்து நீ காண்பாயாகவென்று நல்லமாணிக்கமொன்று கொடுத்துப்போவென்று அனுப்ப அக்காலத்திலே புகலுறை நீங்கிப்போகுங் கன்றையிழந்த பசுப்போலக் கண்ணீர் நெகிழ்ந்து நீரொழுக நின்றுநின்று வணங்கிஐய வென்னை நீக்கினையோவென்று மனநொந்தென்றவாறு ௱௨

விழிப்புனல்சிந்தச்சிந்த விண்ணவன்விடைபெற்றேகிச்
சுழிப்புனல்வாவிசோலைசூழ்பெருந்துறைநீங்கி
வழிக்குறுதுணையாயுள்ள வள்ளலைநெஞ்சத்தோதிப்
பழிச்சுறுதூதரோடு மதுரையம்பதியிற்சென்றார்

இ-ள, கண்களிலேயிருந்து நீர்தாரை தாரையாயொழுக ஆராமையுடனே பரமசிவனிடத்திலே செலவுபெற்றுக்கொண்டுபோய்ச் சுழியையுடைய நீர் மிகுந்ததடாகமுஞ்சோலையுஞ் சூழ்ந்ததிருப்பெருந்துறையைநீங்கி வழிக்குத்துணையாயிருக்கின்றகடவுளுடைய பஞ்சாக்ஷரமும் உச்சரித்துக்கொண்டு தம்மைவணங்குகின்ற தூதர்களுடனே மதுராபுரியிற்சேர்ந்தார் திருவாதவூரரென்றவாறு, ௱௩

மதுரைமன்னவன்முனேகி மனமிலாவணக்கஞ்செய்து
கதிர்மதிச்சடையோனீந்தகவின்கொண்மாமணிமுனல்கி

யெதிருறநின்றபோதிலின்புறவழுதிநோககி
விதிமுறைமிருமிவென்னவிருநதனாவிரிநதநூலார்

இ-ள், அம்மதுரை அரசனாகிய பாண்டியனிடததிறகுப்போய் மன த்தில விருப்பமிலலாமற புறததில வணககஞ்செயது கிரணநிறைநத சந்திரனை ததரிகக சடையையுடைய பரமசிவன்கொடுத்த அழகுபெ ருந்திய மாணிக்கததைக் கையுறையாகவைதது எதிராகநின்றமாததிர ததில் மனமகிழ்சசியுடனே பாணடியராசனபாாதது முறைமைபபடி இஙகேயிருமென்றுசொலல இருநதாாவிரிநதநூல்ல வலலவராகிய மாணிகக வாசகரென்றவாறு. ௫௪

விலைமதிப்பில்லாவநதமேதகுமணியைப்பலகா
ணிலையுறவியநதுநோககிநெஞ்சினுளுவகையெயதித
தலைவனைசசிநதையுளளேதரிபபவாதமமைநாடிச
சிலைமுககராத்துமன்னன் செயததேதுரைமினென்றான்

இ-ள், ஒருவராலும விலைமதிககககூடாதத அநத மேன்மைபொரு நதிய மாணிககததை வியபபுடனே பலதரம உறறுப்பாாதது மனதி லேசநதோஷபபட்டுப் பரமசிவனைக கருததிலே வைததிருககின்றதி ருவாதவூரனைபபாாதது விலலைககையிலேநதுகின்ற பாண்டியன் நீா செயதகாரியமென்ன சொல்லுமென்று கேட்டானென்றவாறு.

மலககொடுமபகைகையைவெல்வாா மன்னவனமுகததைநோககி
நிலகதொளிாபுகழின்மிக்காாநீதருநிதிகொண்டேகி
யிலககணகுறைபாடின்றியீரிருகதியுமுணடாய
குலப்பரியினஙகள்யாவுமவிலைககுறககொணடமின்னர்

இ-ள, மும்மலஙகளென்னும கொடியபகைகளை வெலலுகின்ற தி ருவாதவூரா பாண்டியன்முகததைபபாாககதுப் பூலோகததிலேவிளங குகின்ற மிகுந்தகீாததியுடைய அரசனே நீகொடுதத திரவியததைக் கொண்டுபோய இலக்கணஙகளொன்றும குறைபாடிலலா மலநான்கு கதிகளுமுடைய நலலசாதியான குதிரைககூட்டஙகளெலலாமவிலை க்குககொண்டமின்யென்றவாறு, ௫௬

அருமபரித்தொகுதியெலலா மணிதிகழ்மதுரைககேகப்
பொருந்தியதினமேதென்னபபூசுராவிதியிறறோநது
திருந்துமாவணியாநதிங்களமூலநாறினமாமெனன
விருந்தனைகனைநாடிப்பெருநதுறைபென்னுமூரில

இ-ள், அருமையான குதிரைக்கூட்டங்களையெல்லாம் அழகுமிகு ந்த மதுரைபபட்டணத்துககுக் கொண்டுபோகப்பொருநதியநன்னாள என்றைக் கென்று கேட்டபோது பிராமணர் விதிப்படிபார்த்தத தி ருத்தமாகிய ஆவணிமாசத்தில மூல நக்ஷத்திரம் நல்லநாளென்று சொல்ல அந்நாளைக்குறித்துக்கொணடு திருப்பெருந்துறை யென்னு மூரிலேயிருந்தேனென்றவாறு, ௫௭

நின்படைச்சுற்றமெல்லாநீடுமிந்நகருக்கெய்து
மன்புடன்கடிதமீண்டாரவர்பெரும்படிறுகூற
மன்பெருமுனிவாலோலைவரைந்ததனையகனல்வந்தேன்
கொன்பரித்திரளகளெய்துவகூறுமநாளிலென்றார்.

இ-ள், உம்முடையசேனைகளும் சுற்றத்தாரும் நீடியஇந்தமதுராபுரிக்குப்போகவேண்டுமெனனும் விருப்பத்துடனே சீக்கிரத்திலே திரும்பிவிட்டார்கள் அவர்களெனமீதுபெரிய அபவாதஞ்சொல்ல அதைக்கேட்டு தீராகோபத்துடனே ஒருவோலையெழுதி அனுப்புவித்தீர் அதனாலேமுன்னதாகவந்தேன் பெருமைபொருந்திய குதிரைக்கூட்டங்களெல்லாம் நானசொல்லிய ஆவணிமூலத்தன்றைக்கு வருமென்றார் திருவாதவூரரென்றவாறு, ௩௫

என்பதுகேட்டுமாறனும்பிழையெமக்குண்டாள
மன்பெருநணபுநீங்கநினைத்துளமனந்தார்சொல்லா
லன்பிலாபோலவோலையெழுதினமதுகொண்டெனனை
துன்புறலொழிவீரொன்றுநன்மையாதகொண்மைகூறி,

இ-ள், இப்படிச்சொல்வதைக்கேட்ட பாண்டியன் உம்முடனேயெமக்குண்டாகிய நிலைபெற்ற சிநேகத்தைநீக்கும்படிக்கு நினைக்கக் கருத்துள்ளவர்களாகிய சிலர்சொல்ல அதனாலே அன்பில்லாதவர்கள்போலவோலையெழுதினம் அதுகொண்டெனனைகாரியம் மனவியாகூலம் ஒழிவீராகவென்று நன்மையாகப் பழையவுரிமையின்படியே பேசி-எ-று

கொன்னெடுங்கோயிலூடுகொடுபுகுந்துரிமைகூர்த்த
தன்னருகிருத்திமேன்மைத்தகைநறுங்கலைகணல்கி
பொன்னணிகலன்களியாவும்புனையுமென்றளித்துமுன்போன்
மன்னுளகருமங்கூறிமனையிடையேகுமென்றான்,

இ-ள், பெருமைபொருந்திய நெடிய அரமனையிடத்தே அழைத்துக்கொண்டுபோய் உரிமையாகத்தன்னுடைய பக்கத்திலிருத்தி உயர்ந்ததகுதியாகிய நல்லவஸ்திரங்கள் கொடுத்துப்பொன்னினாற்செய்த பலபல ஆபரணங்களைத்தரித்துக்கொள்ளுமென்றுகொடுத்துமுன்போலத்தானே இராஜகாரியங்களெல்லாஞ்சொல்லி வீட்டுக்குப்போமென்றுவிடுத்தான் பாண்டியராசனென்றவாறு, ௩௬

தன்பதிமனையிற்சென்றுதாபதாவைநன்னர்
நன்பரிச்சமுகமெய்தாநணிரண்டென்னுமுன்னா
வெம்புடைச்சுற்றநீங்கியிருந்துழிவிரிந்தகேமி
யம்புவிக்கரசன்றன்முனமைச்சரிலொருவன்சென்று,

இ-ள், தன்னுடையபெரிய அரமனைக்குப்போய்த் திருவாதவூரரிருக்கப்பின்புநல்லகுதிரைக்கூட்டங்கள் வரவேண்டியதினைத்துக்குஇரண்

டோனைக்குமுன்னே விரியபெற்ற சமுத்திரஞ்சூழ்ந்த புவிக்கரசனு
கிய பாண்டியன் வெவ்வியசேனைபதிகள் சுற்றங்கள் யாவரையுநீங்கி
த்தனித்திருக்கும்போது மந்திரிகளிலே ஒருவன்முன்னே போயென்
றவாறு, ௱௰௧

போற்றியெம்பொருநைநாடபோற்றியென் றிறைஞ்சிக்கூறு
மாற்றமுண்டொன்று நின்பேர்புனைந்தனவரிசைபெற்றோர்
சாற்றருந்துரகங்கொள்ளநேரியன்றலத்திற்சார்ந்து
நீற்றணியடியார்கையினின்பொருளையாவுமீந்தார்.

இ-ள். பொருநைநாடனாகிய அரசனே சரணஞ்சரணமென்றுவண
க்கஞ்செய்து யான்சொல்லுகின்ற விண்ணப்பமொன்றுண்டு அதென்
னெனில் தென்னவன்பிரமராயனென்று நின்பெயரைத்தரித்திருக்கின்
றவரிசைபெற்றோராகிய மந்திரியார்சொல்லுதற்கரிய குதிரைகொள்ள
வந்து சோழனுடைய தேசத்துக்குப்போய்த்திருநீறு தரிக்கின்றப
ரமசிவனடியார்கையில் உன்னுடைய திரவியங்களெல்லாங்கொடுத்து
விட்டாரென்றவாறு, ௱௰௨

நின்பெருந்தூதர்போகியெழுதினின்றோலைகாட்டும்
பின்புவந்தனதுசீற்றமொழித்தியாப்பிழைத்தலெண்ணி
யன்புடையவர்போலுன்றனடியிணைகுறுகியின்னா
னன்பரித்திரளிற்கெய்துநானுனக்களிப்பலென்றார்,

இ-ள். பெரிய உம்முடைய தூதர்கள்போய் நீரெழுதியவோலைகா
ட்டியபின்பு அவர்வந்து உமதுகோபத்தைநீக்கித் தப்புப்பிழைப்ப
தற்கு அன்புடையவர்கள்போல உமதுதிருவடியைச்சேர்ந்து ஆவ
ணிமூலத்தில் நல்லகுதிரைக்கூட்டங்களிங்குநானுனக்குத்தருவேனெ
ன்றாரென்றவாறு, ௱௰௩

மற்றவர்மொழிந்தவெல்லாம்பொய்யுரைமன்னவென்னச்
சொற்றமிழவையைநாடன்றூதரைவெருவநோக்கி
யற்றமில்சுருதியெல்லாருட்பெருந்துறையிலெய்தி
யுற்றவெம்பரிகளுண்டேலோலைவந்தீமினென்றான்

இ-ள். அந்தத்திருவாதவூரர்சொன்ன வார்த்தையெல்லாம் பொய்
வார்த்தையாகும் அரசனேயென்று சொல்லப் பாண்டியராசன் உட
னே தூதர்களஞ்சும்படிப்பார்த்துச் சோர்வில்லாதவேதத்தில் வல்ல
பெரியோர்கள் வசிக்கின்ற மகிமைபெற்ற திருப்பெருந்துறைக்குப்
போய் அங்கேகுதிரைகளிருக்கின்றனவாவென்று சீக்கிரத்தில் பார்
த்துவந்துசொல்லுங்களென்றானென்றவாறு ௱௰௪

அருந்திறற்றூதர்போகியத்தினைக்கடிதுமீண்டு
வருந்திமுன்சென்றுமன்னர்மன்னனைவணங்கிநின்று
பெருந்துறையென்னுமூரும்பிறிதளப்பதியுந்தேடிக்
கருந்தடக்களிற்றுவேந்தகண்டிலம்பரியென்றார்

இ-ள் அரியதிறத்தையுடைய தூதர்கள்போய் அன்றைத்தினந்தானே சீக்கிரத்திலே திரும்பி வருத்தத்தோடு மன்னர்மன்னனுகிய பாண்டியன்முன்னேவந்து வணங்கிக் கரியமலைகள்போன்ற யானைகளையுடையவரசனே திருப்பெருந்துறையெனனுமூரிலும் அநேகமற்றவூர்களிலும் தேடிப்பார்த்தோம் குதிரைகளைக் காணகிலோமென்றார்களென்றவாறு, ௱௰௫

பாகருமின்றின்னவாறுபகர்தலும்வெகுட்சியெய்தி
யீகருங்கருமஞ்செய்வனென்றிடாச்செயவான்றன்னைத்
தாகருந்துயராஞ்செய்துகைக்கொண்டதனத்தையெல்லாம்
வாங்குமின்றண்டலாளரென்றிகன்மன்னன்சொன்னான்,

இ-ள் தூதர்களிந்தப்பிரகாரஞ் சொன்னமாத்திரத்திலே கோபமடைந்து இவ்வேகமமுடைய காரியஞ்செய்கிறேனென்றுபோய்ச்சிக்குத்தின்பஞ்செய்தவனைப் பொறுத்தற்கரிய துயரஞ்செய்து மற்றநம்முடைய திரவியங்களையெல்லாம் வாங்குங்கள் தண்டற்காரர்களேயென்று ஆக்கியாபித்தான் வலிமையையுடைய பாண்டியராசன் -எ-று,

மன்பெருந்தண்டலாளர்மறையவர்குலத்துமிக்கார்
முன்புநின்றினையசொல்வார்முனிவுடைமுகத்தராகி
நன்பரித்தொகுதிகொள்ளநயந்துமக்களித்த
தன்பொருளெல்லாம்வாங்கச்சாற்றினன்சிறமமன்னன்

இ-ள் அரசனுடைய பெரியதண்டற்காரர்கள் பிராமணகுல சிரேஷ்டராகிய மிருந்தமாணிக்கவாசகர்முன்னேநின்று இவைகளைச்சொல்வார்கள் கோபத்தையுடைய முகத்தினராகி நல்லகுதிரைகளைக்கொள்ளநயமுடனே உம்முடையகையில அந்தரளிறகொடுத்தகதனனுடையதிரவியமெல்லாம் வாங்கச்சொல்லினன் கோபத்தையுடைய பாண்டியனென்று பின்னுஞ்சொல்வார்களென்றவாறு ௱௰௭

மறிதிகன்பயனியாதென்னின்மன்னவன்விடுப்பவென்றி
யறவன்றூதாவல்லையொண்பெருந்துறையிலெய்திக்
கொற்றவெம்பரிகள்காணார்மீண்டனர்கோவுனீம்பாற்
பற்றியநேசம்விட்டான்பாரினியாளவொட்டான்

இ-ள் இப்போது நாங்கள் பணத்தைக்கேட்பதற்கு நிமித்தமென்னவெனில் அரசனாலேவிடுக்கப்பட்ட வெற்றிபொருந்தியவலிமையுடைய தூதர்கள் சீக்கிரத்திலே திருப்பெருந் துறைக்குப்போய வெற்றியையுடைய வெவ்வியகுதிரைகளைக் காணாமல் வந்துவிட்டார்கள் ஆகையால அரசனும உம்மிடத்திலேவைத்த நேசத்தைவிட்டான் இனிப்பூமியையும் ஆளவொட்டா னென்றவாறு ௱௰௮

தனமினித்தருகல்வேண்டுமென்றவன்றண்டல
சினமுடன்புகலவாளாவிருத்தலுந்திமைக்கூற

நினைவுடனமைச்சர்வாழ்வுநீக்கிமெய்யவாக்கினமன்னாத்
தனியுறவலித்திறகாவற்சாலைபிலாக்கினார்கள்,

இ-ள் திரவியமுழுவதுங்கொடுக்கவேண்டுமென்று பின்பு தண்டற்காரர் கோபத்துடனேசொல்லப் பேசாமலிருக்கவே அவர்கள் தீமைமிகுந்தமனதுடனே அமைச்சுரிமையைநீக்கிஉண்மைவாக்கையுடைய மாணிக்கவாசகரை வலிமையாகச் சிறைச்சாலையில்வைத்தார்கள்-எ

சற்றுமுட்டளாவிலாததன்மையினவாதவூரர்
மற்றவர்செலுத்தச்சென்றுவன்சிறைச்சாலையெய்த
நற்றவர்வருந்தக்காணாநாணமுற்றொளியபான்போன்று
பொற்றடந்தேரின்வெய்யோனபோய்க்குடபான்மறைந்தான்

இ-ள் சற்றுமிலும் மனந்தளர்ச்சியில்லாததன்மையையுடையவராய திருவாதவூரரானவர் அந்தத் தண்டற்காரர்செலுத்தப்போய வலியசிறைச்சாலையையுடைய நல்லதவத்தையுடையஇவர்துவருந்தத்தைப் பார்க்க நாணமடைந்து ஒளிப்பவனைப்போலப் பொன்மயமாகியவிசாலம்பொருந்திய தேரினையுடைய சூரியன்போயமேற்குத்திசையின்கண்ணே மறைந்தானென்றவாறு ௱௨௰

களருலாமிதழிமாலைகவின்பெறமுடித்தவேணி
வள்ளலாரேவச்சென்றுவழுதிமேல்வெருட்சிகொண்டு
வெள்ளைவான்பிறைப்பற்றோன்றவிழுங்கலங்காந்தபேயின்
கொள்ளிவாயனையவண்ணங்கொண்டதுசெக்கர்வானம்,

இ-ள் தேனுலாவியகொன்றை மாலிகையை அழகுபெறமுடித்தசடையையுடைய பரமசிவனையேவப்போய்பாண்டியனமேற்கோபங்கொண்டுவெளுத்ததமேலாகிய பிறைப்பல்லானது தோன்ற விழுங்கலாயைத்திறந்த கொள்ளிவாயப் பிசாசம்போல வடிவுகொண்டதுசெக்கர்வானமென்றவாறு, ௧௨௧

தெண்டிரையுலகினல்லதிறத்தினர்க்குற்றதீங்கு
கண்டுளசிறியோர்போல நகைத்தனகவின்கொண்முல்லை
யொண்டமிழ்வாதவூரர்க்குற்றதையுணர்ந்தேதுன்பங்
கொண்டவர்தயம்போலக்குவிந்தனகமலமெல்லாம்,

இ-ள் தெளிந்த அலைநீர்சூழ்ந்த உலகத்திலே நல்லயோக்கியர்களுக்குச்சம்பவித்த தீங்கைப்பார்த்த சிறியவர்கள்போலவாசனைகொண்ட முல்லைச்செடிகள் சிரித்தனஒள்ளியதமிழ்வேதம் பாடுகின்றமாணிக்கவாசகருக்கு வந்ததீங்குதெரிந்து துன்பங்கொண் பெரியோர்களசிந்தைபோலக் குவிந்தனதாமரைமலர்களெல்லாமென்றவாறு ௧௨௨

தென்னவன்வைத்தகாவற்சிறையினினுறையுந்தெய்வ
மன்னவரொருவர்தாணிருண்முற்றியாவரொன்றே

யின்னல்கொண்மனத்தாளபோலவிருட்காரங்கொண்டுகூடற்
பொன்னகருளளாாகணைகளபுதைதகனளாஙகுன்மங்கை,

இ-ள், பாண்டியனால் வைக்கப்பட்ட சிறைச்சாலையிலே தங்கியதெய்வத்தன்மையுடைய திருவாதவூரர் துன்பங்கண்டால மனமழிவாசென்று துன்பங்கொண்ட மனமுடையவளைப்போல இருளாகிய கைகளைக்கொண்டு அழகிய மதுரைமாநகரிலுள்ளவர்கள் கண்களைப் புதைத்தனள் இராத்திரியாகிய பெண்ணென்றவாறு கஉச

மன்பகைதூரப்பதிக்கமந்திரிக்கலைவாக்குண்டா
மென்பதுமுளதோவந்தோவென்செய்துமென்றிரங்கி
யன்பரையகன்றுகெருசலழ்மெலழவுயிர்கதுமாமுரு
துன்புடைமடவார்போலத்துயின்றிலாமதுரையுள்ளார்,

இ-ள், பாண்டியனுடைய பகையை நீக்கிக்கொள்ளுந்தன்மை இக்தமந்திரிகளிலே முகனமைபெற்ற திருவாதவூரருக்கு உண்டாமெனறுசொல்வதுமுண்டோ ஐயோ இதற்குநாமெனனசெயவோமென்றிரங்கி தலைவனைப்பிரிந்து ஆற்றாமையுள்ளமனத்தோடு அழலாகிய பெருமூச்சுவிட்டு மயங்குகின்ற துன்பத்தையுடைய மகளிர்போல அன்றிரவில் நித்திரைசெய்கிலா மதுரையிலுள்ளவர்களெல்லாம்-எ

செம்மனப்புனிதர்க்குண்டாந்தீங்குதங்கிழமையாலே
யைம்முகக்கடவுளீன்ற வறுமுகற்குரைக்குமாபோல்
விம்முசெஞ்சூட்டுமுட்டாள் வியன்சிறைச்சேவலெல்லாந்
தம்மனையிடங்கடோறுந் தழங்கினபுலரிகாலை,

இ-ள், நல்லமனத்தையுடைய பரிசுத்தரான திருவாதவூரருக்கு உண்டாகிய தீங்கினைத் தங்களுக்கிருக்கின்ற உரிமையினாலே ஐந்துமுகத்தினையுடைய பரமசிவனீன்றருளிய ஆறுமுகசுவாமிக்குச்சொல்வதுபோலப் பருத்தசிவந்த உச்சிக்கொண்டையையும் முள்ளினையுடைய காலையும் பெரியசிறைகளையுமுடைய சேவல்களெல்லாந் தங்கள்தங்கள் வீடுகடோறும் விடியற்காலத்தில் சத்திக்கனவென்றவாறு, கஉரு

சிற்பரமுணர்ந்தஞானச் செங்கதிரோர்தீதிப்
பொற்பினையுடையோரின்னல் பொறாதுசென்றுரைப்பார்போ
விற்பொலிசடிலன்சூல னேவலானலவாயி (ல
லற்புதன்கோயின்முன்றி லார்த்தனசங்கமெங்கும்,

இ-ள், பரமசிவத்தினது யதார்த்தவடிவையறிந்து செவ்விய தமிழ்வேதமென்கின்ற ஞானநூலையோதும் நீதியையுடைய மாணிக்கவாசகருடைய துன்பத்தைப் பொறுக்கமாட்டாமற்போய்ச் சொல்லுகின்றவர்களைப்போலப் பிரகாசம்பொருந்திய சடையையுடையவராயும், சூலாயுத

வி

த்தையுடையவராயும், திருவாலவாயி லெழுந்தருளி யிருக்கின்றசொக்கநாயகர் சந்நிதிக்குமுன்னே அனேகசங்கங்கள் முழங்கினவென்ற

எம்பிறைபரியிலேறுநாளிதோவென்றுபார்க்குஞ்
செம்மலாமடவாளிட்டதிலகசிந்தூரம்போல
வம்மலேமிசையேவைகியாடகக்கிரிசூழ்போந்து
மைம்மிகுகடன்மேல்வந்து முளைத்ததுவாலபானு,

இ-ள், எம்முடையகடவுள் குதிரையிலேறிவருகின்ற நாளிதுதானென்றுபார்க்கின்ற செந்தாமரைப்பூவில் வீற்றிருக்கப்பெற்ற திருமகளணிந்த சிந்தூரப்பொட்டுப்போல மேற்குமலையில் அஸ்தமித்துமகாமேருமலையைச் சுற்றிக்கொண்டுவந்து கருமைமிகுந்த கீழ்க்கடலிலே உதயமானான் இளஞ்சூரியனென்றவாறு, கஉஎ

மண்கெழுசெங்கோல்வேந்தன் வைகறையெழுந்துநீராற்
கண்கழலவிளக்கிமூழ்கிக்கண்ணுதற்பூசைசெய்து
தண்கதிர்முத்தமாலைதரித்துநற்கலன்கடாங்கி
விண்கிளர்செம்பொற்கோயின்முகப்பினில்வீற்றிருந்தான்,

இ-ள், பூவுலகத்திற் செங்கோற்செலுத்துகின்ற பாண்டியன்விடியற்காலத்தில் நித்திரையையொழிந்து கண்காலமுதலிய அவயவங்களைச் சுத்திசெய்து ஸ்நானஞ்செய்து சிவபூசைசெய்து குளிர்ச்சிபொருந்திய கிரணங்களையுடைய முத்துமாலைகளைத் தரித்துக்கொண்டு நல்லாபரணங்களை யணிந்துகொண்டு ஆகாசமளாவிய செம்பொன்னாற்செய்த தன்னுடைய அரமனைமுகப்பிலேவந்துவீற்றிருந்தானென்றவாறு,

வன்றிறலாளரெல்லாம்வாம்பரித்திரள்கள்கொள்வான்
சென்றானடியார்க்கீந்தசெம்பொருட்டாரீராகி
லின்றுமைவருத்தஞ்செய்துமென்றெறிவெயிலினூடு
நின்றிடுமென்னநின்றார்நீள்பெரும்புகழினிற்பார்,

இ-ள். வலியசௌரியத்தையுடைய தண்டற்காரரகளெல்லாந்தாவுகின்ற குதிரைக்கூட்டங்கள் கொள்ளப்போய்ச் சிவனடியார்களுக்குக் கொடுத்துவிட்ட நல்ல திரவியத்தைத் தாமாட்டீராகில் இன்றைக்கு உம்மை வருத்தப்படுத்துவோமென்று எறிக்கின்றவெயிலிலேநின்றிடுமென்றுசொல்ல அப்படியேநின்றார்மிகுந்தபுகழில் நிற்பவராகியதிருவாதவூரரென்றவாறு, கஉஅ

அங்குநின்றிளைப்பாரமைமையாண்டவாண்டகையையுன்னி
யிங்குணர்ந்திலிகொல்லோ [illegible]கம்மனத்தேசொல்லிச்
சங்கவெண்குழையாய்மன்[illegible]க்குவாமபரிகளீக
வங்கடனுகுமென்றுநின்றிறைஞ்சியோயம்மையாமோ,

இ-ள், அந்தவெயி[illegible]பராகிய மாணிக்கவாசகர்
ம்மையா[illegible]கருமேயிட்ட வருத்தத்

யபரமசிவனே பாண்டியனுக்குத் தாவுகின்ற குதிரைகள்கொடுப்பது நம்முடைய க[illegible]குமென்று சொன்னசொற்பொய்ம்மையாமோவெ ன்றும் தமமுடையமனத்திற சொல்லுவாரென்றவாறு, ௧௱௰

ஊனுடம்புடையவாழ்க்கையொழித்துனக்கடிமையென்று
மானிலம்புகலுமாறுவந்துனையடைந்தேன்றன்னை
மீனவன்றன்பான்மீளவிடுத்தனை வேலைநீரு
ளானையினைநீராற்றுநீரெனவாவதுண்டோ,

இ-ள். மாம்சபிண்டமாகிய தேகவாழ்வைநீக்கி உனக்கு அடிமை யானவனென்றுபெரியவுலகத்தார் சொலலுமபடிவந்து உன்னையடுத் த அடியேனைப் பாண்டியனிடத்தில் மறுபடியுமவிட்டாய ஆற்றுநீரச முத்திரத்துடனேகலந்தபின்பு அககடலநீராகுமே யலலாமல் ஆற்று நீராவதுணடோ வென்றவாறு, ௧௱௧

அறத்தனிசசெல்விபாகவன்பிலேனின்பாளென்று
வெறுத்திடலடியேற்கிங்குவேறொருதுணையுமில்லை
செறுத்துபாபுரங்களெல்லாஞ்செற்றவனடியான்றன்னை
நிறுத்தினாவெயிலிலென்றானினபுகழ்க்கேற்றமாமோ,

இ-ள். முப்பத்திரணடு தருமததையும் வளாக்கின்ற ஒப்பற்றஉமா தேவியை ஒருபாகத்திலேவைத்த கடவுளேஉம்மிடத்தில்அன்பிலலே னென்று என்னை வெறுத்துவிட்டாய அடியேனுக்குஇங்கேவேறொரு துணையுமுண்டோ பெரியதிரிபுரங்களைக்கோபித்து எரித்தசிவனுடை ய அடியேனை வெயிலிலே நிறுத்தினாகளென்றால் உமமுடையகீர்த் திக்குப்பெருமையாகுமோ வெனறவாறு. ௧௱௨

வானவர்டவாக்குமேலோய்வந்துனக்கடிமைப்போ
தானநானிடுமபையுற்றாலாருனக்கடிமையாவா
ரானனுமனத்தார்சொல்லுகல்லுனாயன்றிநின்ற
வீனனுமொருவன்சொல்வதேறுமோவுளத்திலென்றார்,

இ-ள். தேவர்களுக்கு மேலானவரேவந்து உமக்குஇப்போது அடி மையானநான் துன்பப்பட்டால் ஆருனக்கு அடிமைப்படுவாரகளையா னொன்றும அகந்தையையறுத்தஞானமனததை யுடையவாகளசொல் லுகின்றநல்ல சொல்லல்லாமல் ஈனனுகிய என்னுடையசொல்லான து செவியிலேறுமோ வென்றாரென்றவாறு. ௧௱௩

அவத்தொழிற்புரியாமேன்மையன்பருக்கன்புசெய்து
பவக்கடலிடைவிழாமற் பரிந்தருட்பார்வைநல்கித்
தவப்பெருவாழ்வுகொண்டுதெள்ளித்தாருமையா
செவிப்புலன்புகுந்தன்பர்செப்பியமாற்றமெல்லாம்,

இ-ள். அவத்தொழிலைசசெய்யாத மேன்மையையுடைய அன்பரிடத்திலே கிருபைசெய்து பிறவிககடலிடைவிழாமல அனுபூடனாகிருபாநோக்கமருளிக குருமூர்த்தமாக வெழுந்தருளித திருவடியைககொடுத்தருளுகின்ற பரமசிவனுடையசெவியினிடமாக நுழைந்தது திருவாதவூரர் சொல்லியசொறகளெல்லா மென்றவாறு, ௧௩௪

காமப்படு தோளிபாகன்கணணுதலண்ணலன்பர்
தாமப்படுதுயரமெண்ணியத்துயர்தணிக்கவேண்டித்
தேமப்படுமலர்களமாறிறைனவன்றனக்குவென்றி
வாமபரியளித்தல்சொல்வாம வலவினைப்பகையைவெல்லாம,

இ-ள், நீங்கிவினையொத்த தோளினையுடைய உமாதேவிபாகனுகியும நெறறிககண்ணையுடையவனுகியும இருககின்றபரமசிவன் தன்னுடையஅடியாராகிய திருவாதவூரர்படுகின்ற துயரத்தைநினைத்து அந்தத்துயரத்தைநீக்கவேண்டி வாசனைபொருந்திய வேப்பமாலையணிந்தமார்பையுடைய பாண்டியனுக்கு வெற்றியையுடைய தாவுகின்றகுதிரையைக்கொடுத்தகதையைச்சொல்லித்தீவினைப்பகையைவெல்லுவாம் எ

திருப்பெருந்துறைச்சருக்கம்,
முற்றுப்பெற்றது, ஆ-௪அ-௨,

குதிரையிட்டசருக்கம்.

வேறு,

தந்தையென்பவர்மைந்தர்வாதைதவிர்ப்பதேகடனாதலா
லந்தமின்றியநாதனன்பர்முழங்கல்கண்டபினரியெலாம்
வந்துவெம்பரியாகவும்பரிவீரர்வானவராகவுஞ்
சிந்தைகொண்டனரந்தமாமறிதேடுவார்மதிருடுவார்,

௧௩௫ இ-ள். பிள்ளைகளுக்கு வந்தவருத்தத்தை நீக்குவது பிதாக்களுக்குக் கடனாகையாலே முடிவில்லாத அன்பையுடைய திருவாதவூரர் வியசனப்படுவதைப்பார்த்தபின்பு நரிகளெல்லாம்வந்து வெவ்வியகுதிரைகளாகவும தேவர்கள் அந்தக்குதிரைகளைச் செலுத்துகின்ற ராவுத்தராகவும் மனிதனிடத்திலே நினைத்தார் அந்தமுகாவிஷ்ணுவும் பிரமதேவனும் தேடியும் சந்நிதியைத் தரிப்பவருமாகிய பரமசிவன்-எ

தேசிவாசகவித்துவக்குதிரைப்பெரும்பரியன்பின்
னூர்வாணகைப்பாடைமூன்றுமுடைச்சேவகராயினர்

மாசிலாமணிமன்றாரியவர்சிவாணியாபோலவே
யேசிலாவுருமாறினாமறையின்வுரியின்புறமேவினார்

இ-ள், அழுகில்லாதநரிகள் வந்துவந்துகூடி வெவ்வியகுதிரைகளா னபின்பு குற்றமில்லாததேவர்களுமடியவர்களுக்கு ஏற்றராவுத்தர ராகளா களங்கமில்லாத அழகியசபையினிடத்திலே நடனஞ்செய்கி ன்றகடவுளானவர் ஆரியதேசத்துக்குதிரை வாத்தகர்போல ஏசுதலி ல்லாத தம்முடைய ரூபமாறினவராகி வேதக்குதிரையின் மேலே றிக்கொண்டாரென்றவாறு, உ

சேடுகொண்டுதிரண்டுவீரரிரண்டுபாங்கர்சிறக்கவே
யூடெழுந்துகளிப்பமொங்கவுமும்பர்நாங்கிளரவெய்கவே
கோடுடைமுடிவிம்மநீடியகூடல்சூழ்மதில்வாயிலவா
யாடல்வெம்பரிகொண்டுசென்றனராதியாருமைபாதியார்,

இ-ள், சவுக்குகள்கொண்டு குதிரைச்சேவகர்திரண்டுஇரண்டுபக்க ங்களிலுஞ் சிறப்பாகவர அவ்விடத்திலே எழுகின்ற தூளியானதுபூ மியாகாசமெங்கும் பரக்கவூதுகொம்பு உடுக்கைமுதலிய வாத்தியங் களுஞ்சத்திக்க மதுரைமாநகரத்து நெடியமதில்வாயிலினிடத்தே ஆ டுகின்ற வெவ்வியகுதிரைகளைக் கொண்டுவந்தார் யாவர்க்கு முதல்வ ராகியும் உமாதேவியை யொருபாகத்தி லுடையவராகியும் இருக்கி ன்ற கடவுளென்றவாறு, ௩

அங்குநின்றவர்சென்றுவேம்பலங்கலானைவணங்கியே
யெங்கணுந்துகள்பொங்கிவிம்மவெழுந்துகாகளமார்ப்பவே
திங்கள்வெண்குடைமன்னவாரியதேசவெம்பரியின்றங்
துங்கவன்மதிலின்புறத்துவனிவந்ததெனச்சொல்லுரா

இ-ள், அங்கேநின்றவர்கள்போய் வேப்பமாலையைத்தரித்தபாண்டி யனைவணங்கி எவ்விடத்திலுந் தூசுகளெழும்பி நெருங்கவும் சின்னங் கள்முழங்கவும் சந்திரவட்டக்குடையையுடைய அரசனே ஆரியதேச த்துக்குதிரைகளின்றைக்குநம்முடைய உயர்ந்தவலிமையான மதிற்பு றத்துநெருங்கிவந்தனவென்று சொன்னார்களென்றவாறு. ௪

வாசியின்றிரள்வந்ததென்றலும்வாதவூரனையாமெ
னேசம்வைத்தவர்தம்மைமுன்னரழைத்துக்கேள்கலையாதிக
தாசில்வெம்பரிகாணவம்மினெனநேரியவெழுந்தடையலார்
கூசுதன்படைசூழவேயிறைகோயிலின்புறமெய்தினன்

இ-ள், குதிரைக்கூட்டங்கள் வந்தனவென்று சொன்னமாத்திரத்தி லே திருவாதவூரரிடத்திலே நேசம்வைத்து அவரை வரவழைத்துவ ஸ்திரமுதலிய வெகுமதிகள்கொடுத்துக் குற்றமில்லாத வெவ்வியகு திரைகளைப் பார்க்கவாருமென்றுசொல்லி எழுந்து சத்துருக்களும் அஞ்சத்தக்க தன்னுடைய சேனைகள்சூழப் பாண்டியராசனானவன் அ ரமனையைவிட்டு புறத்துவந்தானென்றவாறு ௫

வேறு,

வண்டுபடியலங்கலொடு நெடுந்தோண்மாறன் - மணிச்சிவிகைமீ தேறிமதுரைமூதூர், கண்டிருகண் களிக்குமவகையாலவாயிற்- கடவுளிடும்பரிவரவுகாண்பானெண்ணிச, செண்டுவெளி தனிற்போந்து பனிநீர்தோய்ந்த செழுங்கழுநீர்மதுமாலைசிறந்துதூங்கு,தண்டரளம ணிப்பந்தர்நிழற்கீழ்ம்பொற-றவிசின்மிசையினிதிருந்தான்றானைசூழ,

இ-ள், வண்டுகள்மொய்க்கின்ற வேப்பமாலையணிந்த நெடியவிசாலம்பொருந்தியபுஜத்தையுடையபாண்டியனானவன்ரத்நசிவிகைமே லேறிக்கொண்டு பழமையாகிய மதுராபுரியிலுள்ளவர்கள் பார்த்துஇ ரண்டுகண்களும் களிக்கும்படிக்குத் திருவாலவாயிலிருக்கிற சொக்கநா யகர்கொண்டுவருகிற குதிரைகளின் வரவினைக்காணநினைத்து வையா ளிவெளிக்குப்போய்ப் பனிநீர்தோய்ந்த செழுமைபொருந்தியசெங் கழுநீர் மாலைசிறந்து தொங்குகின்ற குளிர்ச்சிபொருந்தியமுத்துப்ப ந்தலினிழற்கீழ் அழகியபொன்னிறஞ்செய்த சிம்மாசனத்தின் மேல இனிதாகவிருந்தான் சேனைகள்சூழவென்றவாறு ௬

முத்தமிழின்றிறனறிலும்புலவர்சூழ முதுமறையோர் மங்கலச சொன்முறையிற்கூறக், கைத்திகழும்வளைபுலம்பக்கலன்கண்மின்னக கன்னியர்களிருபாலுங்கவரிவீசக், கொத்தலரும்பன்மலரின் வாசந் தோய்ந்துகுலவுமிளந்தென்றல்வரமாதர்பாட,மெத்துமணிமுத்தமெ னும்பணிகள்பூண்டு- வெண்மதியின்றோற்றம்போல வீற்றிருந்தான்

இ-ள், இயலிசைநாடகமென்னும் முத்தமிழின்றிறத்தை அறிந்தபு லவர்கள்சூழப் பழமையாகிய வேதப்பிராமணர்கள் முறையாகவாழ் த்தெடுக்க - கைகளிலணிந்திருக்கின்ற வளையல்கள்தொனிக்க ஆபர ணங்களொளிசெய்ய மங்கையர்கள் இரண்டுபக்கத்திலுமிருந்து வெண் சாமரங்களவீசப் பலபூங்கொத்துகளின் வாசனையளாவிப் பொருந்தி யஇளந்தென்றலானது வீசமகளிர்கள்பாட மெச்சுகின்ற முத்துமாலி கையைத் தரித்துக்கொண்டு வெண்மையாகிய உதயகாலத்துச்சந்திர னைப்போல வீற்றிருந்தான் பாண்டியராசன்-எ-று, ௭

மங்குல்படிதடம்புரிசைவாதவூரர் - மனங்களிப்பவிழிகளிப்பவ ழிவிலாத, இங்களெனுந்தன்மாபு [illegible] திருநீறுஞ்செ ழுத்துஞ்சிறந்துமலக்- [illegible] முழுவமர்ப்பத்- தங் கியெழுந்துகளுயர்வான்றன்மேற்செல்லத்- துங்கமொடுகடல்பரந்து வருதல்போலத்- [illegible]ன்றோற்றங்கண்டான்

இ-ள், மேகங்கள் தங்குகின்ற [illegible] மதில்சூழ்ந்த திருவாதவூ ரில் அவதரித்த [illegible] மனதுசந்தோஷிக்கக்கண்

கள்களிக்கக் குற்றமற்றதன்னுடைய சந்திரவம்சம் விளங்க என்றைக்கும திருநீறுமபஞ்சாக்ஷரமும சிறக்கநிலைபெறச்சங்குகளும சின்னங்களும பேரிகைகளும சத்திக்கப் பூமியிலேயெழுகின்றதுகள் உயர்ந்த ஆகாசத்தினமேறபரவப பெரியகடலானது பரவிவருகின்றதுபோலநெருங்கிவருகின்ற குதிரைக்கூட்டங்களின் தோற்றத்தைக் கண்டான்பாண்டியராசனென்றவாறு, ௮

வேறு,

அங்கிளாமதுரையமபதியிலாவணிக்
திங்களின்மூலநாளசெறிதினத்தினி
லெங்கணுநீறுமஞ்செழுத்துமோங்கிடச
சங்கரனிடுமபரிசமுகமலந்தவால்

இ-ள், அழகுமிகுந்த மதுரைநகரத்தில் ஆவணிமாசத்தில் மூலநாளில எவவிடத்திலும திருநீறுமபஞ்சாக்ஷரமும விளங்குமபடிபரமசிவனாலே இடப்பட்ட குதிரைக்கூட்டங்கள வந்தனவென்றவாறு,

தூத்திரணமணிசெழுசோதிமாமுடிப்
பார்த்திவன்விழிநலமபருகவீதியிற
கூத்தினாசெயலெனக்குலாவுவாமபரிச
சாத்தவாரருமபெருந்தன்மைகூறுவாம்

இ-ள், பரிசுத்தமாகிய திரட்சிபொருந்திய ரத்தினங்கள் பதித்துப்பிரகாசிக்கின்ற பெரியகிரீடந்தரித்த அரசனுடைய கண்கள் விருந்துண்ணவீதியினிடத்திலே கூத்தாடிகள்செயலைப்போலவிளங்கித்தாவுகின்றகுதிரையைநடத்தி ராவுத்தாகள வருகின்றபெரியதன்மையைசசொல்லுவாமென்றவாறு, ௰

கட்டியசுரிகையாகவின்கொளவாளினர்
பொட்டணிநுதலினாபொலனசெயமேனியர்
பட்டுடைமருங்கினாபவளநீளவடம்
விட்டொளிவிளங்கியவியன்கொண்மார்பினர்

இ-ள், அரையிலேகட்டிய உடைவாளினையுடையவரும் அழகிய கத்தியையுடையவரும் சந்தனப்பொட்டணிந்த நெற்றியை யுடையவரும்பொன்னிறமாகிய மேனியையுடையவரும பட்டுவஸ்திரத்தையணிந்த அரையையுடையவரும் விட்டுவிட்டு ஒளிசெய்கின்ற பவளமாலையையணிந்த விசாலமாகிய மார்பையுடையவரு மென்றவாறு,

புன்மயிர்ப்பியர்புலியின்றோலினா
பின்மலாப்யாசிலைபிணைக்கருஞ்சியர்
வன்மொழிக்குரலினர்வயங்குதூணிய
வின்மலிகரத்தினர்வெறித்தபார்வையர்

இ-ள், இலேசாயிருக்கின்ற மயிர்ப்பிலியையுடையவரும் புலித்தோலையுடையவரும்பின்புறத்தில்தாழ்கின்றகுடுமியிலேமலருமபச்சிலையு

ம்சோதநூக்கட்டிய மாலையையணிந்தவரும் உரத்தசொல்லையுடைய குரலினரும்பிரகாசிக்கின்ற அபரஞ்சத்தானியையுடையவரும்விலலே ந்தியகைகளையுடையவரும் வெற்றிச்சபாவையுடையவருமென்ற

பொன்னியல்குழைமுடினாபொலன்கொண்மாலையா
பன்னிறச்சாத்தினாடணைத்ததோளினா
சென்னியிற்கதிர்மணியிலங்குசேடனை
பின்னிவிட்டனபொனபினைக்குஞ்சியா

இ-ள், பொன்னாற்செய்த குண்டலத்தையுடையவரும்பொன்னரிமாலையையுடையவரும் பலநிறத்தையுடைய நலச்சாந்தணிந்தவரும் புருசுக்கபுயத்தையுடையவரும் சிரோரத்தின்விளங்குகின்ற ஆதிசேடனைப்பின்னிவிட்டதுபோலப் பின்னியகுஞ்சியையுடையவருமென்றவா

தாவறியசுரிகையுந்தயங்குவேல்களும்
வாவறியசிலைகளுநகனையுமவாளுமாய
ஞாங்கரிலிவாவராலாப்பட்டோனிறா
மேகஙிபரதிமதிசெஞ்ஞலியண்ணலார்

இ-ள், காந்தியபெற்ற உடைவாள்களும் பிரகாசிக்கின்ற வேலாயுதங்களும் வளைந்த விற்படைகளும் அம்புங்கதிகளும்உடையவருமாய் யபங்களிலே இவர்களவராகிவிலேவந்தார் அவர் ஒன்றானமேதைகட்பெற்ற கங்காநதியையும் மூன்றாம்பிறைச்சந்திரனையும் முடிக்கசிரத்தையுடைய பரமசிவமென்றவாறு, ௰௪

வேறு,

நச்சுரகவுச்சிவணிகணணிமொருவன்மாக்
கச்சிடைவிசித்துளகவின்கொளுடைவாளும்
பச்சைமுழுநீலமொடுபன்னிரவடஞ்சோ
செச்சைநிறமன்னிபதிரண்டவிருதோளும்

இ-ள், நஞ்சையுடைய சர்ப்பத்தினது சிரோரத்நம் பதித்துவிளங்கியநிறத்தையுடைய கச்சையிடையிலேகட்டி அதனிடத்திலே சொருகிய அழகைக்கொண்ட உடைவாளும் பச்சைநீலமுதலிய பலநிறத்தையுடைய ரத்நமாலைகளணிந்த சிவந்தநிறத்தையுடைய திரட்சிபொருந்திய இரண்டுபுயங்களுமென்றவாறு, ௰௫

ஒப்பரியசட்டையுமுடிக்கிலகுபட்டு
தொப்பியுமுகத்திடைதுலக்குமுளராகித்
செப்பருவலக்குலவுசெண்டொருகைகொண்டே
யிப்படியிலிப்படிவமெய்யவருளரென்ன

இ-ள், உவமைசொல்லுதற்கரிதாகிய அங்கியும் உடுத்துவிளங்கும் பட்டினையுடையுந் தலைச்சாத்துமுடையவராயுந்திருமுகத்திற்பிரகாசமு

ள்ளவராயும் சொல்லுதற்கரிய தன்மையமைந்த குதிரைச்சேவகனை ஒருகையிலே கொண்டு இந்தப்பூமியிலே இந்தவடிவமுள்ளவர்கள் யாரிருக்கிறார்களென்று சொல்லியென்றவாறு ௰௬

கட்டிப்படுமிதிமணிக்கனகமணிமுனி
யொட்டவிர்பசுங்கமணியின்னிரைப்புலமைப
ஒலதரங்கத்தாபணிக்கவரியெடுப்ப
மெட்டளிக்கிளைக்குமொருவெண்பரியிலேறி

இ-ள், அங்கவடியிற்கட்டிய மணிமாலைகளும் கச்சையிற் கட்டியமணிமாலைகளும் முன்புறத்தும் பின்புறத்தும் இரண்டுபக்கங்களிலுங்கட்டிய மணிமாலைகளும் இனமிசையாய ஆரவாரிக்கப்பட்டிருக்கச் சமையப்பட்ட கல்லினை நெருங்கிய சாமரைகளோடும் விட்டுவிட்டு ஒளி விளங்கப்பெற்ற வெள்ளைக்குதிரையின் மேலேறியென்றவாறு, ௰௭

வீசுகவரித்திரணிமிடைந்தொளிரமீதே
கேசொடுகவித்தவெண்செழுங்குடைவயங்கப்
பூசலபுரிவெம்பரிபொருந்துபடையூடே
யாசில்குலவாரிபரிமன்னனனையவந்தார்

இ-ள், வீசுகின்ற சாமரைக்கூட்டங்கள் நெருங்கிப் பிரகாசிக்கவும் மேலேகவித்திருக்கின்ற செழுமைபொருந்திய குடைகளகாங்கியோடு பிரகாசிக்கவும் யுத்தஞ்செய்கின்ற வெவ்வியகுதிரைச் சேனையினிடையிலே குற்றமற்ற ஆரியதேசத்தார்க்கு அரசனைப்போல வந்தார் குதிரைச்சேவகரென்றவாறு, ௰௮

மன்னவனும்மிங்கிவர்வருந்தகைமைகண்டே
தன்னுளமகிழ்ந்திருக்கட்கணிமையாமல்
வன்னமெனுமூர்த்திமனமோலரனைப்பல்லா
லின்னவெழிலியாவருளரென்றதிசயித்தான் ௰௯

இ-ள், பாண்டியனும் இந்தக்குதிரைச்சேவகர் வருகின்றபெருமையைப்பார்த்துத் தனமனமகிழ்ந்து விசாலம்பொருந்திய இரண்டுகண்களும் இமையால் அன்னவாகனத்தையுடைய பிரமதேவன்விஷ்ணு உருத்திரன் இவர்களிலொருவரல்லாமல் இந்த அழகோடுகூடிய வர் யாவருள்ளாரென்று அதிசயித்தானென்றவாறு ௨௰

பண்ணியதவத்துளபயன்பரியின்மீதே
நண்ணியதெனத்தமினயந்தனர்வியந்தா
ரெண்ணியமுடித்தனரெனக்கருதிநின்றா
புண்ணியமறைத்தமிழ்புகன்றதிருவாயார

இ-ள், முன்னேநான்செய்த தவத்தினாலே உண்டாகிய பிரயோசனமேகுதிரையின்மேலேவந்ததென்று தமக்குள்ளே மகிழ்ச்சிகொண்

டு அதிசயத்தையுடையவராய என்னெண்ணத்தை முடித்தாரென்று நினைத்தானென்று புண்ணியவடிவமாகிய வேதத்தைத்தமிழ் செய்தமா ணிக்கவாசகரென்றவாறு, ௨௧

தூயகூர்வேல்பலசுழற்றியெதிர்செல்வார
வாயொளிவிளைப்பரிக்கலவாளினைவிதிர்ப்பார
நேயமொழிக்காமிலவளிக்குறுசமர்செய்வார
ராயினாரன்புடையிலானபரிவீரர

இ-ள், தூய்மையான ஒளியுள்ள அநேகவேலாயுதங்களை சுழற்றிக் கொண்டெதிரேபோவார்கள் வாயினாலே ஆரவாரிப்பார்கள் பசையைக்கொ ண்டு சத்திக்கை அசைப்பார்கள் நேசமுடனே தங்களுக்குள்ளே அணி வகுத்துநின்று யுத்தஞ்செய்வார்கள் இப்படிப்பட்ட விநோதமுள்ளவ ர்களானார்கள் பரமசிவனோடுகூடவந்த குதிரைவீரர்களென்றவாறு.

நீறுசிவநீதிநிலைநிற்கவுலகாளு
மாறனுமகிழ்ந்துதவமன்னவனையழைத்தே
கூறரியவாரியநூலேசவொருவீதி
யேறுமவனைச்சென்றனையுமென்றினிதுசொன்னான்

இ-ள் திருநீறுமசைவநெறியுமநிலைநிற்க உலகத்தையாளுகிறபா ண்டியன்மகிழ்ந்து தவராசராகிய திருவாதவூரரையழைத்துச்சொல லுதற்கரிய ஆரியகுலஅதிபனை ஒருவீதியிலே இந்தக்குதிரைகளை ந டத்துமபடிக்குப் போய்ச்சொல்லுமென்று இனிதாகச் சொன்னானெ ன்றவாறு, ௨௨

என்னிவன்மொழிந்ததனையெண்ணத்தமியேனுக்கா
மன்னியவருந்தவருமவாண்முகமலர்ந்தே
கன்னலைகலந்தகொளகனியைக்குறுகிநெஞ்சான்
முன்னுறவணங்கிவிழிமுத்துதிரநின்று

இ-ள் என்னவார்த்தைஇவன்சொன்னானென்று தமக்குள்ளேயிரக் கமுற்று நிலைபெற்ற அறிவுடைமையுடைய மாணிக்கவாசகரும ஒளி பொருந்தியமுகத்திலேமலர்ச்சியுள்ளவராய்க் கருமபையும் நறசுவை கொண்ட கனியையும்ஒத்தபரமசிவனுக்குச் சமீபத்தேபோயமனத்தி னாலே முன்னேவணங்கிக் கண்களிலேயிருந்து முத்துகள்போலநீரு திரும்படி நின்றானென்றவாறு, ௨௩

மன்றன்மலரோனுநெடுமாலுமுருவேறு
யன்றுமுதலின்றுமறியாதவனைநின்றய
வென்றிவிடையன்றியுயர்வெம்பரியின்மீதே
யின்றுனைவணங்கமுனமெத்தவுமயனேறன்

இ-ள், வாசனைபொருந்திய தாமரைமலரிலிருக்கும் பிரமனுமமஹா விஷ்ணுவுமஉருவமாறி அன்றுமுதல் இன்றைவரைக்கும் அறியக் கரியவனாய்நின்றவனை வெற்றியையுடைய இடபவாகனத்திலல்லாமல

உபாசியுள்ள வெவ்விய குதிரைவாகனத்தின்மேலே இறைக்குஉ னைக்கண்டு வணங்க முன்னை எளனகவருஞ்செய்தேனென்றவாறு,

வந்தபடியிவ்வுருவனைக்குடித்தவல்லா
லந்தவடிவாயிலுனையாரறியவல்லார்
சிந்தவனைக்கண்டியவாக்கெட்டிமையயென்றே
சிந்தைதகனிலனைப்பொடிக்கிளிந்தலுகெல்லாம்,

இ-ள், தேவரீரெழுந்தருளிவந்த இவ்வடிவைக்கண்டு வணங்கப் பெற்ற இதுவல்லாமல் மீனுவர்க்குங்கிட்டாத அந்தத்திருவடிவா யிருந்தாயானால் உன்னையாரறியவல்லவர் இந்தவடிவைக்கண்டல்ல வோ பெரியோர்கள் அடியார்க்கு எளியவனாயிருக்கிறாரென்னுமனை தில அன்பினுடனே தெளிந்து சொல்லுகிறார்கள் எ-று உ௫

என்றுமுகமனைபலவியம்பியருளாலே
தென்றிபுனைமீனவன்விளம்புமொழிசொன்னோர்
கொன்றைமுடியாருமிசைந்துகொடைமால
னின்றிபெறக்காணுமவண்ணறைபரியுகைத்தார்,

இ-ள், இப்படியென்று அநேக உபசாரவார்த்தைகளை சொல்லியரு ளினாலே வெற்றியைத்தரித்த பாண்டியராசன் சொன்னசொல்லை விண்ணப்பஞ்செய்தார், கொன்றைமாலைதரித்த முடியையுடைய பரமசிவனும் அதற்கிசைந்து ராசனையுடைய பாண்டியராசன் கண் குளிரும்படி நல்லகுதிரையை நடத்தினாரென்றவாறு, உ௬

மன்னவரியந்தமுடன் வட்டநெடுவீதி
யெனுமிவ்வுளிந்தொழிலிற்பரியாவுமினிமேதி
யுறுமனவேகமெனவோடுமுயர்பாயமா
நன்னடையிமபடி நடாத்தியெதிர்வந்தார்,

இ-ள், நிலைபெற்ற ராசபந்தம விருத்தம தெருவீதியென்கின்ற குதிரையினுடைய நடைபேதமெல்லாம் இனிதாகநடத்திக்காட்டி நினைக்கின்ற மனோவேகம்போல வோடுகின்ற வுயர்ந்தகுதிரைகளானவை நல்லநடையின்படி நடத்திக்கொண்டு எதிரேவந்தார்-எ-று, உ௭

வெம்பரியினண்ணலைவியந்துதமிழ்மாறன்
கம்பமுடியெப்பகவொருங்கவிரல்சுழற்று
வம்பொன்விலையில்லதொருந்தலைபரித்தா
னெம்பரமர்சென்னியிசையேறநகைசெய்தார்,

இ-ள், வெவ்வியகுதிரைக்கு எசமானைப்பார்த்து அதிசயப்பட்டுத் தமிழைவளர்த்த பாண்டியன் சிரக்கம்பஞ்செய்து ஒருங்கைவிரலைச்சுழற்றி அழகியபொன் இவ்வளவென்று விலையில்லாதது யரியவஸ்திர மொன்றுகொடுத்தான் எம்முடையகடவுளானவர் சவுக்கின்மேல ஏறுகைகொண்டு புன்னகைசெய்தாரென்றவாறு, உ௮

வேறு,

ஏற்றவெண்கலையனேசமெய்த்திருத்தொண்டருவகைசென்று
காற்றெனவிரைவினையதிகக்கடித்தலைக்கரத்தில்வாங்கிப்
போற்றிலன்முடியினைமீதுபுனைந்திலனென்றுமாற
னீற்றணிமறையடியின்மேல்நெருப்பிடைவெகுட்சிகொண்டான்,

இ-ள், அப்படி ஏற்றுக்கொண்ட பிரகாசம்பொருந்திய வஸ்திரத்தை நேசத்தையுடையவனுய்க் காற்றைப்போலச் சீக்கிரத்தில்வந்து விரைவாகத் தன்கையில்வாங்கி வணங்கிச் சிரசிலே தரித்துக்கொள்ளவில்லையென்று பாண்டியராசன் திருநீற்றையணிந்த கடவுளினுடைய மறையடியின்மேலே கோபங்கொண்டானென்றவாறு, ௨௯

வெளிப்படவரியமேனிவிண்ணவர்கண்ணுநெஞ்சுங்
களிப்புறவருதல்கண்டுங்காண்டிலன்கண்ணினாட
னொளித்துலசெய்குநர்போனுறுப்பவமொழித்துஞான
மளித்திடினறியவாரவன்றிறந்தெரியவல்லார்,

இ-ள், வெளிப்படக்காணுதற்கரிய அருமைத்திருமேனியையுடைய பரமசிவனுடைய பாதத்தவர்கள் கண்ணும் மனமும் சந்தோஷமடையும்படி வருகிறதைப் பார்த்தும் பாண்டியன் காணவில்லை ஒளித்துக்கொண்டு உலகெங்கணும் நிறைகின்ற கடவுள் மிகுந்த பிறவியையொழித்து அறிவுகொடுத்தாலல்லாமல் எவர்கள் அவருடைய தன்மையைத் தெரியவல்லவர்களென்றவாறு, ௩௰

எண்டிசைமன்னரன்பாலீந்தமெல்கலைகளியாவுஞ்
செண்டிடைக்கோடலன்றோதேயநல்வழக்கமென்றே
வண்டமிழ்வாதவூரர்மாமதுரேசனென்சிற
கொண்டுளமுனிவுதீரக்குறைந்துமுன்னின்றுசொன்னார்.

இ-ள், எட்டுத்திசைகளிலும் இருக்கின்ற அரசர்கள் அன்பால் தமக்குக்கொடுக்கப்பட்ட வஸ்திரங்களையெல்லாம் சவுக்கிலே வாங்கிக்கொள்வது அரசர்தேசவழக்கமென்று வளத்தையுடைய தமிழ்பாடுகின்ற திருவாதவூரரானவர் பாண்டியராசன் முன்னேநின்று அவன்மனத்திலே கொண்டிருந்த கோபம் சாந்தியாகும்படி தாழ்ந்து சொன்னாரென்றவாறு, ௩௧

கலத்தக்குமிந்தநீர்மைகேட்டபினயந்துமன்னன்
கலக்கமிலிவுளிநன்னூல்கற்றவர்தமைநோக்கி
யிலக்கணவிதியாலுள்ளவிருமபரியிழிவுமேன்மை
துலக்குடனுமதிநுடியெம்முடன்சொல்லுமென்றான்,

இ-ள், நன்மைபொருந்திய இந்தவழக்கத்தைக்கேட்டபின்பு அன்புகொண்டு கலக்கமில்லாத அசுவலக்ஷணசாஸ்திரங்கற்றறிந்தவரைப் பார்த்து லக்ஷணவிதிப்பிரகாரமிருக்கிறபெரிய குதிரையினுடைய இழிவும் உயர்வும் பிரகாசமாக உங்களுக்குள்ளே சோதித்து நம்மோடேசொல்லுமென்று சொன்னான் பாண்டியராசன்-எ-று, ௩௨

சொற்றிகழ் நாகநூலின்றுணிபொருளுணர்ந்துளோரை
கொற்றவெம்பரிக்குள்ள குற்றமுங்குணமுநாடிப்
பொற்றடங்கிரியின்மீதும் பொருகயல்பொறித்துமீண்ட
வெற்றிகொண்மன்னர்கோமுனிவ்வுரைவிளம்பலுற்றான்

இ-ள், சொல்லின்ற பிரகாசிக்கப்பட்ட அசுவலட்சணசாஸ்திரமுடைய
நிச்சயமாகிய பொருளைத்தெரிந்தவர்கள் வெற்றிபொருந்திய விரும்ப
த்தக்க குதிரைகளுக்குள்ள குற்றத்தையும் குணத்தையும் பார்த்து
மகமேருமலையின்மேல் கயலுடைய மீனக்கொடியையெழுதிவைத்து
த்திரும்பிய வெற்றியைப்பெற்ற அரசாகரசனாகிய பாண்டியராச
னமுன்பாக இந்தப்படி சொன்னானென்றவாறு ௬௩

வேறு,

தாவினைச்சந்திரசுழியாமணைதாவக்கமு- நந்தனையடியிற் சுழியா
முடலின்பக்க மேவுசுழி கொள்வதமாகாவாசகமு- மேன்மைதிகழ்மு
ன்வளையச்சுழி நாலுங், பாவுசெழுமைகேசரியடியிற்சோர்ந்த- படிவி
லகொம்புசுழிகேசவாதகமாகும், பூவமரும்பச்சைநிறப்பட்ட டையே
யாகப்-புகன்றசுழியிச்சுழிகள் புணராவாகி

இ-ள். துணைப்பக்கத்திலிருக்கின்ற சந்திரசுழி தண்டாவைக்கமென்று
நந்தனையடியிலிருக்கின்ற சுழிகளும் உடலிலொருபக்கத்திலிருக்கி
ன்ற சுழியாகியகொள்வதமும்-காகாவாசகமும் மேன்மையாக விளங்கி
யமுன்வளையச்சுழியும் பரவியசெழுமையுள்ள கேசரிசுழியுமகாலி
லிருக்கின்ற பிரயோசனமில்லாத கொடியசுழியாகிய கேசவாதகமு
மபொலிவேமேகூடிய பச்சைநிறப்பட்டடையாகச்சொல்லப்பட
டசுழியும் ஆகியஇந்தச்சுழிகள் பொருந்ாதனவாமென்றவாறு, ௬௪

கொம்புகளைந்திருக்களைந்துசபாதவ கொள்ளிக்கால் வெளிறி
க்கண்டனிருண்டு, வெம்புசழறசுடலைமுகப பாலோகண்ட மண்டப
பாழ்விலகி அலவணடமாதல,செம்பொறியாமகின் சித்திரங்கணமூ
ன்று சிறந்தினிய டடிறபாலறுபாவெனறே யமபுவியோர்மொழிந்த
பழுதினையுமின்றி யடிநாவிறகுரமீரடையாகாவாகி,

இ-ள கொம்புபோலிருக்கு நீண்டகாதும் முறுக்கியகாதும்()கறு
த்தகாலொன்றும் () வெளுத்தகாலொன்றும் வெளுத்தகண்ணும் தீனி
குன்றுமையும் வெம்புகின்ற தீமையுடையயானருகரிலைப்போலு
நீலகண்டமுமபீஜமில்லாமையுமறச்சுருங்கியிருக்கும்பெரியபீஜமு

() கருசபாதமாவது மூன்றுகாலவெளுத்து ஒருகாலகறுத்தது.
() கொள்ளிக்காலாவது மூன்றுகால் கறுத்து ஒருகால்வெளுத்தது

ம்செவ்வையாகிய பதுமையும அக்கினியும் சித்திரமும்போ லசைவி லாமலும் முகமவால்காற்காலகளிவைகளிற சுழியிலலாமையுமென பபூலோகத்தாரசொலலிய குறறங்களிலலாமல் கழுத்தடியில்மாகக் ணைடயிரட்டையாயிராம லெனறவாறு, ௩௫

சிரமதனிலிரண்டுசெழுநதுளைபபினனகு,சிறநதவாநதனிலிரண டுதகவமேலொனறு-குரவயிசைநின்றசுழியொனறினேறு - குலவிய வினாநதுசுழிகுறையாதாகி-நரிவெருக்குரூவகாசமலஙகயோரி-ஞாளி செழுஙகீழலெனுவகுரலினறுகி, விருபெருநதினாவேவலையகுலச கைம-விடைமுழவமபோனமுழக்க மிகவுணடாகி

இ-ள், சிரசிலே இரணடுசுழியும செழுமையுள்ள நாபிலேநான்கு சுழியும சிறநதமாாபிலே யிரணடுசுழியும நெறறியிலே ஒருசுழியுமஉ தடடிலே ஒருசுழியும ஆகியசுழிகள பததுமகுறையாமல நரிபூனைகரி யநாககைபோய ஓரி நாயசெழுமையுள்ளபனறி இவைகளுடைய சதத மிலலாதவையாயப பெரிய ஆலையையுடையாடலமேகமசஙகம இடப மபேரிகை இவைகளைபபோல சததமுடையவாயென்றவாறு, ௩௬

உருததிகலசெயபுலியுளியகழுதைசெநநா யொணபூனைநரிபி னுடனகரியகாகந தரிததவெழுறபுகைநிறமுமபுனையாவாகித தருககிம ருநசெனுஙகவனததன்மையெயதி- வீரிததகதிரவெணடரளநதிஙகணீ ல-மென்கமலததாதுசெழுஙகனககாயா, வரத்தமல்நல்லபசுஙகிளிளை போலவமைநதவொளிதயஙகியவஙகததவாகி

இ-ள், கோபிததுப் பகைக்கின்ற புலிகரடிகழுதை செநநாய ஒளி யையுடைய பூனைநரிதரிக்கபபெறற கரியகாகமதீபுகை இவைகளினு டையநிறததைப பொருநதாதவைகளாய இறுமாப்புடையனவாயவா யுவென்னும வேகத்தோடுகூடிப்பிரகாசிததகிரணஙகளையுடையவெ ள்ளியமுத்துககள சநதிரன்நீலரத்தினம மெலலிய தாமரையினுடை யமகரநதம செழுமைபொருநதியபொன் காயாசெவவாததமலா நல்ல பசசைககிளி ஆகிய இவைகளைபோல அமைநதஉருவத்தை யுடைய வாகியென்றவாறு. ௩௭

வெற்றியகனறுயாகுசுவமுடைத்தாய்வெண்மை - நிறைந்துதமி லொத்திலகுமெயிற்றவாகி-தறைநறுஙகுமிகச்சிறநதுநாவுஞ- சுக விளநதவிரபோலுமருணநேதாயநகேதுயுதறவிசண்டிமைமயிருநதொ கையுணடாகி யுக்கிரமாமவிழிபபாரவையுடையவாகி முற்றுமெயிறற ைசயினறியுளவனைக்கு [illegible] முகததவாகி

இ-ள், வெற்றிபாக்குடபாந்த [illegible] யுடையவாய்வெண்ணி [illegible] பிரகாசிக்கப்பெற்றபற்களையு

டையவாய் நிறைந்த நல்லவாசனைசிறந்தநாக்கும் பூவினங்களிற்
போலும் செம்மைநிறம்பொருந்தி இரண்டுமையமயிருந் திரட்சியுடை-
யவாய உக்கிரமாகிய கண்பார்வையுடையவாய தேகத்தில அதிகமா
மிசையில்லாமல் உரோமங்களைந்து முக்கோணமாய்ப்பிரகாசிக்கின்றமு
